உ

கடவுள் துணை.

# மனுநீதிகாதல்.

இஃது,

ஆறைமாநகர்

சாமிநாதபிள்ளையென்னும்,

தெய்வச்சிலையாபிள்ளையவர்கள்

இயற்றியதை

விருதுபட்டி,

ஸ்ரீமான் - இராமலிங்கக்குருக்கள்

அவர்களால்

பிழையறப் பரிசோதித்து,

ஆ - எதிராஜமுதலியாரது

சென்னை - ரூளை:

பிரின்ஸ் ஆவ் வேலீஸ் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

உ

கடவுள் துணை

# பிரசித்தப்பத்திரிகை

Dr. U. V. S. IYER LIBRARY
MADRAS-90

மநுநீதிக்காதலாகிய இந்நூலை அநேகர்கள் அச்சிட்டதில் எழுத்துஞ் சொல்லு மிகுந்துங் குறைந்தும் பிறழ்ந்துந் திரிந்தும் வேறுபட்டிருந்ததால், அப்பிழைகளை நீக்கி சுத்தபாடமாக வழங்கும் பொருட்டு மதுரை புதுமண்டபம், புஸ்தகஷாப் ம-ா-ா-ஸ்ரீ, எஸ் முத்தைய பிள்ளையவர்களும், ம-ா-ா-ஸ்ரீ, இ-ராம-குருசாமிக்கோனாரவர்களும் கேட்டுக்கொண்ட பிரகாரம் சீர்திருத்தி அச்சிடலாயிற்று இப்புத்தகமும் இதனடியிற்கண்ட புத்தகங்களும், மதுரைபுதுமண்டபம் புஸ்தகஷாப் ம-ா-ா-ஸ்ரீ, இ-ரா-ம குருசாமிக்கோனாரவர்களிடத்திலும், ம-ா-ா-ஸ்ரீ எஸ். முத்தைய பிள்ளையவர்களிடத்திலும் எம்மிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| மநுநீதிக்காதல் ... ... ... | 0 | 8 | 0 |
| மாகபுராணம் ... ... ... | 1 | 0 | 0 |
| அன்னதானமகத்துவபுராணம் ... | 0 | 12 | 0 |
| மகாராணிஅம்மானை ... ... | 0 | 8 | 0 |
| பட்டினத்தார் அம்மானை ... ... | 0 | 4 | 0 |
| நளச்சக்கிரவர்த்தி அம்மானை ... | 0 | 4 | 0 |
| ருக்குமாங்கதன் அம்மானை ... ... | 0 | 4 | 0 |
| விருதைவண்ணப்பதிற்றுப்பத்தந்தாதி | 0 | 2 | 0 |
| செல்வக்குழந்தைகள் திருத்தாலாட்டு | 0 | 0 | 6 |
| மதுரைமீனாட்சியம்மன் கப்பற்சிந்து ... | 0 | 0 | 3 |
| திருப்பரங்குன்றுதிபமாலை ... ... | 0 | 0 | 6 |
| கந்தபுரக்கணேசர்துதிக்கை விநாயகமாலை | 0 | 0 | 3 |

இன்னும் வேண்டும் புஸ்தகங்களுக் கெழுதினால் வி-பி மூலமாய் அனுப்பப்படும்.

இராமலிங்கக்குருக்கள்,

விருதுபட்டி.

# விஷய அகராதி.


| பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| அவையடக்கம் | ௧ | நல்லறிவுகயவர் | ௪௭ |
| அரசரொழுக்கம் | ௯ | நற்சகோதரர்துற்சகோதரர் | ௧௧ |
| அரசரிற்புகழ்பெற்றோர் | ௧௧ | நற்பிறப்புத்தமர் | ௯௯ |
| அளவிடாமை | ௯௫ | நிறை | ௪௨ |
| அரிது | ௬௨ | நூற்பயன் | ௨ |
| அன்புற்றமகளிர் | ௭௯ | நோயணுகல் | ௪௪ |
| ஆக்கியோன்பெயர் | ௨ | பகை | ௯௧ |
| ஆகாமை | ௫௨ | பகைவெறுப்பு | ௯௨ |
| இகழ்ச்சியீனம் | ௫௮ | பண்டிதாள்பரிட்சை | ௫௰ |
| இல்லறம் | ௮ | பலனில்லாமை | ௫௪ |
| இலட்சுமியிருப்பிடம் | ௯௦ | பிடியானைச்சாதி | ௭௬ |
| இறந்துமிறவாதவர் | ௪௫ | பிதா | ௨௮ |
| இருந்துமிறந்தவர் | ௪௫ | புருஷன்வாக்கிய பரிபாலனஞ்செய்தவர் | ௬௬ |
| இனிது | ௬௨ | புலலறிவு | ௪௯ |
| ஈகை | ௪௯ | புல்லறிவுகயவர் | ௪௮ |
| ஈகைக்கிடையூறு | ௪௩ | பெட்டைக்குதிரைச்சாதி | ௭௬ |
| உதவி | ௯௬ | பெணகளால்பங்கமடைந்தவர் | ௬௬ |
| உதவாமை | ௯௬ | பெண்களுக்குச் சுவாதீனமில்லையெனல் | ௬௬ |
| ஒப்பனையானவை | ௭௧ | பெண்கள்வரலாறு | ௬௭ |
| கர்மகாண்டம் | ௬௭ | பெண்களுடையதத்து வம்பத்துக்கும் விபரம் | ௭௪ |
| காலம் | ௨௭ | பெரிது | ௬௨ |
| கூடாவொழுக்கமளிர் | ௭௩ | பொருளின்பலன் | ௪௬ |
| கேடு | ௬௰ | பொருள்வகை | ௪௬ |
| கொடிது | ௬௨ | மனவூக்கம் | ௯௪ |
| கொடுநரகடைவோர் | ௰௫ | மாரிச்சிறப்பு | ௮ |
| கொடுமையாலழிந்தவா | ௬௪ | முக்கியமுள்ளது | ௬௯ |
| கொல்லாமை | ௰௪ | மூதேவியிருப்பிடம் | ௯௦ |
| சரஸ்வதிதுதி | ௧ | மூன்றுயுகத்திலும் யமனுறேறோ | ௬௬ |
| சரீரசுகம | ௪௯ | மைந்தர் | ௨௯ |
| சிநேகம் | ௪௩ | யோகம் | ௯௪ |
| சுகபோசனம் | ௧௧ | லோபத்தனம் | ௫௭ |
| சுத்தம் | ௫௧ | வர்த்தகரொழுக்கம் | ௪ |
| செல்லாவிடம் | ௯௯ | வரம்பிலாமை | ௪௯ |
| செல்வநிலையாமை | ௯ | வாழி | ௭௬ |
| சேரிடம் | ௯௯ | விநாயகர்துதி | ௧ |
| சோசியம் | ௨௯ | வெளிவிடக்கூடாதவை | ௫௰ |
| தருமநீதி | ௪ | வேசையாகள்வரலாறு | ௬௫ |
| தாசியரகம் | ௬௫ | வேதியரொழுக்கம் | ௯ |
| துஷ்டநிக்கிரம் | ௰௭ | வேளாளரொழுக்கம் | ௪ |
| துற்பிறப்புதுற்சனர் | ௪௧ | | |
| தெய்வச்செயல் | ௯ | | |
| நல்லறிவு | ௰௨ | | |
| நல்லறிவு | ௰௭ | | |


விஷயஅகராதி முற்றிற்று.

23480
(8526)

உ

கடவுள் துணை.

# மனுநீதிகாதல்.

Dr. U. V. S. IYER LIBRARY ★ MADRAS-90 ★

## காப்புகள்.

### விநாயகர்துதி

வெண்பா.

யானைமுகவானையுமை யாளரனார்பாலகனே
ஞானமுதலானகுரு நாதனே-மானிலத்தில்
ஆதிமனுநூலினுரை யாவதனை யானுமொரு
காதலெனவோதவருள் காண்.

### இதுவுமது.

புத்திவருமெய்ஞ்ஞானப் போதமுறும்புண்ணியமும்
சத்தியமாமேன்மைமிகத் தங்குமே-நித்தநித்தம்
சாதினையதாய்ப்புவியிற் சாமிநாதன்சொல்மனு
நீதிநூல்பார்த்தால் நிதம்.

### சரஸ்வதிதுதி.

பூமேவுலோகம் புகழுமனுநீதிநூல்
பாமேவுசெஞ்சொற் பயனறிந்தேயான்பாட. (க)

மூலகணேசன் முளரிப்பதம்போற்றி
வாலைசரஸ்வதியென் வாக்கிலிருந்தருள்வீர். (உ)

### அவையடக்கம்.

வேதமுறைசொன்னவிந்த மேதினியிலுள்ளமனு
நீதிமுறைதன்னை நிகழ்த்தினார்முன்னோர்கள். (ங)

வள்ளுவனாரௌவைமுதல் வழுத்துமனுநீதி
தெள்ளுதமிழ்க்கடலிற் சிறகப்பைமோந்தாற்போல். (ச)

மாலைசதக மனுநீதிசாரமென்றும்
ஞாலமதிற்கவிஞர் நவின்றார்பலநூலால். (ரு)

பண்ணும்பலநூலிற் பாடும்பொருளதனை
எண்ணியெந்தன்சிந்தைக் கிசைந்தேயறிந்தமட்டும். (சு)

ஞாலமதிலுதிரும் நன்மணியெலாம்பொருக்கி
மாலையாய்க்கோர்த்த வகையாகவிந்நூலை. (எ)

காதலுட்னியானுமொரு காதலெனப்பாடிவைத்தேன்
மாதவத்தோர்முத்தமிழின் வல்லோர்மனமகிழ. (அ)

ஆக்கியோன்பெயர்.

மாவளஞ்சேர்செம்பி வளநாடன்மிக்கான
பூவைசியனென்னும் புகழ்படைத்தகங்கைகுலன். (கூ)

ஆதிவைய்யசங்குமுக மாறைநகரான்ராம
நாதவேள்பாலன் நளினகவிரஞ்சிதவான். (கo)

சீலமிகுமமிர்தச் செந்தமிழின்பாவினஞ்சொல்
மாலோனருள்சிறந்த மாபாரதப்பிரசங்கன். (கக)

கையுற்றநெல்லிக் கனிபோலறியவென்று
தெய்வச்சிலையானுரைத்த தெள்ளமிர்தமாமிதுவே (கஉ)

உற்றதொருகாவேரி யொன்றாய்ப்பெருகிவரச்
சிற்றாறல்நீருமதிற் சேர்ந்தங்கேயோடுதல்போல். (கங)

சந்திரனுடம்பரத்திற் றாரகைகள்வாழ்வதுபோல்
செந்தமிழோர்முன்னே சிறியேனுரைத்ததமிழ். (கச)

புன்சொற்குதலையுங்கள் பிள்ளைமொழிபோன்மகிழ்ந்து
என்சொலிதனைநித மின்பமெனக்கொண்டருள்வீர். (கரு)

## நூற்பயன்.

சத்தியமசத்தியமுஞ் சாதிமுறைமார்க்கங்கள்
உற்றதொருதர்மங்க ளுதவியுதவாமை. (கசு)

தன்மனைவிமைந்தரொடு தகைமையுடன்வாழ்வதுவும்
பின்மனைவிவேசையர்கள் பேதத்துள்ளாவதுவும் (கஎ)

மானமீனம்வாழ்வு மகிழ்ச்சியுடன்வஞ்சகங்கள்
தானுமுயர்கீர்த்திப்ர தாபம்பரிமளித்தல். (கஅ)

துற்பிறவிதுற்சனர்கள் சோரமுடனுக்கினைகள்
நற்பிறவியாயுள்விர்த்தி நற்பதங்கணல்லறிவு. (ககூ)

சற்பனைகளொப்பனைகள் சயவர்குணவிலக்கம்
எப்போதுந்தாளாண்மை யென்றுநடவாமை. (உo)

காலத்தின்கற்பனைகள் கடவுளால்நிர்ணயங்கள்
ஞாலமதில்நன்றியுட னற்றுணைவர்பத்திமுத்தி. (உக)
ஸ்ரீதேவிமூதேவி சேரிடங்கள்தானுமனு
நீதிமுறைவறுமை நிச்சயமாய்ச்சேரிடங்கள். (உஉ)
சேராவிடம்லோபி சின்னத்தின்பாங்குகளும்
பேரானமாதா பிதாவவர்களாவதுவும். (உ௩)
இருந்துமிறந்தோர்க ளிறந்துமிறவாதார்
மருந்துதவும்பண்டிதத்தின் மார்க்கமனத்தூக்கம். (உ௪)
சுத்தமசுத்தங்கள் தோகையரிலட்சணங்கள்
மெத்தப்பெரிதரிது மேவியதானங்கொடிது. (உ௫)
மிஞ்சுங்கொடுமையினல் மின்னார்களாசையினல்
வஞ்சகத்தினலிறந்தோர் மாருதபேறுபெற்ருேர். (உ௬)
இத்தகைமையாவதுட னின்னமின்னம்பலவாய்ச்
சத்தமுடன்முன்னூலோர் சொன்னபடியேயுரைத்தேன். (உ௭)
நன்னயஞ்சேரிந்நூலை ஞாலமெலாந்தானறியச்
சொன்னதொருபாடற் றொகையுமோராயிரமாம். (உ௮)
பாடினேனிந்நூலைப் பயனறிந்தவுத்தமர்க்கு
ஈடுண்டோநல்லறிவுக் கின்னமொருநூலுளதோ. (உ௯)

### வேதியரோழுக்கம்.

ஆரணங்களோதுவதும் யாகாதிசெய்வதுவும்
மீறுகாயத்திரியால் வினையெல்லாந்தீர்ப்பதுவும். (௩0)
கல்லும்பிருதிவுமிக் கானமரந்தாம்பூரம்
எல்லாச்சிலையுமரு ளெய்தும்படிமுடித்தல். (௩க)
நன்னயமாய்மாரிபெய்து நாடுசெழிப்பதுவும்
மன்னவர்செங்கோலு மறையோர்மகிமையன்ருே. (௩உ)

### அரசரோழுக்கம்.

தேசத்தியற்கை தெரிந்துமனுநீதி
வாசற்பிரதானி வாய்மைகுறிப்பறிதல். (௩௩)
தன்னுயிர்போல்மன்னுயிரைத் தற்காத்தல்சத்தியமும்
மன்னுங்குடிகளிலே மாருவபிமானம். (௩௪)
வங்கிஷத்திலுள்ளோர் மகிமைகுறையாமல்
தங்கள்குலத்தைத் தாரதரமாய்க்காப்பதுவும். (௩௫)

காலமிடமறிதல்மிக் கானதர்மசிந்தனைகள்
தாலமிசைகீர்த்திப்ர தாபம்பரிமளித்தல். (௩௬)
தேவதாபத்தியுடன் சிட்டர்பரிபாலனமும்
மேவலராந்துஷ்டர்களை விரைந்தடக்குமாக்கினையும் (௩௭)
மாசனங்கண்மீதிலபி மானமிதுபன்னான்கும்
ராசநீதத்தி னலமென்றுரைத்திடுமாம். (௩௮)

### வர்த்தகரொழுக்கம்.

தானறிந்தவாணிபமுந் தப்பாநிறைவசன
மானவராதாயத்துக் கதிகஞ்செலவழியார். (௩௯)
கணக்கிலணுவும்விடார் காரியத்திலேசெலவும்
இணக்கமுடன்செய்வா ரிசைவார்க்கிசைவார்கள் (௪0)
பொய்யுரையும்பேசார் போற்றிப்பொருள்சேர்ப்பார்
வையகத்தின்மிக்கான வணிகர்குலமார்க்கமிதாம் (௪௧)
மறையோர்க்குமங்களமு மன்னவர்க்குவல்லபமுங்
குறையாதவர்த்தகர்க்குக் கொள்வினையும்விற்பனையும் (௪௨)

### வேளாளரொழுக்கம்.

ஆகமவேதங்கள்தே வாலயம்விளங்குவதும்
மேகவருஷிப்பதுவும் வேந்தர்கள்செங்கோன்முறையும் (௪௩)
பாரிலேதர்மபரி பாலனங்கண்மேலுமுயர்
சூரர்வலுவுந் தொழிலாளர்சீவனமும் (௪௪)
தாளாதகீர்த்தியுடன் றரணியில்வாழ்வெல்லாம்
வேளாளர்தங்களது மேழிப்பெருமையன்றோ. (௪௫)

### தருமநீதி.

அறத்திற்பெரிதுமில்லை யதனையணுவளவும்
மறப்பதுவேகேடன்றி மற்றுமுயர்கேடுளதோ. (௪௬)
தர்மாதர்மம்ரண்டுஞ் சதகோடிநாட்செலினும்
அம்மாத்திரமு மனுபவித்துத்தீருமன்றோ. (௪௭)
எண்ணும்பலபொருளு மிகத்திற்கும்வாராது
புண்ணியபாவங்கள்ரண்டும் போவதில்லையுன்னைவிட்டு. (௪௮)
பொன்னுடையாபரணம் பூதானமீந்தாலும்
அன்னதானத்துக் கதிகமுறுதானமுண்டோ. (௪௯)

தன்னாற்சுயமாயோர் தர்மந்துடங்குவதில்
முன்னோர்செய்தர்மத்தை முக்யஞ்செய்தலுத்தமமாம் (௫௦)

பாவபுண்ணியமிரண்டும் பல்லாக்கின்கீழ்மேலும்
போவதுவேசெய்த புண்ணியமும்பாவமுமாம் (௫௧)

கோணாதனுவளவுங் குறையாதவாழ்வதற்கு
ஆணிவேரென்பதுவு மறமென்றுசொல்லுவதாம் (௫௨)

எண்ணரியவாழ்வு மெய்தும்பெருந்தவமும்
புண்ணியமொன்றில்லாதேல் புனல்நிறைந்தகாடாகும் (௫௩)

ஏதாகிலுந்தர்ம மெவருந்தான்செய்யவென்றால்
ஏதாகிலுமனதுக் கிசைந்தபடியேகொடுத்து (௫௪)

வாக்குச்சரீர மதனாற்சகாயங்கள்
ஏற்கவேசெய்வோர்க் கிகபரம்வந்தெய்திடுமே (௫௫)

எத்தர்மமானதற்கு மிடையூறுசெய்பவர்கள்
புத்திரருமத்திபமாய்ப்போவார்நரகமதில் (௫௬)

மன்னருடனீத மதனிற்பதின்மூன்றும்
முன்னமேசொன்னமின்ன முண்டுபதின்மூன்றுரைப்பார் (௫௭)

சேனைகுடியுஞ் சினேகமுமந்திரியும்
ஆனபலவேளாண்மை யதனுடனேயிவ்வாறும் (௫௮)

மிச்சமறிவீகை மேலுந்தயிரியமும்
உச்சாகமென்ப துடனேயிவைநான்கும் (௫௯)

தூங்காண்மைகல்வி துணிவுடனேயிம்மூன்றும்
நீங்காமல்வேணும் நிலமாளரசருக்கு (௬௦)

யானைகுதிரைபடை யானுடனேயாலயங்கள்
ஆனநல்லதர்ம மதினினைவுமந்தணர்க்கும் (௬௧)

ஏழைக்கிரங்கி யெப்பிழைகளும்பொறுத்தல்
மீளவேதீர விசாரித்துத்தெண்டனையும் (௬௨)

தக்கமரியாதை தயவுங்குடியினிலே
இக்குணங்களெல்லா மிருக்குமந்தராசாவை (௬௩)

ராசசிங்கமென்பரிவர் நாட்டிற்பசிபிணியும்
மாசிலையாம்வறுமை வாராதென்றேயுரைத்தார் (௬௪)

தான்செய்யுந்தர்மந் தனக்காகமுன்னோர்க
ளானபேர்தர்மத்தை யபகரித்துக்கொண்டாக்கால் (௬௫)

துன்னடக்கையென்றுமகா தோஷம்வந்துசூழுமென்றும்
நின்மலமாமென்று நிகழ்த்தினார்முன்னூலில் (௬௬)

ஆலரசுவேம்பிதுமூன் றானதிலேயொவ்வொன்று
மேலும்விளாநெல்லி வில்வமதின்மும்மூன்றும் (௬௭)

அன்பாகத்தெங்குமர மைந்தைந்துமாபுளியில்
ஒன்பதுடனொன்றுமீ தொன்பதையும்வைத்தவர்க்கு (௬௮)

தரணியிலேயெந்நாளுந் தக்கபுகழ்விளங்கும்
நரகமிவர்க்கில்லையென்று நவின்றார்மனுநூலில் (௬௯)

அன்னைதந்தைசுற்றங்க ளாதியிலேநம்பினவர்
முன்னுதவிசெய்தவர்கள் முடியுற்றுவந்தவர்கள் (௭௦)

தக்கபெரியோர்கள் சரணென்றடைந்தவர்கள்
மிக்கவெளியோர்கள் மேனாளிற்சேவகரை (௭௧)

கைநழுவச்செய்யாமற் காப்பாற்றுமுத்தமர்க்கு
வையகத்தில்வாழ்வெய்தும் வம்மிசமும்விர்த்தியுண்டாம் (௭௨)

தன்னுயிர்போன்மன்னுயிரைத் தற்காத்தவுத்தமர்க்கு
என்னென்னபாவம்போ மிகபரம்வந்தெய்திடுமே (௭௩)

மாமறையோரேமுதலாய் மற்றுள்ளோர்தங்களுக்கும்
சேமமுடனெண்ணெய் தேய்ப்பவர்கள்தங்களுக்கும் (௭௪)

மறையோர்க்குத்தொண்டுசெய்வோர் மாதாவைத்தெய்வமென்
போர், கறவைதனைக்கண்டவுடன் கையாற்சொரிபவர்க்கும். ()

எண்ணுமற்கோடி யெக்கியங்கள்செய்தவெகு
புண்ணியம்வந்தெய்துமென்று புகன்றார்மனுநூலில் (௭௬)

துன்மார்க்கர்தங்குடியைச் சுத்தமாகக்கெடுத்து
நன்மார்க்கமுள்ளசில நற்குடியைக்காத்திடலாம் (௭௭)

அறக்குடிபத்தானாலு மவர்கடனைக்கெடுத்துச்
சிறப்புற்றபட்டணத்தைச்சீர்திருத்திக்காத்திடலாம் (௭௮)

வீடானபட்டணத்தை மிகவுமங்கேகெடுத்து
நாடானதைக்காக்க லாகுமதிற்பாவமில்லை (௭௯)

என்றுமுன்னாள்மாயவனு மேயரவானைப்பலியாய்க்
கொன்றிடப்பாண்டவர்க்குக் கூறியதிவ்வாறாகும் (௮௦)

தீபமொன்றிலட்சந்தி ரிகொளுத்தினாலுமந்தத்
தீபங்குறையாத செய்கைபோலெந்நாளும் (௮௧)

தலமீதிலோயாத தானதர்மஞ்செய்பவர்க்கு
மலர்மாதாவுண்டாகும் வாழ்வதுவுங்குன்றாது (௮௨)

நன்மையேதர்மமதி னாலேவரும்வாழ்வு
துன்மைவருவதில்லை தூயமனைகுன்றாது (௮௩)

துன்மைதர்மத்தாற் றுலங்கும்பெருவாழ்வு
நன்மைதரமாட்டாது நல்விர்த்தியாகாது (௮௪)

தர்மம்பொருள்கிடைத்த தற்காலஞ்செய்யநன்று
வறுமைவந்தால்தர்ம மதுசெய்யக்கூடாதே (௮௫)

காய்பழங்கள்பூவிலைகள் கதித்தமரங்களிலே
வாய்வுசென்றால்நற்கனிகள் மட்டுமுதிராமல் (௮௬)

தக்கபழங்காய்பூ தளிர்முதலதாயுதிரும்
பக்குவம்போற்கெர்ப்பமுதற் பயந்தமனுக்களிலே (௮௭)

சாலக்கிழவர்மட்டுஞ் சாவதன்றிமற்றெவரும்
ஞாலமிசைச்சாவதில்லை யாக்குமென்றெண்ணவொண்ணா (௮௮)

என்னவயதானாலு மியல்புவரும்வேளை
நன்னயஞ்சேர்தர்மஞ்செய் தாலதுவேநன்றாகும் (௮௯)

பண்டுசெய்தபுண்ணியமும் பாவமென்றாஞ்சொல்லும்விதம்
ரெண்டுமெனுபவிப்பா ரெக்காலமானாலும் (௯0)

நமக்குள்ளதைச்சமைத்து நாமுண்டுவந்தபிறர்
தமக்குங்கொடுக்கின்ற தர்மமேமுக்கியமாம். (௯௧)

வாசற்கதவடைத்து வைத்துண்பார்க்குச்சொர்க்க
வாசற்கதவு மாறாதடைத்திருக்கும் (௯௨)

உப்பிலாக்கூழ முளமகிழ்ந்து தான்கொடுத்தால்
ஒப்பிலாப்பாலமிர்த மொக்குமென்றார்முன்னோர்கள் (௯௩)

பகைவன்கொடுங்கோபி பாலமிர்தமீந்தாலு
மிகவானநஞ்சுநஞ்சுக் கெட்டிக்காய்க்கொப்பிடலாம் (௯௪)

ஓட்டைக்குடத்திலிட்ட வுதகம்போனாற்போல
நாட்டமுடனேவாழ்வு நாளுக்குநாள்குறையும் (௯௫)

கூடிவருங்காலங் குறிப்பறிந்துதம்மாலே
கூடுமட்டுந்தர்மங் கொடுத்தாரேயாமாகில் (௯௬)

வாணாளேபோகும் வழியடைக்குங்கல்லென்று
கோணாதவாய்மை குறளிலேசொன்னாரே (௯௭)

ஆறிலொருகடமை யரசர்க்காமைந்துபங்கு
சேரும்விருந்து சுற்றந் தெய்வம்பிதிர் தமக்காம் (௯௮)
இல்லறத்தில்வாழ்ந்தா லிவ்வாறுசெய்யவென்று
வல்லமைசேர்வேதமுறை வள்ளுவருஞ்சொன்னாரே (௯௯)
பாவத்தாற்பொன்றேடிப் பலதர்மஞ்செய்தாலு
மேவுற்றபுண்ணியங்க ளெள்ளளவும்வாராதே (௧௦௦)
தன்மத்தாற்றேடித் தராதரமுங்கண்டறிந்து
தன்மையுடன்வந்தோர் தமக்குவிருந்தளித்து (௧௦௧)
இன்னுமவரும்விருந்துக் கெதிர்பார்த்திருக்கின்ற
நன்னயவான்வீடந்த லட்சுமியின்வீடாகும் (௧௦௨)
பூமியிலேவித்தேதும் போட்டதேயுண்டானால்
தாமேதானைஸ்வர்யந் தன்னாலேகூடிவரும் (௧௦௩)
ஏற்போர்களாரோனு மெவ்வேளைவந்தாலும்
கூர்ப்பாகத்தம்மாலே கூடுமட்டுமீந்தாக்கால் (௧௦௪)
இருந்தாலிறந்தாலு மெந்நாளுங்கீர்த்தியுண்டாம்
பிறந்தாலுமேலாம் பிறங்கதிகவாழ்வுமுண்டாம் (௧௦௫)
தர்மங்களாவதுதான் தர்மவான்செய்வதல்லால்
கர்மிகளுக்கெய்தாதெக் காலமுந்தான்செய்யானும் (௧௦௬)
எத்தர்மமானாலு மீகைக்கிணையில்லை
மற்றெல்லாம்பின்னென்று மனுநீதியிலுரைத்தார் (௧௦௭)

## மாரிச்சிறப்பு.

மண்ணிலுறுதவங்கள் மாதானமற்றுளதும்
விண்ணின்றுபோனால் விழலாகும்வாரிமுதல் (௧௦௮)
வாரிவளமு மானிலத்திற்புற்பூடுஞ்
சீர்பெருகுந்தானதவந் தேவாலயச்சிறப்பும் (௧௦௯)
மன்னர்முதலானவர்கள் வாழ்வுமவர்தாழ்வும்
மன்னுமுயர்வானமதில் வாரிவளமாமன்றே. (௧௧௦)

## இல்லறம்.

வெல்லறங்கள்செய்துகன வேள்விமுடித்தாலும்
இல்லறத்தின்வாழ்வுக் கிணையாவதொன்றுமில்லை (௧௧௧)
மூர்த்தியென்றமூவருக்கும் முன்னாளிறந்தவர்க்கும்
பார்த்திபர்க்குந் துறந்தார் பலமுயற்சியாளருக்கும் (௧௧௨)

23480
(8526)

## மனுநீதிகாதல்.

இயல்பினுலில்வாழ்வா ரிவர்க்குதுணையெனவும்
நயமாகுமென்றுகுற ளானதிலேசொல்லினரே (௧௧௩)

மட்டில்லாவாழ்விருந்தென் மனைதனக்கு முக்கியமாம்
இட்டமுறுபெண்சாதி யென்பவளேமுன்னிலையாம் (௧௧௪)

சற்குணமுந்தெய்வபக்தி தர்மசிந்தைகற்புடைமை
இக்குணமுள்ளாளே யிருக்குமந்தவீட்டினிலே (௧௧௫)

வற்றுதுசெல்வமவள் வாயாலேமாரிபெய்ய
உத்தாரஞ்சொன்னு லுலகமெல்லாமாரிபெய்யும் (௧௧௬)

தானுமனையாளுமொரு தர்மமதுசெய்யநன்று
தானவர்கள்வேறுபட்ட தர்மமதுதர்மமல்ல (௧௧௭)

### செல்வநிலையாமை.

நினைத்தபொருள்நீங்கி நினையாப்பொருளெய்து
மனைத்துமதுதானே யப்படியும்வந்துவிடும். (௧௧௮)

நிலையாகத்தோற்றுகின்ற நிலவதுவும்போயிருளாம்
கலைசேரிருள்நிலவாய்க் காட்டுமதற்கப்பாலும், (௧௧௯)

இரவும்பகலாகும் பகலுமிரவாகும்
பெரிதானமேடங்கே பேராறதாகிவிடும். (௧௨௦)

ஆறதுவுமேடாகு மனல்நிலத்திலோடம்வரும்
வாரிசுவறியதில் மணலுமிகச்சூடாகும். (௧௨௧)

ஈண்டுநிதியோ ரெளியோருமாவார்கள்
மீண்டுமெளியோரு மேலோருமாவார்கள் (௧௨௨)

தகமைசெறிவாழ்வுந் தாழ்வுஞ்சதமல்ல
சகடுபோற்சுற்றிவருந் தாழ்வதுவும்வாழ்வதுவும் (௧௨௩)

### தெய்வச்செயல்.

பேராசையாலே பிரயாசைப்பட்டாலும்
வாராதுவாராது வருவதுவும்போகாது (௧௨௪)

எங்கெங்கேபோனலு மியாவரிடஞ்சென்றாலும்
பங்கமுறைத்துப் பலமைமிககொந்தாலும் (௧௨௫)

அழுதுதொழுதாலும் அனேகநாள் தெயவத்தைப்
பழுதாயுரைத்தாலும் பயனேதுமெய்தாதே (௧௨௬)

ஆழக்கடலி லமுக்கிமுகந்தாலும்
நாழிவரும்நாழியிலே நானழிநீர்வருமோ (௧௨௭)

பூர்க்குமரஞ்செடிகள் பூவாநாட்பூவாது
ஆர்க்கும்விதியையன்றி யாசையினல்வாராதே (௧௨௮)

ஆலிற்புறுவிரண் டங்கிருக்கவோர்வேடன்
சீலமுடனெய்வதற்குச் சிலையிற்கணைதொடுக்க (௧௨௯)

பாயவந்தராஜாளிப் பட்சியதுமேனுலவத்
தூயபுறுவின்மேற் றொடுத்தகணைவிலகி (௧௩௦)

ராசாளிப்பட்சியுட லானதிலேதைத்துவிழப்
பாசமுறுவேடன் பதத்தில்விஷந்தீண்ட (௧௩௧)

வேடனும்ராசாளியுமாய் வீழ்ந்துவிடவேயொரு
சோடாய்ப்புறுவிரண்டுந் துன்பமற்றுவாழ்ந்ததுவே (௧௩௨)

இத்தகமையாய்முடியு மீசன்செயலாலதற்கு
அத்தாட்சியாமென் றருளினார்முன்னூலோர் (௧௩௩)

அண்டரமுதுண்ண வரனும்மெநஞ்சையுண்டான்
கொண்டல்வண்ணன்காடுறைந்து கோதைதனைப்பிரிந்தான் ()

வேதன்சிரமிழந்து மோரிற்சிறையிருந்தான்
ஆதியிலேயிந்திரனு மங்கமெலாங்கண்ணானான் (௧௩௫)

சக்கிரேசனனவரிச் சந்திரனும்பெண்டீரும்
மிக்கதொருநாடிழந்து விலைப்பட்டுத்துன்பமுற்றார் (௪௩௬)

மன்னுநளராஜன் மனைவிதனைப்பிரிந்து
தன்னுடையநாடிழந்து தன்வடிவுகுன்றினனே. (௧௩௭)

ஐவரடவியுற்று ராகையாலாரேனும்
மெய்யோன்விதிதனையே வெல்லவெவரால்முடியும் (௧௩௮)

பூபாரந்தீர்த்த பூவைவண்ணன்வேடன்கை
மாபாணம்பட்டிழன்று வாதைக்குள்ளாகினனும் (௧௩௯)

ஆனைபறவையுட னுடரவமிம்மூன்றும்
சேனைமனிதர்கையிற் சிக்கிமெலிவதுவும் (௧௪௦)

நல்லகதிர்மதிக்கி ராகுகேதாற்றுயரும்
வல்லதர்மவானுக்கு வறுமைவந்துசூழுவதும் (௧௪௧)

பாக்கியமுள்ளானுக்கோர் பாலகனில்லாததுவும்
போக்கற்றவேழைக்குப் புத்திரருண்டாவதுவும் (௧௪௨)

நல்லார்க்குப்பொல்லாத லண்டிப்பெண்டாவதுவும்
பொல்லார்க்குநல்லகுணப் பூண்மனைவியாவதுவும் (௧௪௩)

ஒரொன்பதொன் பதிது வூழிவிதிப்பயனும்
வீரர்க்கும்மேலவர்க்கு மின்பதுன்பஞ்சமனும் (௧௪௪)

ஆகாச்செயனுக்கு மயலார்பொருள்தனக்கும்
வாகாகவாசைமிக வைத்தால்வருவதில்லை (கசரு)
வாழ்வதுவுந்தாழ்வதுவு மன்றுவரும்நின்றுவரும்
ஊழ்வினையின்வாறன்றி யுத்திபுத்தியாலாமோ (கசசு)
ஏலவேவந்துபோ மின்பதுன்பமதுபோல்
ஞாலமிசைப்பின்னுமிவை ரண்டுமனுபவிப்பார் (கசஎ)
காலித்திரளிலொரு கன்றனைதைவிடுத்தால்
பாலித்தேயீன்ற பசுவறிந்துசேருதல்போல் (கசஅ)
ஓடியொளித்தாலுநமக் குற்றபழவினைதான்
தேடிப்பிடிக்குமென்று செப்பினார்முன்னோர்கள் (கசகூ)
எக்காலஞ்சென்றாலு மிறவாதபேரில்லை
மிக்கவிதிவசத்தை வெல்பவர்களாருமில்லை (கரு0)

சுகபோசனம்.

தாளாண்மையென்னுந் தகைமைதனைச்சீர்தூக்கில்
வேளாண்மைக்கேயதிக மில்லையென்றுசொல்லினரே (கருக)
வேந்தர்தமையடுத்தோர் வேளாண்மைசெய்பவர்கள்
சார்ந்தவனமலைகள் தன்னருகிற்சஞ்சரிப்போர் (கருஉ)
மருவாருஞ்சந்தனமாம் வனத்திற்சமுத்திரத்தி
னருகேயிருப்பவர்க ளாவின்பாலுள்ளவர்கள் (கருங)
சகடுடையாக்கினை தன்னைப்பயிரிடுவோர்
மிகவுமிந்தவெண்மருக்கு மேலானபஞ்சமில்லை (கருச)

நற்சகோதரர் துற்[illegible]

தம்பியர்மேலன்புடையோன் தர்மரகுராமன்
தம்பிமேல்சத்ராதி தசக்கிரீவன்வாலியுமாம் (கருரு)
நற்றுணையாந்தம்பியர்கள் லட்சுமணன்பரதன்
உற்றதொருதர்ம னுடன்பிறந்தநால்வர்களாம் (கருசு)
சுக்ரீபனனவனுஞ் சுயோதனன்விபீஷணனும்
தக்கபுகழ்பூவுலகில் தமையனுக்குச்சத்ராதி (கருஎ)
புண்பாயுடன்பிறப்பிற் பகையுறவிதாகுமென்று
முன்பாகநீதிநூல் முறையிலுரைத்தனரே. (கருஅ)

அரசிற்புகழ்பெற்றோர்.

மனுவிட்சுவாகுவுடன் வாகானஅம்பரீஷன்
கனதைபெறுமாந்தாதா கார்த்த[illegible] (கருகூ)

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY

விருத்தச்சிபியுடனே விந்துசசிவிந்துவுடன்
மருத்துப்பகிரதனும் வாணன்முசுகுந்தனுடன் (கசு0)
தீரர்புகழ்யயாதி தேவேந்திரனுடனே
பாரிற்றசரதனும் பாண்டவர்களைவர்களும் (கசுக)
சத்தியவரிச்சந்திரனுடன் தாதைதிரிச்சங்கு
உற்றநளன்விதுர னோகோபுரூரவனும் (கசுஉ)
அந்நாளிலேபிரக லாதனுடன்மாபெலியு
மன்னுஞ்சடாயுகுகன் வாகாம்விபீஷணனும் (கசுங)
ஆறைந்துபேரு மதிகபூசாபலராய்ப்
பாரிற்புகழ்நிறுத்திப் பரமபதமுற்றவராம் (கசுச)
ஏற்கைபெறுமிந்திரனு மெழில்விசுவாமித்திரமுனி
மார்க்கமுடன்மாணிக்க வாசகருமாபெலியும் (கசுரு)
வின்னமில்லாவள்ளுவரும் வேடனெனுங்கண்ணப்பன்
தன்னாலெழுவர்களுந் தானவராய்ப்பேறுபெற்றார் (கசுசு)

## நல்லறிவு.

தீயினாற்சுட்டபுண் தீருஞ்சிலமருந்தில்
வாயினாற்சுட்ட வடுவென்றுமாறாதே (கசுஎ)
ஏற்கையுடனற்புகழோ டெய்தாதசென்மமவன்
தீர்க்கமுடனேமறு ஜென்மமெடுக்கைநன்றாம் (கசுஅ)
மண்ணிற்பிறப்பதெல்லா மாறிலதுவேகாட்டுந்
தண்ணமுளா [redacted] சாதியறிந்திடலாம் (கசுகூ)
சிறியோரிணக்கம்விட்டுத் தீங்கொன்றுஞ்செய்யாதே
பெரியோர்தமையடுத்தாற் பேதமொன்றும்வாராதே (கஎ0)
துய்யகிரகம்நித்திய சோபனத்தினால்விளங்கும்
வையகத்தராசாக்கள் மனுநீதியாற்சொலிப்பார் (கஎக)
நாரியர்கள்சற்குணத்தி னாலேவிளங்குவர்கள்
கூறும்விதரணனுங் கொடையால்விளங்குவனும் (கஎஉ)
பாரிலெந்தநாளும்பகல் விளங்குமாவிரவிற்
காரிருளையும்விளக்குங் காந்தியுறுமாமதியாம் (கஎங)
பதிவிளங்கும்பெண்ணாலே பார்விளங்குமேகமதால்
சதுராயப்பகைவிளங்குந் தங்கள்புயவலியால் (கஎச)
குடியேவிளங்குவது கொற்றவர்களால்நீதி
நெடியதலம்விளங்கு நெஞ்சினுற்றநல்லறிவால் (கஎரு)

புகழாற்கொடைவிளங்கும் போசனத்தாலுயிர்விளங்கும்
புகழரியநன்னூலாற் புத்திமிகவேவிளங்கும் (கஎசு)
சொந்தமென்றுதுற்சனரைத் தோழமைகள்செய்யவொண்ணாச்
சந்தேகமுற்றதொரு தையலரைச்சேரவொண்ணா (கஎஎ)
சார்பில்லார்க்கில்லைநிலை தயவில்லார்க்கறமுமில்லை
ஊரில்லார்க்கரசுமில்லை ஊணில்லார்க்குறுதியில்லை (கஎஅ)
மாடில்லார்க்கிந்த வையகத்தில்வாழ்வுமில்லை
கூடுமுதலில்லார்க்குக் கொள்ளல்விற்றலிலாபமில்லை (கஎகூ)
துற்சனர்க்குநேசமில்லை சுகமில்லார்க்காசையில்
இச்சகத்தினன்மைதனக் கெப்போதழிவுமில்லை (கஅ0)
மனதின்குறிப்பைவதனத்தாலறிந்திடலாம்
அனைவோர்குணநடத்தை யதனாலறிந்திடலாம் (கஅக)
சமர்முகத்திற்சூரன்வலு தன்னையறிந்திடலாம்
தமர்சேரும்வல்பிணியைத் தாதாலறிந்திடலாம் (கஅஉ)
கல்விப்ரசங்கத்திற் காணலாங்கவிஞர்திறம்
சொல்வண்மையாற்சாதி தோற்றமறிந்திடலாம் (கஅங)
மானிலத்திற்பூடுகளை மழையாலறிந்திடலாம்
தானுநல்லார்பொல்லாரைச் சந்ததியாற்கண்டிடலாம் (கஅச)
கண்ணிரண்டாம்யாவருக்குங் கற்றோர்க்குமூன்றுகண்ணாம்
எண்ணுந்தியாகிகளுக் கேழுகண்ணாகுமல்லோ (கஅரு)
மனங்குவிந்துஞான மகிமையறிந்தவருக்
கனந்தங்கண்ணாமென் றருளினார்முன்னோர்கள் (கஅசு)
தர்மவான்றன்னிடத்திற் றங்காதுபாவமுந்தான்
கர்மிதுன்மார்க்கனிடங் கனத்ததர்மநில்லாது (கஅஎ)
நெருப்புக்குமுன்குளிரு நில்லாதுதான்மிகுந்த
கறுத்தவிருள்பனியுங் கதிரோன்முன்னில்லாது (கஅஅ)
சத்தியத்தைநாளுமசத்தியமும்வெல்லாது
புத்திகெட்டகோபம் பொறுமைதனைவெல்லாது (கஅகூ)
புண்ணியத்தைப்பாவமொரு போதுமேவெல்லாது
மண்ணில்விஷங்கருட மந்திரமுன்னில்லாது (ககூ0)
சந்தனங்கஸ்தூரி தாம்பூலமாடைமுதல்
விந்தைசெறியாபரண மிவற்றையெவரீந்தாலும் (ககூக)
ஏற்போரொருகையா லேற்றாரேயாமாகில்
கூர்ப்பாய்க்கொடுப்பவர்க்குக் குறையாதவாயிசுண்டாம் (ககூஉ)

செகமுழுமையுந்தானே தேவாதீனமாகும்
மகவானதெய்வமது மந்திராதீனமதாம் (ககூங)

மந்திரமாவதுவே மாமறையோராதீனம்
சந்தஞ்சேர்மாமறையோர் சகலருக்குந்தெய்வமென்பார் (ககூச)

பாலன்னமானாலும் பண்பில்லாக்கூழெனினும்
மேல்சுத்தமாய்க்கால மிதமறிந்துண்ணனன்று (ககூரு)

நல்லோருக்குற்றதுயர் நன்மைசற்றுமில்லாத
பொல்லாதான்வாழ்வுமொரு போதுநிற்கமாட்டாதே (ககூசு)

பாம்புகடுநெருப்பிற் பழகிப்பிழைப்போர்கள்
மேன்பாடுக்கொப்பாகு மென்றார்மனுநூலோர் (ககூஎ)

ஊமைக்குத்தோன்ற வுபாயங்கள்சொல்லுவதும்
காமிக்குஞானக் கதையெடுத்துச்சாற்றுவதும் (ககூஅ)

துட்டனுக்கெத்தனையோ சொல்லிநன்மைசெய்ததுவும்
முட்டாளுக்குற்றநிச முள்ளதைச்சொல்லுவதும் (ககூகூ)

இன்பக்கவிகடனை யீயார்மேற்பாடுவதும்
அன்பில்லாச்சோரஸ்திரீ யா[redacted]வதுவும் (உOO)

நலத்தைக்கொடுப்பதில்லை நன்றாகாதிவ்வாறும்
மலைக்கல்லிலேயெறிந்த மண்பாண்டமாகுமல்லோ (உOக)

ஐந்தானபாவத்தி லாறுவிரண்டுநலம்
ஐந்திலேமூன்றை யவ்வைசொன்னாளாகாதாம் (உOஉ)

தெய்வத்தாலாகா தெனினுமுயற்சியிலே
மெய்வருந்தக்கூலிதரு மென்றனரேமுன்னூலோர் (உOங)

இத்தனைநாள்நம்வீட்டி லேற்றும்விளக்கென்றனுகி
முத்தமிட்டாற்கன்ன முடையெழும்பச்சுட்டுவிடும் (உOச)

உற்றகுலதெய்வநமக் கொன்றுசெய்யாதென்றுபொய்வாய்ச்
சத்தியமும்பண்ணினாற் றன்விடவுமாட்டாது (உOரு)

தூங்குவதுபோலுந் தூங்கிவிழிக்கின்ற
பாங்கதுவுமாமிந்தப் பாரிற்பிறப்பிறப்பு (உOசு)

கூட்டினுள்ளேயிருந்து குருவிபறப்பதுபோல்
தேட்டமுடம்பினிலே சீவனிருந்தேகுசெயல் (உOஎ)

கொல்லாமை.

கொலையென்றுநெஞ்சிற் குறியாதான்வாணாள்மேல்
மலைவாயுயிருண்ணு மறலிவரமாட்டானே (உOஅ)

நல்லோர்பெரியோர்க்கு நாயகமேயாவரெனின்
கொல்லாமையென்பதனைக் குறித்தறிந்தவுத்தமராம் (உ0௯)
தாருபதிதூதன் தந்தைதாய்சற்குருவு
மானூர்மனையாட்டி மறையோர்புராணிகரை (உ௧0)
சுத்தமுளவீரர் துலங்குசுவிவாணர்
உற்றதபோதனர்களுயர்குலத்தோர்பாலகர்கள் (உ௧௧)
சாலவிகடப்பிர சங்கிபிணியாளர்
ஞாலமிசைவறுமை யாளர்பதினெண்மனையும் (உ௧உ)
எப்பிழைகள்செய்தாலு மிராசர்முதலானவர்கள்
சர்ப்பனையுந்தண்டனையுந் தான்செய்யலாகாதே (உ௧௩)

கொடுநரகடைவோர்.

நீதியுள்ளராசர்களை நீதிவழக்குரைப்போரை
ஆதிகுருவானவரை யவருடையசீஷரையும் (உ௧௪)
சோதிடம்சொல்வேதியரைத் துன்பங்கள்தீர்த்தவரை
யோதரியபண்டிதரிவ் வோரெழுவர்தங்களையும் (உ௧௫)
தீதானவஞ்சகங்கள் செய்தாரேயாமாகில்
தீதாம்கொடுநரகிற் சேர்வார்கள்திண்ணமிதே (உ௧௬)
அன்னமளித்தவருக் கவகேடுசெய்தவர்கள்
மன்னர்தமையடைக்கி வைத்தவமைச்சர்களும் (உ௧௭)
நன்றிமறந்தவரும் ராசாக்களைச்சமரில்
ஒண்டியாய்விட்டே யொளித்தோடிப்போனவரும் (உ௧௮)
மாதாபிதாகுருவை வசையாய்நிந்தித்தவரும்
வோதந்திமாதவத்தோர் மெய்நோகவைதவரும (உ௧௯)
தெய்வமிகழ்ந்தவருஞ் செனனமுதலாகப்
பொய்சொல்வோரன்னியர்தம் பொருட்காசைபட்டவரும் ()
பாரில்விசுவாசப் பாதகமேசெய்தவரும்
கேருண்டவீட்டுக்கு ரெண்டகங்கள்செய்தவரிப் (உஉ௧)
பன்னிருவர்தானும் பரிதிமதியுள்ளளவும்
சன்னயமில்லாத நரகிற்குடியிருப்பார் (உஉஉ)
சோதிடங்கள்சொல்வோருந் தொடுவழக்குத்தீர்ப்போரும்
பேதமில்லாபண்டிதரும் பிராய்ச்சித்தம்விதிப்போர் (உஉ௩)
நீதியுரையாம விரண்டகமாய்ச்சொல்வாரேல்
ஆதீனமும்பாழா யாழ்நரகமெய்திடுவார் (உஉ௪)

பார்க்குமலைகடலின் பாரமதுபாரமல்ல
பார்க்குவிசுவாசப் பாதகனுமென்பவனும் (௨௨௫)

கற்றதுரோகியுடன் காணுமிவரிருவ
ருற்றசுமையேயென் றுலகமாதஞ்சுவளாம் (௨௨௬)

தண்ணீரிலம்மணமாய்த் தான்போவோரதிற்புணர்ந்தோர்
உண்ணீரிலேயுமிழ்ந்தோ ருறுமலமும்நீர்விடுத்தோர் (௨௨௭)

அக்கினியிலேயுமிழ்ந்தோ ராறுபேராமிவர்க்கு
மிக்கதொருகொடிய வியாதிவரும்பின்னரகம் (௨௨௮)

அசுத்தமுடனேதா னாலயத்திற்செல்வோர்கள்
நிசமாகச்சந்நிதியி னேராய்க்குடியிருப்போர் (௨௨௯)

போற்றுகின்றதேவதையின் பூசைக்கெனக்கொணர்ந்து
சாற்றுதபுட்பந் தனையெடுத்துச்சூடினவர் (௨௩௦)

தீராப்பிணியடைந்து செகத்திலிந்தமூவர்களும்
மாறுவறுமையுமாய் வன்னரகஞ்சேர்வார்கள் (௨௩௧)

மேற்குலத்துக்கீழ்க்குலத்து மின்னாருடன்புணர்ந்தோர்
ஆகுலமுண்டாகி யழிவர்குலவிர்த்தியற்று (௨௩௨)

கண்காதுக்கெய்தாத கடுஞ்சொல்லைச்சொன்னவர்கள்
மண்மேல்குலத்தோடு வன்னரகஞ்சேர்வார்கள் (௨௩௩)

கெடுமதியாலொருவர்க்குக் கேடுநினைத்தவர்கள்
குடும்பமுமோசமுமாய்க் கொடுநரகஞ்சேர்வார்கள் (௨௩௪)

மன்னர்நிருப மதுதனையேதள்ளிவிட்டோர்
அன்னைதந்தைசுற்றத் தவர்கள்தனையடர்ப்பேர் (௨௩௫)

எளியர்தனையடைந்தோர்க் கிகல்புரியும்வஞ்சகர்கள்
பழியாளர்கோளர் பழிவினையரெண்மரையும் (௨௩௬)

மண்டலத்தில்மூன் றுமிழை மட்டும்பொறுத்தப்பால்
தெண்டனைகள்செய்வதுவே தேசமன்னர்நீதியதாம் (௨௩௭)

உரியவிவகாரம்வந்தா லுற்றார்பகைஞரென் றும்
பரிதானையெய்துசம் பந்தரிவரேழையென்றும் (௨௩௮)

பாராமல்நீதியாய்ப் பாங்காய்விசாரித்து
கூறாய்ச்சமன்செய்த கோல்போலிருதலையும் (௨௩௯)

நிறையாயுரைத்தவர்க்கு நீடூழிகாலம்வரை
குறையாதவாழ்வுமவர் குலமுமிகவிர்த்தியுண்டாம் (௨௪௦)

## துஷ்டநிக்கிரகம்.

சாதிமுறைதவறுஞ் சண்டாளர்க்கற்புடைய
மாதைவிரும்புவிசு வாசமிலாப்பாதகர்கள் (உசக)
கோள்கள்மிகுந்தவர்கள் கொலைஞரொடுமூர்க்கர்
நாளும்பகையாளர் நாசனத்துரோகிகளே (உசஉ)
ஏழைதமையடித்தோ ரிகல்வினையுஞ்சண்டைகளைச்
சூழும்பிணிகளொடு துஷ்டமிருகந்தீய (உசங)
கொண்டடுமைதீராத கோபம்பதினாறு
மன்றடக்குவதல்லா லதிகரித்தால்வெல்லரிதே (ஙசச)
துற்சனரும்பொன்னுந் துரகதமுந்தோற்கருவி
மிச்சமுறுநரம்பின் வெங்கலமாமுக்கருவி (உசரு)
மானமில்லாமூளிக்கு மானரவர்களையும்
ஈனமில்லாக்கரும்பு மெள்ளுடனேயீரைந்தும் (உசசு)
தெண்டித்தார்க்கல்லோ செயங்கொடுக்குமென்றிவற்றைப்
பண்டுவேடநூலிற் பகர்ந்தாரேமுன்னோர்கள் (உசஎ)
தந்தைதாயானாலுந் தன்குலமெல்லாம்விளக்கும்
மைந்தனேயானாலு மனையாட்டியானாலும் (உசஅ)
மந்திரியேயானாலு மரபுள்ளோரானாலும்
பந்தமுடனமக்குப் பகையாளியென்றறிந்தால் (உசகூ)
அன்றேயகற்றிடினு மாக்கினைகள்செய்திடினும்
கொன்றாலும்பாவங் கொலையுமில்லையென்றனரே (உரு0)
தோழமையில்வஞ்சகரைச் சொற்கேளாமைந்தர்களை
மீளாச்சமர்முகத்தில் விட்டோடுஞ்சேவகரை (உருக)
மன்னர்க்குவஞ்சகஞ்செய் மந்திரியோடிவ்வறுவர்
தன்னைக்கொடுந்தண்டனையுஞ் சதியுமிகச்செய்திடலாம். (உருஉ)

## நல்லறிவு.

பூமிக்கரசர்தெய்வம் புருஷனேபெண்கள்தெய்வம்
காமிக்குமாதர்தெய்வங் காசுபணம்லோபிதெய்வம் (உருங)
தாரித்திரனுக்குத் தனங்கொடுப்பார்தெய்வமிந்தத்
தாரணியில்துஷ்டருக்குச் சவுக்கடியேதெய்வமென்பார் (உருச)
நீதியுடையோனுக்கு நேயரேதெய்வமதாம் •
ஆதிபராபரமே யனைவோர்க்குந்தெய்வமதாம் (உருரு)

அன்னைதந்தைசுற்றத்தை யடர்ந்துமுனியவொண்ணா
பின்னென்றுமுன்னென்றும் பேசித்திரியவொண்ணா (௨௫௬)

வஞ்சகரைநம்பவொண்ணா வாக்கிரண்டுபேசவொண்ணா
தஞ்சிப்பொறுமையில்லாச் சண்டையினிற்போகவொண்ணா ()

வேணவித்தைகற்றாலு மேதினியிலேவிளங்க
ஆணவமாய்க்கொஞ்ச மாடம்பரம்வேணும் (௨௫௮)

நீடுநதிகண்மிக நீந்தியறிந்தாலும்
ஓடந்தனையகற்றி யுதகத்திற்செல்லவொண்ணா (௨௫௯)

ஞானமறிந்தாலு நாடொப்பனைகளது
வானதுபோலேநடந்து மகிமைபெறவேவேணும் (௨௬0)

செம்பொற்குபேரனெனினுஞ் சீவனத்திலேமுயற்சி
பண்புடனேநாளும் பண்ணாதிருக்கவொண்ணா (௨௬௧)

வாசமுடனேவெகுவாய் வல்லமையுண்டாயிடினும்
ராசாக்கள்சேர்வை நலம்பெறவும்வேணுமல்லோ (௨௬௨)

உரித்தானபுத்திமதி யூகியேயானாலும்
பெரியோர்கள்சொற்கேட்டுப் பின்சென்றிருக்கைநன்று (௨௬௩)

பெற்றபிள்ளைதான்மூடப் பிள்ளையேயானாலும்
சற்றாகிலுங்கல்வி தான்வரவுசெய்யநன்றாம் (௨௬௪)

மெலிவாகியேயதிட்ட மில்லாதிருந்தாலும்
சலியாமலேமுயற்சி தன்னைவிடவொண்ணாதே (௨௬௫)

தீராதரோகமதால் தேகமெலிவுற்றாலும்
வீராயவிழ்தத்தை விட்டுவிடலாகாதே (௨௬௬)

தனியேபொருள்தேடித் தனித்துண்ணும்பாற்சோற்றி
லனையார்கிளையோடே யன்றுண்டகூழதிகம் (௨௬௭)

ஏதோர்மருங்கு மில்லாரிடத்தினிலே
பேதைகளாய்ச்சேவித்துப் பெரும்பொருள்கள்வாங்குவதில் ()

மானமரியாதையுடன் வையகத்தில்நல்லோராய்த்
தானுள்ளபேர்கொடுக்குந் தாம்பூலமேயதிகம் (௨௬௯)

வீணில்பலவித்தை மெத்தவிரும்புதலி
லாணியாம்வித்தைதுக ளறக்கற்றலொன்றுநலம் (௨௭0)

சின்னமுயல்மான்கள் சிற்சிலதைவெல்லுவதி
னுன்னும்புலிக்குட்டி யொன்றைவென்றாற்கீர்த்தியுண்டாம் ()

ஏதுந்தமிழருமை யெய்தான்றருங்கொடையில்
ஓதுந்தமிழருமை யொன்றறிந்தாற்போதுமல்லோ (௨௭௨)

கடுகடுத்துவேணபொருள் கையிற்கொடுப்பதிலும்
அடைவாய்மகிழ்ந்தழைத்தே யன்றளிக்குங்கூழதிகம் (௨௭௩)

வையகத்தில்வேள்விவெகு வாகவேசெய்வதிலும்
பொய்சொல்லாதேயிருந்தாற் போதுமதுசரியே (௨௭௪)

அவிவேகியுடன்வெகுவா யானவுறவாவதிலும்
விவேகிபகையிருந்தால் மெத்தவதுநன்றாகும் (௨௭௫)

தன்னுயிர்க்குவந்தலயந் தப்புவிக்கவேண்டுதற்கும்
பின்னும்பிறருயிரைப் பேணிவிடவேண்டுதற்கும் (௨௭௬)

மையல்கொண்டமாதருக்கும் வையகத்திலஞ்சாமற்
பொய்யுரைத்தாற்பாவமொரு போதுமில்லையென்றனரே (௨௭௭)

பின்னால்வெகுபொருளைப் பேறாயளிப்பதிலும்
முன்னால்தருணத்தி லீந்தவுரைக்காகுநன்றாம் (௨௭௮)

நாளையென்றும்பின்னையென்றும் நாட்கெடுவுசொல்லுவதில்
வேளையிதுவல்லபோ வென்றால்மிகவுநன்று (௨௭௯)

தெளிவானகல்விகற்றால் தேசம்வசியமதாம்
பழியாமரியாதை பாவலர்கள்தன்வசியம் (௨௮0)

சித்தமதிற்பத்தியே தெய்வவசியமதாம்
உற்றபெருஞ்செல்வ முறவோர்க்கிளைவசியம் (௨௮௧)

வேண்டும்பொருள்கொடுப்போர் வேசையர்கள்தெய்வமதா
மாண்டுகட்டிக்காத்திருந்தா லரசர்வசியமுண்டாம் (௨௮௨)

சாந்தமொழுக்கஞ் சகலசனவசியம் ✓
வார்ந்தகமுநல்ல மனையாளுக்கேவசியம் (௨௮௩)

கூடியேவாழ்ந்தாலுங் குழந்தைமிகப்பெற்றாலும்
தேடிப்பிதிர்களுக்குந் தெய்வத்துக்கிட்டாலும் (௨௮௪)

தானதர்மஞ்செய்தாலுந் தாழ்ந்தெவர்க்குச்சொன்னாலு
மானமுளநல்லோர்க்கு வணங்கிநடந்தாலும் (௨௮௫)

செய்தபிழைபொறுத்துத் தேசமதில்வாழ்பவர்க்கு
ஐயமில்லைவாழ்வுமிக மப்பாலுநற்பதமாம் (௨௮௬)

தெய்வசபை, ராசசபை, தேசிகன், புராணசபை,
வைத்தியர்கள், சோதிடர்கள், தங்களிடம் (௨௮௭)

மருங்காயெவையுமங்கே வைத்துவணங்கநன்றும்
வெறுங்கையாற்போனல் விழலாங்கருமமெல்லாம் (உஅஅ)

பாரிலொருதாயார் பலபிள்ளேப்பெற்றாலும்
சீருமழகுந் திறங்குணமும்வெவ்வேறும் (உஅகூ)

பயிரிடுவோர்தங்களுக்குப் பாரில்வறுமையில்லை
தயிரியமுள்ளவர்க்குத் தானோர்பயமுமில்லை (உகூ0)

உற்றசெபஞ்செய்வோர்க் கொருநாளும்பாவமில்லை
நித்திரையில்லாதார்க்கு நேரும்பயமுமில்லை (உகூக)

தன்னவனுயிருந்து [redacted]செய்தாக்கால்
அன்னியனுமென்றெண்ணி யன்றேயகற்றல்நலம் (உகூஉ)

அன்னியனுயிருந் தன்புள்ளோனுனுக்கால்
தன்னவனுமென்றவனைத் தாபரித்துக்கொள்ளல்நலம் (உகூங)

நல்லோர்க்குமுன்னுளோர் நன்மைசெய்தாலதற்குப்
பொல்லாவொருறூறு பிழையும்பொறுப்பார்கள் (உகூச)

அற்பர்க்கெழுநூறு றதிகநன்மைசெய்தாலும்
சொற்பவொருபிழைதான் செய்தாற்பொறுக்காராம் (உகூரு)

செய்ததவத்தளவே செல்வமதுவுண்டாகும்
எய்துங்குலத்தளவே யிருக்குமவர்கள்குணம் (உகூசு)

கற்றோர்நலஞ்சிறந்த கன்னியர்களன்புடையோர்,
நற்றவங்களுற்றவர்க்கும், ராசாக்களானவர்க்கும், (உகூஎ)

சாதிவரம்பெண்ணு தனுசரிக்கவேண்டுவதே
நீதிமுறையென்றுமனு நீதிநூலோதிடுமாம். (உகூஅ)

இன்பக்கவிமூட ரிடத்திற்படித்தாக்கால்
அன்பில்லைச்சற்று மதற்கும்பழுதுசொல்வார் (உகூகூ)

கற்றோரருமைதனைக் கற்றோரறிவதல்லாற்
சுத்தமலடிபிர சூதிதுயரறிவாளோ (௩00)

பஞ்சரித்துவேண பரிசுபெறுவதினு
மின்சொல்லாற்பிச்சை யெடுத்துண்ணனன்றாகும் (௩0க)

...ம்பானசத்ராதி மெய்யென்றிருப்பதிலும்
...ம்போடுறவுமிகப் பண்ணுவதேநன்றென்லாம் (௩0உ)

...ணைன்றுரைப்பதிரு கண்ணதுவுங்கண்ணுமல்ல
...ணன்பதேனை யெழுத்தென்பதுவேகண் (௩0௩)

கைப்பொருளேபொய்ப்பொருளாங் காலவரைநில்லாது
மெய்ப்பொருளாந்தான்கற்ற வித்தைநீங்காப்பொருளாம் (௧௦௪)

வாழ்வுமிகவந்திடினும் வம்மிசத்தின்மார்க்கம்போல்
தாழ்ந்துநடப்பவர்க்குத் தாழ்வுசற்றும்வாராதே (௧௦௫)

யானைதனதென் றடாதுசெய்யப்போகாது
தீனைதைமிருந்து தின்றாலுங்கெடெய்தும் (௧௦௬)

ராசருரியரென் றா நடத்தைபொறுமைசெய்தால்
ஆசாரமேன்மையும்போ யவதியும்வந்தெய்திடுமே (௧௦௭)

இல்லாரையுள்ளவர்க ளேசியிழுக்குரைத்தால்
நல்லதல்லகஷ்டநயம் ராட்டினம்போற்சுற்றிவரும் (௧௦௮)

தேசமதிலேழைபர தேசிமறைவேதியனை
ராசர்கள்வசவிட்டா னன்றல்லப்பாவமுமாம் (௧௦௯)

சாகாவரம்பெற்ற தவர்க்குப்பயமுமில்லை
வாகாகப்பேசாத மௌனிக்குச்சண்டையில்லை (௧௧௦)

வித்தைகற்றால்தந்தைதாய் மேதினியெல்லாம்புகழும்
கற்றதொருவித்தையது கற்பகத்துக்கொப்பாகும் (௧௧௧)

மெத்தவழகுடையோர் மேற்குலமேயானாலும்
வித்தையொன்றுமில்லாட்டால் விரையில்லாப்பூவாகும் (௧௧௨)

திருந்துமயிர்நகமுந் தேசமன்னர்பல்நான்கும்
இருந்தவிடம்பிரிந்தா லிவைகளுக்குமேன்மையில்லை (௧௧௩)

மின்னாரில்தாசி வேதியர்நாய்கோழியுடன்
தன்மைசேர்பண்டிதர்கள் சாதியொத்துவாழார்கள் (௧௧௪)

ஓங்குபொருட்சேத முயிர்ச்சேதம்வந்தணுகில்
சாங்முடன்சிரித்தாற் றயிரியம்வந்தெய்திடுமாம் (௧௧௫)

தர்மசிந்தையுள்ளோர்க்குந் தயாளபுருஷனுக்கும்
எம்மாத்திரம்பொருளு மில்லாளுமோர்துரும்பு (௧௧௬)

வீரமிகுசூரனுக்கு மேவலர்சேனைதுரும்பு
பாரிற்றுறவிகட்குப் பார்த்திபனுமோர்துரும்பு (௧௧௭)

பெரியோருக்கற்பர்பகைப் பிரயோசனந்துரும்பு
அரியகலைவாணியரு ளடைந்தோர்க்குக்கவிதுரும்பு ✓ (௧௧௮)

நூற்றிலொருசேவகனும் நூற்றுப்பத்தாயிரத்தில்
பார்த்திறிந்தாலொருவன் பாவாணனெனபவனும் (௧௧௯)

பாங்கானவார்த்தைசொல்வோன் பதினாயிரத்தொருவன்
தீங்காக்கொடையாளி லட்சத்திலேயொருவன் (௩௨௦)

சினமென்பதென்பதொரு சிக்காமதையறுத்தால்
மனமென்பதென்பதுற்ற வாறேமுடித்திடலாம் (௩௨௧)

அரிதானமாதவங்க ளநேகமாய்ச்செய்தாலும்
பொறுமையென்பதில்லாதேற் போமேவீழலாக (௩௨௨)

எக்கர்மமானாலு மெண்ணித்துணிதனன்று
மிக்கதுணிந்தபின்னர் மேலெண்ணினாலிழுக்காம் (௩௨௩)

பட்சிக்கரசுபலம் பாலருக்கழுகைபலம்
மச்சத்துக்கேசலமாம் மன்னர்க்குவேல்பலமாம் (௩௨௪)

வாகனங்கள்தானுடையான் வழிநடைக்கஞ்சானும்
வாருடனேபாலுடையான் வந்தவிருந்துக்கஞ்சான் (௩௨௫)

வஸ்திரமுள்ளான்சபையில் வரப்போகவஞ்சானும்
உற்றபணக்கார னொன்றுக்குமஞ்சானே (௩௨௬)

மானிற்கவரி மயிர்தடுத்தாலேகாது
மானபரனவ்வாறாய் வசையணுவுங்கேளானும் (௩௨௭)

மேஷந்தனக்கிரண்டு செவியுமிகவறுத்து
மாசுபடத்தேக மயிர்முழுதையுங்களைந்து (௩௨௮)

சூடுசூட்டியும்பின்னே தொடர்ந்துவரும்வாறதுபோல்
கேடுகெட்டமாண்பாப கீர்த்திகளுக்கஞ்சாரே (௩௨௯)

மச்சுவீடாலநிழல் மானார்தனக்கோடு
நிச்சயமாய்க்கிணற்று நீராமிவைகான்கும் (௩௩௦)

கட்டாகச்சீதள காலத்தி லுஷ்ணமதாய்
திட்டமுடனுஷ்ணத்திற் சீதளமாகுமல்லோ (௩௩௧)

சாதித்தொழில்செய்வார் தனக்குக்கெடுதியில்லை
மாதவமாய்க்கால மறிந்துசெபஞ்செய்பவர்க்கு (௩௩௨)

ஏதேதுபாவங்க ளில்லையொருநாளுமென்று
நீதிமனுநூலி னிகழ்த்தினார்முன்னோர்கள் (௩௩௩)

பொன்னைத்தரிசித்தாற் போகமதுசம்பவிக்கும்
வன்னமலரைச்சேர்ந்தால் வாசமதுசம்பவிக்கும் (௩௩௪)

பெரியோரைச்சார்ந்தவர்க்குப் பெருமைமிகவுண்டாகும்
சிறிதானதுர்ச்சனரைச் சேர்ந்தவர்க்குக்கேடுவரும் (௩௩௫)

23480 (8874)

விண்ணதனிலேயிருந்து வீழுமழைத்துளிதான்
மண்ணிற்சுடும்இரும்பில் வந்துவிழுமுன்சுவறும் (௩௩௬)
தாமரையில்வீழ்ந்தாற் றுழாதுயராது
சேமத்திரைக்கடலின் சிப்பியிலேவீழ்ந்தாக்கால் (௩௩௭)
விலைமதிக்கவொண்ணாத வெண்முத்தினையினும்
தலமீதிலிவ்வாறு சற்பாத்திரமறிந்து (௩௩௮)
கொடுப்பதேதர்மமிந்தக் கூறறிந்துசெய்யாட்டால்
விடுப்பாய்க்கொடுப்பதெல்லாம் வீணாகுமென்றனரே (௩௩௯)
காரிருளிற்புற்றடியிற் கண்டபழுதைதனைச்
சீறுமுயர்பாம்பென்று செப்புவார்தப்பாமல் (௩௪0)
உத்தமர்கள்தாசிவீட் டோரமாய்ப்போனாலும்
சத்தியமாயுத்தமரைச் சமுசயமாய்ச்சொல்வார்கள் (௩௪௧)
வீணைகப்போகா விடந்தனிலேபோகவொண்ணா
தோணாமற்போனக்காற் றுன்பம்வரும்பின்னிழுக்காம் (௩௪௨)
தேசிவந்தாற்பசுவைத் தேடாரதிமோகத்
தாசிவந்தாற்றனது தாரமதைத்தேடார்கள் (௩௪௩)
ஆசையாலெப்பொருளும் அபகரிக்கவேண்டுவர்க்கு
ரோசமில்லைக்கேடுகெட்ட லுத்தரிலும்லுத்தர்களாம் (௩௪௪)
அன்னைபிதாமூத்தோ னாசானரசனுடன்
பின்னைப்பெரியோர்கள் பிராணசினேகிதர்கள் (௩௪௫)
ஆகவெழுவர்களு மழையாதிருந்தாலும்
போகலாமேவலியப் புணையொன் றுமீனமில்லை (௩௪௬)
மலைகானஞ்செல்லநன்று மல்லாதுதான்றரித்த
கலைகிழித்துக்காவியிட்டுக் கௌபீனங்கட்டனன்று (௩௪௭)
ஓடெடுத்துவாங்கியே யுண்ணநன்றியாவர்களும்
நாடாவனத்தினிற்போய் நாடுவதுநன்றாகும் (௩௪௮)
ஈயாதலோபியிட மேழைம்புலவருக்கு
ஞாயமிதுவென்று நவின்றாரேமுன்னூலோர் (௩௪௯)
வெள்ளாட்டியானவளை விரகத்தினாலணைந்தால்
உள்ளகுலமும்போ யொழுக்கமெல்லாங்கெட்டுவிடும் (௩௫0)
வேசையரைச்சேர்ந்தாக்கால் வெட்கமில்லைப்பொன்சேதம்
ஆசையாலேவிதவை யானவளைச்சேர்ந்தாக்கால் (௩௫௧)

ஆயிசுமேதான்குறையு மகல்வாளிலட்சுமியும்
தூயர்பிறர்தாரத்தைச் சோரத்திற்சேர்ந்தாக்கால் (௧௫௨)

வன்னரகஞ்சேர்வரிவை யாகாதுநாளுமென்று
முன்னோர்வடநூல் முறையாயுரைத்தனரே (௧௫௩)

செல்லுமிடமானாலுஞ் செல்லாவிடத்தினிலும்
பொல்லாதகோபமொரு போதும்வைக்கலாகாதே (௧௫௪)

இன்னவகையினா லெய்துமெய்தாதெனவே
தன்னிலறிந்துசெய்யா தாராகினஷ்டம்வரும் (௧௫௫)

கள்ளுண்டாலுற்ற காரணமெல்லாம்வெளியாம்
கொள்ளைவிரும்பிற் கொலைகள்வந்துநேரிடுமே (௧௫௬)

சூதாடிலிம்மையிலே துன்பம்வருமல்லாது
சேதாரமாகுந் திரவியங்களுள்ளதெல்லாம் (௧௫௭)

ஆகாயவீதிதனக் காதித்தன்ரத்தினமாம்
வாகானகல்விகற்றோர் மாசபைக்குரத்தினமாம் (௧௫௮)

நயனந்தனக்குரத்னஞ் சார்ந்தவழகுள்ளபெண்கள்
நயமானவீடதற்கு ரத்தினஞ்சற்புத்திரராம் (௧௫௯)

ஏமனைவென்றுசெய மேற்பவரேயானாலும்
மேன்மைசெறிபெரியோர் வெம்பகையொன்றாகாது (௧௬0)

ஆர்க்குந்திருமா தனுக்கிரகமுள்ளளவும்
பாருக்குளெந்தப் பகையுநெருங்காது (௧௬௧)

கூடாதகாலங் குறுகிவருங்காலம்
வீடானதிலிருந்து வினைவிளையுந்தன்னாலே (௧௬௨)

தாரித்திரர்கள்பசி தாங்குவதேமிக்ககொடை
ஏற்றபணக்காரர்க் கீவதுவேவட்டியுமாம் (௧௬௩)

எளியோருடனெதிர்த்தே யெண்ணுமல்வைவதிலும்
விழிகாணாதோடென்று விரட்டுவதேநன்றாகும் (௧௬௪)

அன்பில்லாதாரிடத்தி லதிகவுறவதிலும்
பின்புமவருடைய பெருத்தபகைநலமாம் (௧௬௫)

வேண்டாப்பெண்டீரைநிதம் வீணாய்வைதேசுவதில்
வேண்டாம்நீயென்று விரட்டிவிடலுத்தமமாம் (௧௬௬)

சாலவேவாழ்வுடையோர் சாவதற்கஞ்சுவராம்
சாலவறுமையுற்றோர் சாவதற்கஞ்சாராம் (௧௬௭)

பாரிலேயீகையுள்ளோன் பாக்கியமெவ்வாறென்னில்
பூருவபட்சப்பிறை போலவளர்ந்திடுமாம் (கசுஅ)

ஈயாதான்செல்வமது எத்தனையுண்டாயிடினுஞ்
சாயுமமரபட்சச் சந்திரன்போற்றேய்ந்திடுமாம் (கசுகூ)

என்னவறுமையுறினு மேற்பதொன்றில்லாவிட்டால்
அன்னவனேபாக்கியவா னாகுமென்றுசொல்லிடலாம் (கஎo)

பாரித்தசெல்வர்கள்தான் பலர்க்குதவியில்லாட்டால்
தாரித்திரரென்று தப்பாமற்சொல்லிடலாம் (கஎக)

கைபானதுகமது கண்ணிலேகுத்திவிட்டால்
கையைத்தரிக்கின்ற காரணமுண்டோவதுபோல் (கஎஉ)

இளையோர்தமையடைந்தோ ரேதுகுற்றஞ்செய்தாலும்
பிழைபொறுக்கவேண்டுவதே பெரியோர்முறைமையதாம் (கஎந)

அழகிளமைமூப்பு மயிஸ்வரியமிந்நான்கும்
வளமுடனேநம்முடைய மரணவரைநில்லாது (கஎச)

நன்னயஞ்சேர்பாலுடனே நல்லதண்ணீருங்கலந்து
அன்னத்தின்முன்புவைத்தா லாவின்பால்மட்டுமுண்ணும் ()

தண்ணீரைத்தள்ளுந் தகமைபோலேயுலகம்
விண்ணாணமாயுரைத்தா வீணாலேப்பாராமல் (கஎசு)

எண்ணியேநுண்ணியனா லென்பதனைக்கற்றக்கால்
மண்ணிற்சுகமும்வரும் மறுமையிலேசொர்க்கமுறும் (கஎஎ)

இட்டமுறுமோகஸ்திரீ யேதிழ்ச்சிசெய்தாலும்
திட்டியடித்தாலுஞ் சினம்வரவேமாட்டாது (கஎஅ)

இன்பம்பொருளுமிக வெய்துவதாலுமதிற்
றுன்பம்வருமென்றறிந்தாற் சொற்பனத்திலேக்கவொண்ணா ()

பயனில்லாவார்த்தைசொல்லிப் பலநாளுங்கோளுரைத்தால்
தயவாயவர்செய்யுந் தர்மம்பலியாது (கஅo)

ஊரார்பகைதுன்ப மோயாமகாவறுமை
மூாறுதெனவுமுன்னாள் வள்ளுவனார்சொன்னாரே (கஅக)

வாழ்வுள்ளோரானாலு மகாஞானியானாலும்
தாழ்வுள்ளோரானாலுந் தயிரியவானாலும் (கஅஉ)

நாடொப்பனசெகிழ லாகாதொருநாளு
மூடத்தனமாக முன்பின் [illegible] (கஅந)

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY

அரூபியுமான அலகையோடொக்குமென்றும்
பிறகவனைச்செத்த பிணத்தோடேசேர்க்கவென்றார் (௧அ௪)
பொருளில்லாதார்க்கிந்தப் பூமியிலேகீர்த்தியில்லை
அருளில்லாதார்க்கு அவ்வுலகத்தேதுமில்லை (௧அ௫)
ஊன்தின்பவர்க்கு வொருபோதருளுமில்லை
தானதர்மஞ்செய்தாலுஞ் சாம்பரிலேவிட்டநெய்யாம் (௧அ௬)
வாக்கிலொன்றுபேசி மனதிலொன்றுவைப்பதுவும்
யார்க்குநல்லாரென்றுகள்ள வாசாரஞ்செய்வதுவும் (௧அ௭)
காமக்குரோதமுற்றுக் கன்னியரைக்காதலிப்பார்
மேன்மைச்சடைவளர்த்து வெண்ணீற்றைப்பூசிடுவார் (௧அஅ)
தாடிவளர்த்துத் தலைமொட்டைசெய்திடுவார்
பாடிப்படித்துப் பாதுகையின்மேல்திரிவார் (௧அ௯)
மகத்திவருமல்லவல்ல வாய்ப்பிழைப்புக்காத்திரியும்
செகச்சாலக்காரரிவர் சித்தியொன்றுமில்லையென்பார் (௧௯0)
ஆவென்றபாவமொன்று மற்றுற்பிறவியரும்
சீவன்முத்தனுகுமென்று செப்பினர்முன்னூலோர் (௧௯௧)
பிறவுயிரைக்காத்தல் பேதமில்லாமனது
விரதபங்கமில்லாமை வெகுளாமையிந்நான்கும் (௧௯௨)
தவமிதுவாமென்றுந் தங்குமெய்ஞ்ஞானமென்றுஞ்
சிவயோகியாவரென்றுஞ் செப்பினர்வள்ளுவரும் (௧௯௩)
மன்னவரேயானாலு மற்றெவர்களானாலு
மென்னவிதமாயோ ரிடர்வருமென்றேயறிந்தால் (௧௯௪)
கைத்தாணயமதனைக் காவாமற்போனக்கால்
மகத்தானவாழ்வுகெடும் மாநிலத்திற்றுன்பமுண்டாம் (௧௯௫)
மாறிணிலையும் வல்பிணியுந்தீக்கோளும்
வேறுபகைவர்கள்வர் மேலுமேவற்பகையும் (௧௯௬)
வாராதுதற்கால வகையறிந்துதீர்ப்பவரை
ஆராய்ந்தறிந்து அவரைத்துணைக்கொளலாம் (௧௯௭)
ஈகையில்லாமாந்த ரிருந்தென்னிறந்தென்ன
ஆகையாலேயிருக மதனிலேசேர்க்வென்றார் (௧௯அ)
தலமீதில்மிக்கான சாத்திரங்கள்கற்றாலு
மேலகவியற்கைக்கனே யொன்றும்விடலாகாது (௧௯௯)

இல்லாதாரானாலு மிரந்துமுலகவளம்
வல்லமையாய்ச்செய்தவரே மாதவருக்கொப்பாகும் (சoo)
வலியாரெளியாரு மானவான்மூவரிட
மலிவானகோபங்கள் வைத்தாரேயாமாகில் (சoக)
நாடாளாம்லட்சுமியும் ராசர்பகைநேருங்
கேடாய்முடியுமென்று கிளர்த்தினாளவ்வையுந்தான் (சoஉ)
எப்போதுங்கீர்த்திசற்று மில்லான்றனைச்சுமக்கும்
வெப்பினாற்பூமி விளைவுகுன்றிப்போய்விடுமாம் (சoங)
குற்றமில்லாமற் கொடுத்துப்புகழ்தேடானைச்
செத்தபிணத்தோடே சேர்க்கவென்றார்வள்ளுவரும் (சoச)

## காலம்.

தந்தைதாய்புத்திசொன்னாற் றள்ளிமுனியுங்காலம்
நிந்தனையாய்ச்சற்குருவை நிகழ்த்துங்கொடுங்காலம் (சoரு)
பெரியோரைத்தூஷணித்துப் பேய்க்குதவுமிக்காலம்
அரிசிவனைநிந்தனையா யகம்பேசுமிக்காலம் (சoசு)
மெய்யேபொய்யாங்கால மேலோர்கீழாங்காலம்
பொய்யேமெய்யாகப் பொருந்துமிதுகாலம் (சoஎ)
வன்சமரிலோடினவர் வரிசைபெறுங்காலம்
அஞ்சியேயாணடங்கி யரிவையர்மேலாங்காலம் (சoஅ)
இன்பமுறுநூல்படித்தா லிகழ்ச்சிபுகல்காலம்
பண்பில்லாநயையாண்டிப் பாட்டைமெய்க்குந்துற்காலம் (சoகூ)
இனிதானசற்குணர்க்கொன் றீயாக்கலிகாலம்
அனியாயக்காரருக்கு மடிக்குதவுந்துற்காலம் (சகo)
பெண்டாட்டிவைதாலும் புருஷன்குறியாமற்
கொண்டாடிக்கொண்டிருக்குங் குலாமருக்கேயாங்காலம் ()
ஆனகலிகாலத் தடைவிதுவேயானாலு
மானபரனைவனும் வையகத்திலுண்டெனலாம் (சகஉ)
இருப்பார்க்கொருகடனு மெய்தாதகாலமுமாம்
ஒருக்காலுமீயார்க் குதவுவாரிக்காலம் (சகங)
ஆசாரந்தர்மங்க ளங்கசுத்திமூன்றுமில்லார்
வேசைவெள்ளாட்டிகளே மேல்வட்டமாங்காலம் (சகச)

தேடியிடுவார்களுக்குத் தேவியர்கிட்டாக்காலம்
பேடிப்பயல்களுக்குப் பெண்டுகொள்வாய்க்குங்காலம் (௪௧௫)
சுகமாய்க்குடிப்பிறந்த சுதாகரர்க்குமேன்மைகொஞ்சம்
விபசாரத்திற்பிறந்தோர் மேலவராமிக்காலம் (௪௧௬)
கொண்டபெண்ணைவிட்டுக் கொடிதானலவ்வாடி
முண்டைகளைக்கொண்டலையு மூடர்மேலாங்காலம் (௪௧௭)
சொந்தமணவாளனையுந் தூஷணித்துச்சோரத்தில்
அந்திபகலூர்சுற்று மவிசாரிக்காங்காலம் (௪௧௮)
மேற்குலமுங்கீழ்க்குலமும் விபசாரத்தில்மிஞ்சி
வாகுபெறும்வேசையர்கள் வறுமைக்குள்ளாங்காலம் (௪௧௯)
பிள்ளைவயதில்மிகுத்தாற் பிதாவினதுசொற்கேளான்
தெள்ளியதோர்வித்தைகற்றால் சீஷன்குருவைத்தேடான் (௪௨௦)
பெண்டானவல்லியவள் பேச்சில்மிகுத்தாக்கால்
கொண்டகணவனையுங் குறியாகவெண்ணாளாம் (௪௨௧)
பாரோர்களேய்தீர்ந்தாற் பண்டிதரைத்தேடார்கள்
சீரானசெல்வம்வந்தாற் றெய்வமதைப்பேணார்கள் (௪௨௨)
தன்னுடையமாதா தமையன்மனையாட்டி
மன்னவர்கடன்றேவி மாமியாரானவரும் (௪௨௩)
தெய்வநிகரான தேசிகனார்தேவியிவ
ரைவைரையுந்தாயென் றருளினார்முன்னூலோர் (௪௨௪)
பெற்றபெண்போலவுமே பேணிமருமகளை
வைத்தாதரித்து வருமாமியேதாயாம் (௪௨௫)
தந்தைதனக்கிளைய தாரமந்தக்கைகேசி
பிந்தவருஞ்சித்ராங்கி பிள்ளைகட்குச்சத்ராதி (௪௨௬)
பின்தாரப்பிள்ளையென்று பேதகமில்லாதமனக்
குந்திதனக்கொப்பான கோதைமுதல்மாதாவாம் (௪௨௭)

பிதா.

தன்னையேபெற்றவருஞ் சற்குருவுமன்னவரும்
மன்னுந்தமயனுடன் மாமன்வளர்த்தவரும் (௪௨௮)
வித்தைவருவித்தோர் வெங்கலியைத்தீர்த்தவரும்
மற்றுமொருவாபத்து வரும்போதுகாத்தவரும் (௪௨௯)
ஒரொன்பதுபேரு முற்றபிதாவென்று
கூறுமனுநீதிக் கொள்கையிதுவேயாகும் (௪௩௦)

கல்விவருவித்துக் கடனொன்றுமில்லாமற்
செல்வமுடன்வைத்த திறலானோர் தந்தையுமாம் (சஙக)

## மைந்தர்.

அற்பராம்நூறுபிள்ளை யாறுலும்பெற்றுமென்ன
சற்புத்திரனொன்றுனுற் றலைமுறையெல்லாம்விளங்கும் (சஙஉ)
தந்தைதாய்வாக்கியந் தமயன்குருவாக்கியம்
சிந்தைதனிற்சத்தியமுந் தெய்வவிசுவாசமுடன் (சஙங)
இத்தகைமையாறுடையோ னினியதசரதன்றன்
புத்திரனுக்கொப்பான புத்திரனேபுத்திரனும் (சஙச)
எத்தனைதான்செல்வத் தியல்போடிருந்தாலும்
புத்திரனில்லாவாழ்வும் போசனமுநஞ்சாகும் (சஙரு)
தந்தைதாய்வாக்கியமது தன்னைப்பரிபாலித்தோர்
நந்தாத்தசரதனும் ராசகுமாரனென்பார் (சஙசு)
பிதாவுடையவாக்கியம் பிசகாதுகாத்தவன்றான்
சுதாகரரில்மிக்க சுதன்பரசுராமனென்பார் (சஙஎ)
ஆசான்றன்வாக்ய மனுவுந்தவறுதான்
வாசாலன்சத்யமுள்ள வாய்மைப்ரிச்சந்திரனும் (சஙஅ)
தமையனுரைதட்டாத சற்புத்திரரானோர்
தமையுமங்கேசீர் தூக்கிற் பருமருக்குநேரிளையோர் (சஙகூ)
தந்தைபேர்தன்பேருந் தரணியின்மேல்விளங்கத்
தந்தைதாய்சொல்மறுக்காத் தன்மையோன்புத்திரனும் (சச0)
தந்தைக்கிசைந்தமறு தாரமேதன்றுய்ப்போல்
வந்தனைசெய்மைந்தர் மனுகுலத்துமைந்தரொப்பார் (சசக)
நல்லார்பொல்லாரென் றிரண்டுவகையாயுலகஞ்
சொல்லுவதைவிந்திலுற்ற சுதராலறிந்திடலாம் (சசஉ)

## சோசியம்.

உற்பவித்தநாளும்பின் னென்பதுடனென்பதுவும்
வைப்பேதும்வைக்கவொண்ணு வழிபோகலாகாது (சசங)
வல்பிணியுந்தீராது மருந்துண்ணலாகாது
கல்யாணமெண்ணைமயிர் களைந்திடவுமாகாது (சசச)
இல்லம்புகுத லின்னுதுணணலுமவ்வைதகக
நல்லறங்கள்செய்திடவு நற்பணிகள்நற்றாசு (சசரு)

தானுந்தரிக்கவிது சார்ந்தநாளாகுமென்று
மேனுட்கணித விதியாலுரைத்தனரே (௪௪௬)
திங்கள்முதனாளுமது சென்றகடைநாளுடனே
மங்கையர்கள்பூப்புநாள் வாசியமாவாசியிலும் (௪௪௭)
சென்மநாள்மூன்றினிலுஞ் சேயிழையைப்புணர்ந்தால்
தன்மமல்லவாழ்நாளுந் தான்குறையுநோயணுகும் (௪௪௮)
தலைக்கெண்ணைபோசனமுஞ் சவரமுடனித்திரையும்
நலத்தைக்கொடுக்குமந்த நற்கிழக்குதெற்கதுவும் (௪௪௯)
மற்றவிருதிசையு மாகாதுமத்திபமாம்
அத்தமழிவதல்லா லாயுள்விர்த்தியில்லையென்றார் (௪௫௦)

### இலட்சுமியிருப்பிடம்.

மாயவன்றன்மார்பினிலு மன்னரிடத்தினிலுந்
தூயதொருவில்வந் துளவங்கடப்பமலர் (௪௫௧)
தாமரையின்பூவினிலுஞ் சாகரத்திற்கங்கையிலுஞ்
சேமமுறுமியானை தேசிமுகத்தினிலும் (௪௫௨)
ஊதுகின்றசங்கமுட னுருத்திராட்சஞ்சாமரத்தில்
கேதனத்திற்றேரினிலே கெட்டபோதுன்னார்பால் (௪௫௩)
சுத்தமுள்ளவீரரிடஞ் சுத்தமாகியமனையிற்
சத்தியஞ்சேர்வாக்குடையோர் தர்மபரிபாலனர்கள் (௪௫௪)
அழகுஞ்சுசிகரமு மமர்ந்தகுணப்பெண்ணிடத்தில்
வளமைதரும்பசுக்கள் வாழுமிடந்தனிலும் (௪௫௫)
மாகனகம்போல்சுத்த மானவிடந்தனிலும்
கோகனகமாது குடியிருப்பாளெந்நாளும் (௪௫௬)

### மூதேவியிருப்பிடம்.

சோரஸ்திரீயிடத்திற் சூதகப்பெண்ணிழலில்
பாரக்கிடாவிற் பலவிளக்காப்பேரிடத்தில் (௪௫௭)
சூளைப்புகையில் சுடுகாடெரிபுகையில்
காளையாங்காமுகர்பால் கழுதையிடத்தினிலும் (௪௫௮)
கள்ளிநிழலதிலுங் கைம்பெண்கடன்னிடத்திற்
கொள்ளிக்கரியுமியுற் கொட்டைநூற்பாரிடத்தில் (௪௫௯)
நீசர்நிழலில் நிட்டையில்லாதாரிடத்தில்
பேசுங்கடுஞ்சினத்தோர் பேடியிடந்தனிலும் (௪௬௦)

சுத்தமில்லாமனையிற் சுராபானரிடமிரவில்
வெற்றிபெறும்வேல் விளாவினிழல்தனிலும் (௪௬௧)
என்றுஞ்சுசிகரங்க ளில்லார்விதவைகளை
யொன்றியணைவோர்பா லுதயந்துயில்வோர்பால் (௪௬௨)
மீதூணருந்துவர்பால் மேன்மைசற்றுமில்லாத
மூதேவியாளுநித மோடிக்குடியிருப்பாள் (௪௬௩)
பாங்காகநாளும் பகற்புணர்ச்சிசெய்பவருந்
தாங்காதிடக்கையாற் றம்பூலந்தின்பவரும் (௪௬௪)
போசனங்கள்செய்கின்ற போதிற்சிரசினிலே
தூசுபுனைந்துண்ட துன்மார்க்கரானவரும் (௪௬௫)
காலையிலுமாலையிலுங் கண்டுயில்வார்தன்னுடனே
நாலுபேரானவர்பால் லட்சுமியுநில்லாளே (௪௬௬)

பகை.

பாரம்பெரியகத்தி பஞ்சுதனக்கேநாளும்
சூரியனுஞ்சந்திரனுந் துஷ்டரவினால்மறையும் (௪௬௭)
சிற்றெறும்பால்யானை திகைக்குமதுபோல
அற்பரால்மேலோர்க் கவதிகளும்வந்தெய்தும் (௪௬௮)
தந்தைதாய்சொற்கேளார் தடுப்பார்கொடுப்போரை
அந்தக்கொடியோரு மட்டமத்திலேசனியாம் (௪௬௯)
சபையிற்பிரசங்கந் தன்னிற்பழுதுரைப்போர்
அபயமிட்டுப்பேச்சில்மிச்ச மானதொருபெண்டிரும் (௪௭௦)
தாமாய்விரோதியுடன் றுனிவர்கள்மூவருந்தான்
சேமத்திலேவந்த செவ்வாய்க்கிணையெனலாம் (௪௭௧)
தன்னைமிஞ்சுமடிமை சந்திராஷ்டம்பங்குக்காய்
தன்னைச்சபையேற்றுந் தம்பிசென்மச்சூரியனும் (௪௭௨)
சகோதர்க்குவஞ்சனைசெய் தமயனுமென்பவன்றான்
மகாபாவிமூன்று மிடத்துவியாழமதாம் (௪௭௩)
பார்த்திபர்கள்மெய்த்தவன்று பழுதுசொல்லிக்கெடுப்போன்
ஏற்றமிடும்பொல்லாத இராகுவுடன்கேதுவுமாம் (௪௭௪)
சாலக்கடன்பட்ட தந்தையருமார்க்குமனு
கூலமாயுட்பட்டுக் கொண்டுதிரிதாயாரும். (௪௭௫)
வித்தையில்லாப்பிள்ளையுடன் வேசையாம்பெண்டாட்டி
சத்துருவாநால்வரென்று சாற்றினார்முன்னூலோர். (௪௭௬)

வேங்கைபதுங்குவது மேஷம்பின்வாங்குவதும்
பாங்காய்ப்பகையுறவும் பாம்புசாய்ந்தாடுவதும் (௪௭௭)
நல்லோர்பெரியோர்க ணயந்துவணங்குவதும்
மெல்லுவிடச்சிரிப்பும் விழிமகிழுமின்னொளியும் (௪௭௮)
மிக்கானவில்வளைவும் வேழமுறங்குதலும்
உக்கிரதளஞ்சமரி லொன்னலர்க்கொதுங்குவதும் (௪௭௯)
இத்தகையாமீரைந்து மெளிதாய்நினைக்கவொண்ணு
மத்திபமுமாமுயிர்க்கு வாதைகளுமுண்டாக்கும் (௪௮௦)
சொற்குற்றம்பாராட்டித் தொடுவழக்கைச்செய்பவர்பால்
பற்காட்டிச்சீவனங்கள் பண்ணித்திரிவதுதான் (௪௮௧)
வலிதானவாடரவின் வஞ்சப்படத்தினுள்ளே
எலிவாழ்ந்தவாறென் றியம்பினார்முன்னூலோர் (௪௮௨)
பண்பாய்க்கடுவுறவு பண்ணவுந்தானாகாது
பின்பவரையும்பிரிந்தாற் பிணக்காம்பகைநேரும் (௪௮௩)
அங்கபங்கமானாலு மசூசியங்களானாலும்
தங்கள்குலத்தேது தாழ்வுற்றிருந்தாலும் (௪௮௪)
நிந்தனைகள்சொல்லி நெகிழ்ந்துரைக்கலாகாது
எந்தக்குலமு மிழிவில்லாதில்லையில்லை (௪௮௫)
துன்பம்பழிபகையுந் துடரும்பழிபிழைகள்
பின்பவர்க்குமெய்தும் பெருமைசற்றுமில்லாது (௪௮௬)

பகைவெறுப்பு.

நேர்ந்தவினைவலியு நேர்வார்கடன்வலியும்
சேர்ந்ததுணைவலியுஞ் சீர்தூக்கிச்செய்வதுவாம் (௪௮௭)
கூடாதகாலமடைக் கொக்கதுபோலேயிருப்பாம்
கூடுமந்தக்காலமடைக் கொக்கதுபோல்வெற்றிகொள்வாம் ( )
துட்பவெறும்பெலாங்கூடி நோகாமலேயேற
ஒப்பில்கருங்கற்குழிந்த வுவமைபகைவெல்லுதலாம் (௪௮௯)
மெள்ளமெள்ளப்பாய்ந்தநீர் மிக்ககடுமலையின்
கல்லைக்கரைக்குங் கதைபோற்பகையறுத்தல் (௪௯௦)
காலமதுவறிந்து காக்கைவெல்லுங்கூகைதனைக்
காலமதுதப்பினாற் காக்கைதனைக்கூகைவெல்லும் (௪௯௧)
சிலநாளாய்யானையொரு தேங்காயினோடடக்கிப்
பலிதமுள்ளவேளைகண்டு பாகனையேவென்றதுவாம் (௪௯௨)

பண்பாகக்காலமது பார்த்துப்பகைசெலுத்தும்
பண்பிதுவாமென்று பகர்ந்தாரேமுன்னோர்கள் (௪௯௩)
உற்றபகைவரென்று வுள்ளாக்கிக்காரியங்கள்
பெற்றபிறகுபகை பேதமதைக்காட்டுவதாம் (௪௯௪)
காலத்தின்சீலங் கண்டறிந்துகொள்ளாதார்
கோலமழிந்து குரங்காவார்தப்பாது (௪௯௫)

## சேரிடம்.

சந்தனவிருட்சமதைச் சார்ந்தமரமவ்வாசம்
அந்தமகாமேரணைந்த வக்காகமன்னிறமாம் (௪௯௬)
பாலிற்கலந்தநீர் படிகமணிக்குள்வடமும்
சாலமரகதக்கற் சாய்கைபட்டதிம்மூன்றும் (௪௯௭)
தன்னிறங்களைக்கொடுக்குந் தன்மைபோல்நல்லோரை
நன்மையாய்ச்சேர்ந்தோர்க்கு நற்குணமேயுண்டாகும் (௪௯௮)
நல்லாரைக்காணபதுவு நல்லோர்சொற்கேட்பதுவு
நல்லார்குணமுரைத்தா னன்மையுண்டாநன்றாகும் (௪௯௯)
ஆசாரமன்பு மறிவடக்கமுள்ளோரைத்
தேசத்திற்கண்டு சேர்ந்தாற்பெருமைவரும் ✓ (௫00)
கதிரோனுதிக்கையிலே கண்டபெருஞ்சாய்கை
மதியமதிலேகுறுகும் வாறுசிறியோரிணக்கம் (௫0௧)
மதியந்திரும்பினபின் வர்த்திக்குஞ்சாய்கையைப்போல்
சதிராய்ப்பெரியோரைச் சார்ந்தாலேநன்மைவரும் (௫0௨)
கற்றபெரியோருறவு கரும்பைநுனியிலிருந்
துற்றநல்லவேர்வரைக்கு முண்டருசிபோலாகும் (௫0௩)
சிறியோருடனுறவு தின்கரும்படியிலிருந்
துரியநுனிவரைக்கு முண்டருசிபோலாகும் (௫0௪)

## செல்லாவிடம்.

கடலோடுங்கப்பலது கரையிலேயோடாது
புடவியிலேயோடுந்தேர் புனலிலேயோடாது (௫0௫)
தண்ணீர்முதலையதைத் தந்திவெல்லமாட்டாது
நண்ணுபுலிகாடன்றி நாடுற்றாற்கேடடையும் (௫0௬)
செல்லுமிடமிவ்வாறு திறஞ்செலுத்தவேண்டுமன்றிச்
செல்லாவிடந்தனிலே திறஞ்செலுத்தக்கூடாதே (௫0௭)



MAHAMAHOPADHYAYA

## யோகம்.

மன்னர்மெச்சிக்கொடுக்கும் வரிசையதிகாரம்
பன்னுஞ்சாம்பிராச்சியமும் பட்டாபிஷேகமென்பார் (௫௦௮)
நல்லஆணமானமின்ஞள் நாடிவலியவந்து
புல்கிடிலேயோகம் புத்தமிர்தசித்தமுமாம் (௫௦௯)
மண்ணிற்புதைத்தபொருள் வாதமுறைக்காசையுற்று
கண்ணுவார்க்கெய்தாம னண்ணுர்கட்கெய்துவதும் (௫௧௦)
மிஞ்சும்பயிர்விதைத்து விளைவுகுன்றிப்போவதுவுங்
கொஞ்சம்பயிரிடுவோர் கூடிவந்துவாழ்வதுவும் (௫௧௧)
கப்பல்வியாபாரங் கனங்குறைந்துபோவதுவும்
சொற்பமாய்வாணிபஞ்செய் தோர்களுக்குக்கூடுவதும் (௫௧௨)
காணுமற்காணுமற் காவலர்கள்கேள்வியினுற்
ரேணுதலாய்வலியத் தொழில்கொடுத்துவாழ்வதுவும் (௫௧௩)
மேனுளிற்றந்தைதாய் விட்டகுறையாகுமென்றும்
தானுமுன்னுள்செய்திருந்த தானதர்மமாவதென்றும் (௫௧௪)
அந்நாள்நற்பூவெடுத்து அர்ச்சனைகள்செய்ததென்றும்
இந்நாட்பெரியோருக் கீய்ந்துவரம்பெற்றதென்றும் (௫௧௫)
லட்சுமிகடாட்சமிந்த நான்குவகையோர்க்குமென்று
உச்சிதமாய்முன்னே ருரைத்தாருலகோர்க்கு (௫௧௬)
திருமடந்தைசேரில் சிறப்புங்கனமுமுண்டு
பொருளுந்துரும்பாகும் பொல்லாருநல்லோராம் (௫௧௭)
செல்லாதவார்த்தைசெல்லுஞ் செய்யுமரியாதையுண்டாம்
எல்லாருமேபுகழ்வா ரெதிராளியுமுறவாம் (௫௧௮)
கீழோருமேலோராய்க் கிளையுமிகவிர்த்தியுண்டாம்
தாழாப்பெருங்காற்றுத் தண்ணீர்போற்கூடிவரும் (௫௧௯)

## மனவூக்கம்.

வீரப்புலியுயிரை விட்டாலேதோல்கொடுக்கும்
சூரனுயிர்போமளவுந் தோர்வையென்றுபின்வாங்கான் (௫௨௦)
உத்தமியெந்நாளு முயிர்க்குலயமில்லாமல்
சற்றுகிலும்பிறர்க்குத் தன்னியத்தைத்தான்கொடுக்காள் (௫௨௧)
ஏற்கைபோய்ச்சாலவுந்தா னென்னதுன்பமுற்றாலும்
ஊக்கமதுகைவிட்டா லுயிர்க்குலயம்வந்தெய்தும் (௫௨௨)

உள்ளஞ்சிதறும லொன்றிணையேகைப்பிடித்தால்
தெள்ளுமருள்பொருளுஞ் சித்திமுத்திரண்டுமெய்தும் (௫௨௩)
பல்லாய்நினைக்கவொரு பலனதுவுமெய்தாது
அலைவாய்த்துரும்பதுபோ லலைந்துகெடுஞ்சித்தியில்லை (௫௨௪)
ஐம்புலனையுஞ்சிறியோ ரடக்குவதுவேயருமை
செம்பொனெல்லாந்தேடித் தினங்கொடுப்பதேயருமை (௫௨௫)
தெண்டிக்கவல்லன் சினம்பொறுப்பதேயருமை
கொண்டகணவற்கிசைந்த கொம்பனையுமேயருமை (௫௨௬)
நேசமொன்றில்வேசைமன நிற்பதுவுமேயருமை
தேசத்திவ்வைவரையுந் தெய்வப்பிறப்பெனலாம் (௫௨௭)

அளவிடாமை.

பொங்குகடலாழம் புருஷயோகஞ்சூது
மங்கையர்கடன்மனமும் வஸ்துவின்றனிர்ணயமும் (௫௨௮)
வானளவுமாற்று மணலுமழைத்துளியும்
வானிலுடுகணமு மண்ணுண்டராசரையும் (௫௨௯)
உற்றபெரியோர்க ளுள்ளக்கருத்தளவுங்
கற்றோர்கருத்துங் காமன்கணைமயலும் (௫௩0)
மானிடர்கள்சென்ம மனுதகொகையுமாமணையு
மானபருவதங்க ளனைத்துமதினிரையும் (௫௩௧)
பார்க்குள்ளேயிந்தப் பதினறுவல்லபத்தை
யார்க்குமளவிடவு மாகாதுகண்டீரே (௫௩௨)
இறந்தார்பிறந்தார்க ளிவ்வளவாமென்றுனுந்
துறந்தார்பெருமைகளைத் தொகையறிந்துசொல்லவொண்ணு ()
ஆயுள்நிதானங்க ளாறிரண்டிலேகிரகந்
தூயநிதானநிலை சொல்லயெவருமில்லை (௫௩௪)
சூரியன்முன்னிற்கலாஞ் சுடுமணலினிற்கவொண்ணு
ஆறணியுமீசர்முன்னே யஞ்சாமற்பேசிடினும் (௫௩௫)
தேசமதில்முக்யச் சிவனடியார்முன்புநின்று
பேசவரிதென்று பெரியோருரைத்திடுவார் (௫௩௬)
வாரியினீராழம் வானளவுமாமலையும்
ஆறின்கரைமணலு மாகாசத்தேயுடுவும் (௫௩௭)
அன்பாமிவையைந்தி னளவுகொண்டுசொன்னுலுங்
கொம்பனையார்நெஞ்சக் குறிப்பறியவொண்ணுதே (௫௩௮)

MAHAMAHOPADHYAYA
Dr. U.V.S. IYER LIBRARY

வெள்ளம்பறவைகளும் விலங்குடனேவேசையர்கள்
உள்ளமிவைநான்கு மொருவழியாய்நில்லாதே (௫௩௯)

## உதவி.

வாவியினீரம்பலத்தில் வைத்தமரநிழலுந்
தாவுமணலூற்றுந் தண்ணீரின்பந்தலுடன் (௫௪௦)

பாங்கானசந்தியிலே பழுத்தமரமானதுவுந்
தாங்கும்விப்சாரி தனமும்நிலவினொளி (௫௪௧)

பார்க்குள்விவேகியர்கள் பாக்கியமிவ்வொன்பதுவும்
ஆர்க்குமுபகார மல்லாதுவீணலவே (௫௪௨)

நல்லோர்தேடும்பொருள்கள் நாவலர்க்கும்வேசியர்க்கும்
வல்லகுருவானவர்க்கும் மாதாபிதாவினர்க்கும் (௫௪௩)

புத்திரர்கடன்கிளைக்கும் போற்றுகுலதேவதைக்கும்
உற்றசகோதரர்க்கு முண்டென்றுநம்பினர்க்கும் (௫௪௪)

தர்மமேசெய்பவர்க்குஞ் சார்ந்தவறிஞருக்கும்
இம்மாத்திரம்பேர்க்கு மெய்துமிவர்பொருளே (௫௪௫)

இல்லந்தனக்குத்தன் னேரிழையாளேதுணையாம்
நல்லதேகந்தனக்கு நற்றுணைவரேதுணையாம் (௫௪௬)

தேசாந்திரனுக்குச் சீர்துணையாங்கற்றகல்வி
மாசற்றிகபரத்தில் வருந்துணைதான்செய்ததர்மம் (௫௪௭)

வர்த்தகர்பால்வைத்தபொருள் மன்னவர்கடன்பழக்கம்
உற்றவிவேகிக் குபகாரஞ்செய்ததுவும் (௫௪௮)

பருவத்திற்பெற்றபிள்ளை பக்குவத்திற்கற்றவித்தை
தருணத்திலீரைந்துந் தானுதவுந்தப்பாதே (௫௪௯)

என்னபகையானாலு மிடர்க்குதவிசெய்தல்நலம்
பின்னக்கவிசொலினு மேன்மைசெய்வரேபெரியோர் (௫௫௦)

## உதவாமை.

நாய்பால்சொரிந்துமென்ன நாணல்மிகப்பூத்துமென்ன
பேய்பொன்னைக்காத்துமென்ன பேடிகையிலாயுதமேன் (௫௫௧)

எட்டிபழுத்துமென்ன இண்டுதழைத்துமென்ன
பட்டுபணிசித்திரத்திற் பண்ணியிருந்துமென்ன (௫௫௨)

நற்குணமில்லாதபெண் தங்கநிறமாகியென்ன
நிக்கசபைக்கோழை மிகுகல்விகற்றுமென்ன (௫௫௩)

23480



ஆட்டின்கழுத்தி லதரநுவுநீண்டென்ன
காட்டினிலவெரித்தென் கானலினீர்கண்டுமென்ன (௫௫௪)
வேசைக்குப்பொன்கொடுத்தென் வீணருக்குநன்றிசெய்தென்
மாசுடையவற்பருக்கு வந்தென்னதிகாரம் (௫௫௫)
காட்டுக்காடிமயிர் கறுத்தநிறமாகி
நீட்டியிருந்தாலுமென்ன நெடுகக்குறையிலென்ன (௫௫௬)
இத்தகையாய்ச்சொன்னவிஃ தெண்ணிரண்டுமீயாத
லுத்தர்கள்தம்வாழ்வுக் கொத்திருக்குந்தப்பாதே (௫௫௭)
தேகியென்போர்க்கீயாத சிதடர்தமக்குப்பொருள்
ஆகிவந்தாலுமென்ன அழிந்துபோனாலுமென்ன (௫௫௮)
பேடியழகுகண்டு பெண்கள்மகிழுவதும்
நீடுவஞ்சர்சொல்லை நிசமென்றிருப்பதுவும் (௫௫௯)
கானல்கண்டேயோடுங் கலைமானுஞ்சாலவுயிர்ப்
பாயிலவுகாத்திருந்த பச்சைக்கிளியதுவும் (௫௬௦)
தேனருந்தத்தாழைமலர் சென்றசுரும்பினமுந்
தானுயர்ந்ததேன்கண்டு சப்பாணிமெய்ப்பதுவும் (௫௬௧)
புல்லர்களின்வாழ்வுகண்டு புகழ்பாடிப்போம்புலவர்
வல்லமைக்கொப்பென்று மனுநூலுரைத்திடுமாம் (௫௬௨)
கல்லாமலேட்டினிலே கண்டெழுதிவைத்தவித்தை
உல்லாசவேசையர்க ளுறவுசதமென்றிருந்து (௫௬௩)
மறுதேசம்போனபிள்ளை வஞ்சருடனேநேசம்
வருமென்றேயன்னியர்பால் வைத்தபொருள்பலதும் (௫௬௪)
தன்னைப்பெறுததொரு தந்தைதாயானவரும்
பின்னுமுடன்பிறவாப் பின்னவர்கள்முன்னவர்கள் (௫௬௫)
பேறுகத்தம்வயிற்றில் பெற்றுவளர்க்காதபிள்ளை
ஊராருடையசெல்வ முள்ளன்பிலாதபெண்டீர் (௫௬௬)
சத்தியமாயீராறுந் தருணுதருணமது
உற்றசமயத்துக் குதவாதுகண்டீரே (௫௬௭)
ஆற்றிற்கரைத்தபுளி யனலிலேபோட்டவெண்ணெய்
காற்றிற்பறந்தபஞ்சு காட்டிலெரித்தநிலா (௫௬௮)
விரிந்தகமரினிலே வீழ்ந்ததொருவெண்பாலும்
பரிந்துகடற்சுழியிற் பாய்ந்தடைந்தகப்பலுந்தான் (௫௬௯)
சுட்டமண்ணுனதிலே தெளித்திட்டபன்னீரும்
இட்டமுடன்விழலுக் கிறைத்ததொருநன்னீரும் (௫௭௦)

வீணருக்குச்செய்தநன்றி வேசைக்களித்தபொருள்
காணுமிவைபத்தும் கைகூடாக்காரியமாம் (௫௭௧)

சற்பாத்திரமறிந்து தானஞ்செய்யான்றருமம்
உப்புக்கடல்தனிலு முவர்நிலத்திற்பெய்தமழை (௫௭௨)

பாம்பின்வாய்த்தேரை பரத்தைக்களித்தபொருள்
மேன்பாடுபெற்றபுவி வேந்தரிடம்சேர்ந்தபொருள் (௫௭௩)

தானமாயாருக்குந் தாரைவார்த்துக்கொடுத்துப்
போனபொருள்நமன்கை புகுந்ததொருமன்னுயிரும் (௫௭௪)

ஆனைவாயின்கரும்பு மணைகடந்துபோனவெள்ளம்
மானிலத்திற்கொள்ளையிற்றீ வாதையிலும்போனமுதல் (௫௭௫)

வையத்திவ்வொன்பதுவும் வாராதுவந்தாலும்
அய்யோவுலுத்த னைக்காசுமீயானும் (௫௭௬)

கவரிமான்றன்மயிருங் கற்புடையாள்ஸ்தன்னியமும்
அமையாதவேங்கையின்றோ லதிசூரன்கைவேலும் (௫௭௭)

ஆனாலும்லோபிபொரு ளெந்தும்வரவுயிர்கள்
போனாலேயன்றியொரு போதினுமேகிட்டாதே (௫௭௮)

கண்ணுக்கழகெட்டிக் கனிதாழையின்கனியும்
வன்னமுருக்கின் மலரிவையாலேதுபயன் (௫௭௯)

தாழைமடலோபெரிது சன்னமலர்மகிழாம்
தாழைமலர்வெய்யோன் சாய்கைபட்டால்வாசம்போம் (௫௮௦)

சன்னமகிழமலர் சருகாகக்காய்ந்தாலும்
வின்னமில்லாத்தன்மணமும் விட்டகன்றுபோகாது (௫௮௧)

ஆழியினீரதிக மள்ளியுண்ணலாகாது
ஆழியருகூற்றுவரு மந்நீருநன்னீராம் (௫௮௨)

இங்கிவற்றையொப்பாக வீகைசற்றுமில்லாதார்
அங்கம்பெரிதா யழகாயிருந்துமென்ன (௫௮௩)

தேசதுவில்லாவிடினுஞ் சிறியவுருவானாலும்
பாசமுறுசற்குணமும் பலர்க்குதவியேபெரிதாம் (௫௮௪)

வேசையர்கள்நட்பும் விளக்கினதுவொளிவும்
மோசமிலையிவ்விரண்டு மொன்றாகுமென்றனரே (௫௮௫)

கைப்பொருளற்றால்வேசி கடுகளவுநட்புமில்லை
மெய்ப்பாகவெண்ணெயற்றால் விளக்கொளிவுசற்றுமில்லை (௫௮௬)

## நற்பிறப்புத்தமர்.

பாவபுண்ணியமறிவார் பலபொருளுமிச்சியார் (௫௮௭)
பூவைபலநோக்கார் புராணநெறியுணர்வார்
மாதவங்கள்செய்வார் வன்கொலைகண்டஞ்சுவார்
சூதாடாராயாது துன்பத்துக்குள்ளாகார் (௫௮௮)
உய்யவேயிவ்வா றுடையவர்கள்சற்குணராம்
தெய்வத்தின்றத்துவமாய்ச் செப்பினார்முன்னோர்கள் (௫௮௯)
மாதாபிதாகுரு வானவரைத்தெய்வத்தை
மீதாய்ப்பணியும் விசுவாசமுள்ளவர்கள் (௫௯௦)
தன்தாரமன்றிமறு தாரந்தனைநோக்கார்
புந்திமகிழ்ந்ததிதி பூசைபுரிவோரும் (௫௯௧)
சத்தியமொழிபூர்வ தர்மபரிபாலனர்கள்
சுத்தமுறுநந்தவனச் சோலையதுவைத்தவரும் (௫௯௨)
பார்க்குட்சகாயமதாய்ப் பாட்டைதனைச்சீர்திருத்தி
மார்க்கந்தண்ணீர்ப்பந்தல் மண்டபங்கூவம்வாவி (௫௯௩)
செய்யும்மகாபுண்யத் தேகராமுத்தமர்க்கு
எய்யாமலைபோலே யாதுதுன்பம்வந்தாலும் (௫௯௪)
வெய்யில்தனைக்கண்டு விலகும்பனியினைப்போல்
கைலாசநற்பதமெக் காலுமிவர்க்குண்டாகும் (௫௯௫)
தாமரையின்மாமலருஞ் சுவாதுபுனுகுடனே
பூமருவுதேனும் புணரியுறுசிப்பிமுத்தும் (௫௯௬)
பொன்னுங்கவரிமயிர் புகழ்சேர்கோரோசனையும்
நன்னயஞ்சேராவின்பால் நற்றூசுப்பட்டதுவும் (௫௯௭)
ஈதுபத்தானவைக ளெங்கேபிறந்தாலு
மேதைபெற்றாற்போல்நல்லோ ரெக்குலத்தோராயிலென்ன ()
உப்புங்கர்ப்பூரமது மொன்றுபோலேயிருந்தும்
உப்புக்குங்கர்ப்பூர முயர்ந்தவிலையாகுமன்றோ (௫௯௯)
எல்லோர்க்கும்ரூப மொன்றாயிருந்தாலும்
நல்லோர்தமக்குநிக ராவாரோபாவிகள்தான் (௬௦௦)
பங்கமுற்றமூடர் படபடத்துப்பேசுவது
வெங்கலத்தினோசை விதமாகுங்கண்டீரோ (௬௦௧)
நல்லதங்கக்கலத்தி னுதம்போற்சீராக
மெல்லமிருதுச்சொல் விளம்புவாருத்தமர்கள் (௬௦௨)

பன்றியைக்கண்டால்யானை பாதைவிலகுதல்போல்
நன்றியற்றபேதையர்க ளானோர்வரவுகண்டால் (சுஞ)
அந்தவழிவிலகி யப்பாலேபோகுவது
சிந்தைதெளிமேலோர்கள் செய்கையென்றுசொல்வதுவாம் ()
நன்னயஞ்சேர்பொன்னும் நற்பாலுஞ்சந்தனமுங்
கன்னல்தனையுமென்ன கண்டனைகள்செய்தாலும் (சுoரு)
முற்குணமேனாட்டு முறைபோற்பெரியோர்க்குத்
தக்கயிடர்வந்தாலுஞ் சற்குணமும்போகாதே (சுoசு)
சிவயோகியானவர்க்குச் சென்மமொருக்காலுமில்லை
தவஞ்சேர்ரசவாதி தனக்கணுவும்பஞ்சமில்லை (சுoஎ)
காலைத்துயிலொழிதல் காணுமலேபுணர்ச்சி
மாலைமுழுகி மனைதனிலேசெல்லுவதும் (சுoஅ)
உற்றாரோடுண்ண லுயிரோம்பலிவ்வாறும்
இத்தலத்தில்வாழ்வோர்க் கியல்பென்றுரைத்தனரே (சுoகூ)
உற்றபசுவானதுவு மோர்கன்றையேயீனும்
பத்தானகுட்டிகளைப் பயிலும்பெரும்புலிதான் (சுகo)
கோரமதுசெய்வதற்குக் கொம்பிருந்துமேபசுதான்
வீரமில்லாச்சற்குணத்தால் மேன்மைமிகவுண்டாகி (சுகக)
வங்கிஷமும்விர்த்தியாம் வன்புலியின்கோரத்தால்
பங்கமுறுகுட்டியது பத்தீன்றும்விர்த்தியில்லை (சுகஉ)
நன்மைதுன்மைரண்டுமிந்த நாட்டினுக்குத்தாட்சியதாம்
உண்மையிதுவென் றுரைத்தார்மனுநூலோர் (சுகங)
தெய்வதரிசனங்கள் தெய்வவிசுவாசம்
பொய்யாததானதவம் புத்ரர்கிளையோடுணவு (சுகச)
பெரியோர்கள்சேர்வைகுணப் பெண்ணுளனுபோகம்
குறையாதசெல்வமுநோய் கொள்ளாததேகவிர்த்தி (சுகரு)
தன்மையுடனீன்ற தாய்தந்தைசெய்தவமு
முன்னோர்செய்புண்ணியத்தின் முக்கியமென்றேயுரைத்தார் ()
வித்வான்களானவரு மெய்ஞ்ஞானமுற்றவரும்
வெற்றிப்புலிநகமு மேன்மையுள்ள பூனைமதம் (சுகஎ)
காரானைதந்தங் கவரிமான்றன்மயிருஞ்
சீரானவாறுமெங்கே சென்றாலுமேன்மையுண்டாம் (சுகஅ)

நாயானதுசினந்து னைமக்கடித்தால்நம்முடைய
வாயாலதைக்கடிக்கும் வாறுண்டோவையகத்தில் (௬௧௯)
அறிவில்லாமூட ரனேகமாய்வைதாலும்
பெரியோர்கள்வாய்திறந்து பேசாரொருக்காலும் (௬௨0)
சற்குணத்தினாலே தர்மமதுவந்தெய்தும்
துக்கம்வராதவர்கள் துடங்கினதுகைவசமாய் (௬௨௧)
தாரித்திரமுமில்லை தக்கோர்பயமுமில்லை
பாரிற்புகழ்விளங்கும் பரகதியுமுண்டாகும் (௬௨௨)

### துற்பிறவிதுற்சனர்.

எண்ணுமல்யாதொன்று மியார்க்குமிடர்செய்வார்
எண்ணார்கொலைகளவுக் கிறைச்சிமுதலானதுண்பார் (௬௨௩)
பொய்யுரைக்கவஞ்சார் போசனமுஞ்சாலவுண்பார்
மெய்யிற்சுசியில்லா ரிராட்சதகணமாகும் (௬௨௪)
அஞ்சார்தனிவழிக்கி யாவரையுமேமருட்டி
வஞ்சனையில்வெல்வார் வலியாரையானாலும் (௬௨௫)
ராப்பகலுமாறாமல் நாரியர்தமைப்புணர்வார்
சாப்பாட்டொழுக்கமுடன் தம்முடம்புசுத்தியில்லார் (௬௨௬)
மாதலந்திலிந்த வன்னெஞ்சுடையவர்தான்
பூதகணம்பேய்க்கும் புறம்பாகுமென்றனரே (௬௨௭)
கொம்புளதுக்கைந்துமுழங் குதிரைக்குப்பத்துமுழம்
அன்பானயானைக்கோ ராயிரமுழத்தினப்பால் (௬௨௮)
வண்டிகண்டாலைந்துமுழ மப்பாலாந்துற்சனரைக்
கண்டவுடன்காதவழிக் கப்பாலேயோடநலம் (௬௨௯)
பாம்புமுதலானதற்குப் பல்லதனிலேவிஷமாம்
வீம்பானதேளதற்கு விஷமதுவும்வாலினிலே (௬௩0)
துற்சனரானவற்குத்தேகமெல்லாம்விஷங்கள்
மிச்சமென்றுசொல்லி விதித்தார்மனுநூலோர் (௬௩௧)
வேம்பிற்கசப்பும் மேலாமருக்கொழுந்திற்
சோம்பாமணமிரண்டுந் தோன்றும்போதுண்டான (௬௩௨)
வாறுபோல்துற்குணமும் வாய்ந்தபுகழ்ச்சற்குணமும்
மீளாப்பிறப்பிலன்றி யிடையிலொன்றும்வாராது (௬௩௩)
நாய்க்குநல்லபோசனமும் நற்பணியுந்தான்பூட்டி
ஏற்கவேதண்டிகையி லேற்றிவைத்துப்போனாலும் (௬௩௪)

கண்ணில்மறுநாயைக் கண்டவுடனேகுலைக்கும்
வண்ணம்போல்துற்சனற்கு வாராதுநற்குணந்தான் (௬௩௫)
எல்லாருந்தூஷணிக்க வெந்நாளுங்கோளுரைப்போன்
பொல்லாதகாற்றிற் பிடித்தெரியுமக்கினியாம் (௬௩௬)
பொல்லாரைக்காண்பதுவும் பொல்லார்சொற்கேட்பதுவும்
பொல்லார்குணமுரைத்த போதிலேதீதாகும் (௬௩௭)
தர்மந்தனைநினையார் தக்கபழிக்கஞ்சாத
கர்மியவர்வாழ்வுவெகு காலநிற்கமாட்டாது (௬௩௮)
தலங்கள்தனைத்துதியார் தர்மகதைகேளார்
துலங்குநதியாடார் சுவடிவாசித்தறியார் (௬௩௯)
வாசமிகுங்கீர்த்தியுள்ள மானிடசென்மங்களிலே
நீசப்பிறப்பிவரை நேத்திரத்திற்பார்க்கவொண்ணா (௬௪0)

நிறை.

தங்கமுருக்கிடினுந் தன்னொளிவுமங்காது
சங்கதனைச்சுட்டாலுந் தன்னிறமும்போகாது (௬௪௧)
சந்தனத்தையுரைத்துச் சலத்திற்கரைத்திடினும்
விந்தையுறுமணமும் விட்டகன்றுபோகாது (௬௪௨)
சாணையிலேமாணிக்கந் தகர்ந்துமிகத்தேய்ந்தாலுங்
காணுமொளிவுமொருக் காலுமதுமங்காது (௬௪௩)
பால்முறியக்காய்ந்தாலும் பண்புசுவைகுன்றாது
ஞாலமிசையிவ்வாறு நல்லோர்பெரியோர்க்கும் (௬௪௪)
ஆதாரமின்றியென்ன வாபத்துவந்தாலும்
நீதிவழுவார்கள்நிறையுந்தவறாரே (௬௪௫)
ஊரார்பொருள்மேலொருபோதுமாசைவையார்
பூராயமானபுருஷோத்தமனிகராம் (௬௪௬)
தன்னுடையசெய்கையைப்போல் தானெவரையும்பார்ப்பார்
சின்னமொன்றுஞ்சொல்லாதார்தெய்வப்புருஷரென்பார் ()
சார்ந்தவரைக்காப்பவர்கள் தான்புருஷமேருவதாம்
ஏய்ந்தமனமறிந்து ஈவோர்புருஷரத்னம் (௬௪௮)
வாராவறுமைமிக வந்தாலுமற்பர்களைப்
பாராரேசேரார் பண்பாம்புருஷசிங்கம் (௬௪௯)
தாய்தந்தையானாலுஞ் சமன்செய்தகோலதுபோல்
ஞாயமுரைப்போர்புருஷ நாயகமென்றேயுரைப்பார் (௬௫0)

ஈகை.

ஆறுவற்றிலூற்றூறும் அண்டம்விளக்கிவருஞ்
சூரியனோராகுவந்து சூழ்ந்திடினும்வெய்யிலுண்டாம் (௬௫௧)
நல்லமதிதேய்ந்தாலும் நல்வெளிச்சங்கொஞ்சமுண்டு
கொல்லைபாழானாலுங் குருவிக்கிரையுமுண்டு (௬௫௨)
இவ்வகைபோலீவோருக் கேதிடர்கள்வந்தாலும்
எவ்வளவுமீவதல்லா லில்லையென்றுசொல்லாராம் (௬௫௩)
எடுக்கெடுக்கவூறு மிசைந்தமணற்கேணியைப்போல்
கொடுக்கக்கொடுக்கவல்லோர்கூடும்பெருஞ்செல்வம் (௬௫௪)
வந்தவிருந்துக்களித்து வரும்விருந்துபார்த்திருக்குஞ்
சிந்தையுடையோர்கள் தேவரிலுமேயதிகம் (௬௫௫)
தாரித்திரத்தாற் றயவில்லார்தம்மிடத்திற்
கூறினாலேதுங் கொடுக்காரிகழ்ச்சிசெய்வார் (௬௫௬)
ஈயுமுதாரனைத்தா னெப்போதும்வேணுமென்று
வாய்திறக்கவேண்டா மனதறிந்தேயீவானும் (௬௫௭)

ஈகைக்கிடையூறு.

தேனிடத்திலீயுமுண்டு ஜெலத்தில்முதலையுண்டு
மானிலத்தின்வீடுகளி லண்டவிடாநாய்களுண்டு (௬௫௮)
சந்தனவிருட்சத்தி னடியிலேசர்ப்பமுண்டு
கெந்தமிகுதாழம்பூ கிள்ளவென்றால்முள்ளுமுண்டு (௬௫௯)
கொடுக்குந்தியாகிகள்பால் கொடாமலிடையூறுசொல்லித்
தடுக்குங்குலாமரங்கே தானுமுண்டுகண்டீரே (௬௬௦)
குற்றமுரைத்துக் கொடுப்போர்தமைக்கெடுப்போர்
சுற்றமழிந்துடையுஞ் சோறுநஞ்சாகிவிடும் (௬௬௧)

சிநேகம்.

மதியிலுறுமுயலு மதிவளர்ந்தால்வளருஞ்
சதிராகத்தேயுநாள் தானுமதுதேய்ந்திடுமாம் (௬௬௨)
வாவிதனிற்கொட்டிகளு மந்நீர்போற்றாழ்ந்துயரும்
மாவிதஞ்சேர்புற்பூடும் வளருமதிலேமடியும் (௬௬௩)
சேரும்பெரியோர் சினேகமிவ்வாறாகுமென்று
கூறுமனுநீதிக் கொள்கையிதுவேயாகும் (௬௬௪)

சரீரசுகம்.

ஏற்றபுதன்சனியி லெண்ணெயிட்டேமுழுகி
காற்றுப்பனிவெய்யில் காயார்கள்மெய்வருந்தார். (௬௬

ஓயாவழிநடக்கா ருண்டிபலகால்விரும்பார்
காயாவதுகிழங்கு கனியுமிகுத்துண்ணார்கள் (௬௬௬)
தன்வயதின்மேலான தையலுடனேசேரார்
உண்மைப்பசியன்றி யுணவுசற்றுமுண்ணார்கள் (௬௬௭)
மலநீரடக்கார்கள் மடப்பளியிலேயிருக்கார்
நலமாய்ப்பழங்கறியை நாடார்பலநாளும் (௬௬௮)
காய்ச்சுப்பால்நெய்மோரெக் காலமுந்தான்சேர்ப்பார்கள்.
ஏச்சில்லாவழுக்கை யிளநீர்மிகுந்துண்பார் (௬௬௯)
ஆறுதிங்கட்கொருவிசைதா னுன்விரேசனமும்
நாரியரைமாதமொன்றிற் கிரண்டுவிசைபுல்குவதும் (௬௭௦)
உண்டபின்புலாயி யுதகமருந்துவதும்
ரெண்டுபத்துரெண்டுமிந்த நெறிநிலையுள்ளார்தமக்கு (௬௭௧)
ஏர்க்குமுடல்தனிலே யெப்பிணியும்வாராது
தீர்க்காயிசுண்டாகும் க்ஷேமமென்றுசெப்பினரே (௬௭௨)
மாறுபாடில்லாமல் வயிறறிந்துண்பவர்க்கு
நூறுவரையுடலில் நோய்நணுகமாட்டாதே (௬௭௩)

### நோயணுகல்.

கல்லால்மயிராலுங் கடுகநடையாலும்
நெல்லாலுமியாலு நித்திரையில்லாதாலும் (௬௭௪)
ஒழியாவிசாரத்தா லுண்டபின்புழுழ்கையினால்
கழிவுமலஜலங்கள் கக்கிஷமாய்வீழ்கையினால் (௬௭௫)
பின்னுமடக்குவதால் பெருத்தசுமைசுமத்தல்
மின்னாருடன்[redacted]மிகவும்வி[redacted] (௬௭௬)
மெய்யயரும்வேலையினால் வேர்வைபனிக்காற்றதனால்
வெய்யவிளவெய்யில் விரும்பல்கனியுணவு (௬௭௭)
ஏர்க்குங்கிழங்குசரு கிலைவிரும்பியுண்ணுவதால்
பார்க்குள்வியாதிவரும் பாதையிதுவென்றுரைப்பார் (௬௭௮)
காலையிளம்வெய்யிற் காய்வோர்பிணமதனின்
மேலேவரும்புகைதன் மேலேபடுபவர்கள் (௬௭௯)
தன்வயதுக்கேமூத்த தையல்தனைப்புணர்வோர்
தன்மையுடனிரவில் தயிர்வார்த்தேயுண்பவர்கள் (௬௮௦)
நால்வரிடந்தனிலே லட்சுமியுநில்லாளாம்
மேலுமவராயுள் விழலாகப்போகுமென்றார் (௬௮௧)

### இறந்து மிறவாதவர்.

பார்க்குள்விளங்கப் பலதர்மஞ்செய்தவர்கள்
மார்க்கமிகுகற்புடைய மாதைமணஞ்செய்தவர்கள் (௬௮௨)
தேவாலயமுதலாய்த் திருமடங்கள்கட்டினவர்
பூவானதுவிளங்கப் புனலாறுண்டாக்கினவர் (௬௮௩)
மறையோரிருக்க மனைகட்டிவைத்தவர்கள்
தரையாண்டநீதிமன்னர் சற்புத்ரரைப்பயின்றோர் (௬௮௪)
காவியஞ்செய்கவிஞர் கவிமாலைசூட்டினவர்
பூவுலகிலோயாமற் பொருள்கொடுத்தமாந்தர்களும் (௬௮௫)
சீரானகோபுரங்கள் செய்துமுடித்தவர்கள்
சூராதிசூரர் துலங்குபதின்மூவர்களும் (௬௮௬)
வாகாயிறந்தாலும் வையகத்திலூழிமட்டு
சாகாதபேர்சொர்க்கத் தலமீதுறைபவராம் (௬௮௭)

### இருந்து மிறந்தவர்.

நெடுநாள்மருகன்மனைநீங்கா திருந்தவரும்
அடைவாய்மருமகன்றா னம்மான்மனைதனிலே (௬௮௮)
சதமாயிருப்பவனுந் தமிழறியாமூடருமே
இதமாய்க்கவிபாடி யிரக்கப்போம்வாணர்களும் (௬௮௯)
பொய்பேசிக்கடன்வாங்கிப் பிழைத்துத்திரிபவரும்
செய்யபகைஞரிடஞ் சேவகஞ்செய்பவரும் (௬௯௦)
மாறுவறுமையுற்றோர் வல்லமருந்துசெய்துந்
தீராப்பிணியாளர் சிவிகைசுமந்தேபிழைப்போர் (௬௯௧)
மனைவிதனைவணங்கி வயிறுவளர்ப்பவரும்
நினைவுதடுமாறி நீங்காக்கவலையுற்றோர் (௬௯௨)
சொற்சோர்வுபட்டோருஞ் சொந்தமில்லாப்பொருட்கு
மிச்சமாய்ப்பொய்பேசி வீண்வழக்குச்செய்பவரும் (௬௯௩)
மனைவிதனக்கஞ்சி வந்தவிருந்துக்கொளிப்போர்
முனையானராஜசபை மூடராய்ப்போனவரும் (௬௯௪)
ஈரேழுபேரு மெண்ஜானுடல்படைத்தும்
சீர்கெட்டுயிரோடே செத்தபிணமாமிவர்கள் (௬௯௫)
சம்பத்துடன்பிணியில் தான்மெலிந்துவாழ்வதிலும்
துன்பமற்றேயையமெடுத் துண்ணல்மிகவுநன்றாம் (௬௯௬)

ஆனதிருமா தகன்றுவறுமைவந்தால்
ஞானம்போங்கல்வியும்போம் நாடும்பழித்திடுமாம். (௬௬௭)
தாய்பழுதுசொல்வாள் சபையேறவெட்கமுமாந்
தூயமனையாளுந் துரும்பாய்மதித்திடுவாள் (௬௬௮)
மெய்சொன்னாற்பொய்யாகும் விசாரமுறும்வீரம்போம்
உய்யவிருந்துவரி னுயிரோடேசெத்தபிணம் (௬௬௯)
மேன்மையறிவுகுலம் வித்தைநலமற்றுளதும்
போமேயிதற்கிறந்து போவதுவேமெத்தநலம் (௭00)
சேனைமருந்துசெய்துந் தீராவியாதியுற்றால்
மானிலத்திற்றனக மாளுவதேயுத்தமமாம் (௭0௧)

பொருளின் பலன்.

பொருள்தேடத்துக்கமதைப் போற்றிவைக்கத்துக்கமதே
பொருளைச்செலவழிக்கப் போம்போதுந்துக்கமுமாம் (௭0௨)
காகத்தின்கூட்டில் கருங்குயில்கள்முட்டையிட
மோகமுடன்காகமுந்தன் முட்டையென்றேயெண்ணுதல்போல்.
ஈய்கள்தேன்கூட்டி யெடுப்பாரிடங்கொடுத்துப்
போயலைகின்றதொரு புத்தியீனம்போலும் (௭0௪)
சோரத்திற்பெற்றபிள்ளை சொந்தமென்றுமுத்தாடிப்
பேரிட்டழைக்கின்ற பேடிதனைப்போலும் (௭0௫)
மயலாசுத்தேடியே மண்ணிற்புதைத்தபொருள்
அயலார்பொருளுமல்ல வவன்பொருளுமல்லவென்பார் (௭0௬)
உற்றபொருள்தேடமன முற்றுலகமுமே
சுத்தாதனானிக்கு நாடெல்லாந்தன்னடிமை (௭0௭)
பொன்னறியாமூடரிடம் பொருளதுவுஞ்சேர்ந்தாக்கால்
மன்னுகுரங்குகைப்பூ மாலைபோல்கொண்டலைவார் (௭0௮)
தேடுகின்றவல்லவர்க்குச் செம்பொனொருமசகம்
கூடும்பொருள்பலர்க்குக் கொடுத்தாலுமோர்மசகம் (௭0௯)
பொன்னாசையுள்ளவர்க்குப் போசனத்திலிச்சையில்லை
அன்னைசுற்றந்தர்ம மானதிலுமிச்சையில்லை (௭௧0)
வெட்கமில்லைப்போகலாம் வேளையின்னதென்றுமில்லை
இக்குணமுள்ளோர்பேய்க் கிணையாகுமென்றனரே (௭௧௧)

பொருள்வகை.

மெத்தவுந்தானேகுவித்து வீட்டில்வைத்தநெல்லதனை
நித்தமெடுக்கிலந்த நெல்லுமற்றுப்போவதுபோல் (௭௧௨)

ஏல்நமக்கு மெழுத்தினளவாக்கும்
ஞாலமிசையிரவி நாழிகைபோல்நாளாகி (௭௧௩)
மாசவருடமென்று மாதத்துகையாகி
மோசமாய்க்கொல்லு முறைமையறியாமல் (௭௧௪)
இன்னநெடுநாளிருப்போ மிதுவேசதமென்று
பொன்னைமிகத்தேடிப் புதைத்துவைக்குமாந்தர்களை (௭௧௫)
ஸ்ரீதேவிபூதேவி சிரிப்பரிவன்றேணீயாம்
மூதேவிச்சென்மமென்று மொழிந்தார்மனுநூலோர் (௭௧௬)
மிக்கதர்மம்பெருளா மின்பமென்றமூன்றினிலே
நற்குணத்தால்தேடுபொருள் நல்லறமுமின்பமுறும் (௭௧௭)
வஞ்சனையாய்த்தேடுபொருள் வர்த்தனையுமாகாது
மிஞ்சும்பழிபகையா மென்பதனையுண்டாக்கும் (௭௧௮)
கூத்ததுபார்க்கவந்து கூடுஞ்சனம்போலும்
ஆற்றுக்கால்நீர்போ லைஸ்வரியங்கூடிவரும் (௭௧௯)
கூற்றுமுடிந்தவுடன் கூடுஞ்சனங்கலைந்த
மாற்றம்போல்போய்விடுமா மைஸ்வர்யமுள்ளதெல்லாம் (௭௨0)
புண்ணியமென்னாளும் புகழாகநிற்குமல்லால்
மண்ணினிலென்றைக்கும் வாழ்வுநிற்கமாட்டாதே (௭௨௧)

நல்லறிவு கயவர்.

தன்னைப்புகழ்வோருந் தாய்தந்தையைப்பேணார்
அன்னைசுற்றம்விலக்கி யயலார்க்குதவுபவர் (௭௨௨)
மேலோர்சொற்கேளாதோர் வேதைசதமென்றிருப்போர்
பூலோகத்தொப்பனையைப் பொய்யென்றுரைப்பவரும் (௭௨௩)
கண்டாலுறவாடிக் காணுவிடஞ்சலிப்போர்
கொண்டபெண்டாள்செய்யுங் குறையைவெளிசொல்பவரும் ()
பொய்ச்சாட்சிசொல்வோர்போற்றிவைத்துப்பிச்சைகொள்வோர்
தையல்சொற்கேட்பவருஞ் சபையிற்பயனில்லா (௭௨௫)
வார்த்தையுரைப்பவரு மற்றுமிந்தப்பன்னிருவர்
பார்த்தால்மனுஷப் பதாம்பசாசிவரோ (௭௨௬)
அக்கினியைக்கட்டலா மகலாநோய்தீர்த்திடலா
மிக்கதொருதுஷ்ட மிருகமிணக்கிடலாம் (௭௨௭)
வல்லவிஷந்தீர்க்கலா மாண்டோர்க்குயிர்தரலாம்
வெல்லரியபேய்களையும் விரட்டியேயோட்டிடலாம் (௭௨௮)

பறவைமிருகம்பேசப் படிக்கவுமேசெய்திடலாம்
வரப்போகவுஞ்செயலாம் மறலியுடதூதனையும் (௭௨௯)
மணலைக்கயிறுக்கிவைக்க லாகுங்கயவர்களின்
குணமுதனைத்திருப்பக் கூடாதுகண்டீரோ (௭௩௦)
வெல்லமிகக்குவித்து வேம்பின்விதையைப்பதித்து
நல்லதொருபாலூற்றி நாளும்வளர்த்தாலும் (௭௩௧)

புல்லறிவுகயவர்.

சாதிகுணங்காட்டுந் தகைமைபோல்புல்லருக்கு
ஏதுரைத்துஞ்சற்குணங்க ளெள்ளளவும்வாராதே (௭௩௨)
செல்வமதுவந்தவுடன் தெய்வந்தனைநினையார்
சொல்வாம்புசற்றுமில்லை சுற்றந்தனைநோக்கார் (௭௩௩)
தர்மந்தனைநினையார் தக்கபழிக்கஞ்சார்கள்
கர்மியிவர்வாழ்வுவெகு காலநிற்கமாட்டாது (௭௩௪)
உண்டென்றுநாளு முலகமுரைப்பதனைத்
திண்டுமிண்டாயில்லையென்று செப்புமவர்பேயெனலாம் (௭௩௫)
தோலெலும்புதின்னுநாய் சோறுநெய்யுமுண்டாக்கால்
சீலமுடன்வயிற்றிற் செரியாதவாறதுபோல் (௭௩௬)
சண்டாளரானவர்க்குத் தருமநூலானதனை
விண்டாலவர்செவியில் வீழாதொருநாளும் (௭௩௭)
புலிக்கஞ்சியோர்வேடன் போய்மரத்திலேயேற
வலுக்குங்குரங்குகண்டு வந்தவனையாதரிக்க (௭௩௮)
அன்றுபுலிபோனவுட னக்குரங்கையவ்வேடன்
கொன்றுதின்றவாறுங் குலாமருக்குச்செய்தநன்றி (௭௩௯)
துற்சனர்க்குச்செல்வம்வந்தாற் றுன்பம்பழிபாவம்
அச்சமதுசற்றே யணுவுநினையாராம் (௭௪௦)
குரங்கினதுவாலில்தேள் கொட்டவொருகொள்ளிதனைக்
கரங்கொடுக்கவூரழித்த கதையாகுமென்றனரே (௭௪௧)
வெந்தழலில்தேளெடுத்து விட்டவனைக்கொட்டுதல்போல்
நந்தாததுற்சனர்க்கு நன்மைசெய்தாற்றீமைசெய்வார் (௭௪௨)
நாய்தனக்குப்பொற்கலத்தில் நற்பாலின்சோறிடினும்
நாய்பிறர்களெச்சில்தனை நக்காதிருக்காதாம் (௭௪௩)
புல்லறிவாளருக்குப் புத்திமிகச்சொன்னாலும்
சல்லியவருடைய சாதிகுணத்தைவிடார் (௭௪௪)

காலின்செருப்பதனைக் கனகமதாற்செய்தாலும்
காலுக்கேயன்றியது கழுத்திற்குமாகாதே (௭௪௫)
கீழ்மக்களேமிகவும் கெர்வித்திருந்தாலும்
மேன்மக்களாகார்கள் விள்ளுவதிலேதெரியும் (௭௪௬)
நாடிவெகுவாய்ப்படித்தும் நல்லறிவில்லாவிட்டால்
மூடரிலுமூடரென்று முன்னோருரைத்தனராம் (௭௪௭)
ஏதுமறியாதாரின்பவறிவுள்ளானால்
ஓதும்பெரியோருக் கொப்பென்றுரைத்தனரே (௭௪௮)
கல்வியறியார் களர்நிலத்துக்கொப்பவர்க்குச்
செல்வமதுவந்தால் தீங்குசெய்வார்யாவருக்கும் (௭௪௯)
தேர்கோபுரத்தினிலே செய்தபதுமையவர்
பாரிலவர்தமையும் பட்டமரமாகுமென்பார் (௭௫௦)
யார்க்குமுபகாரங்களியாதுமிகச்செய்தபின்னே
ஏற்கப்பதிற்செய்யவில்லையென்றுநினைத்தாக்கால் (௭௫௧)
வட்டிக்கடன்கொடுத்து வாங்கும்வகையெனலாம்
கட்டாகச்செய்தவுபகாரமெல்லாம்வீணாகும் (௭௫௨)

### வரம்பிலாமை.

வேசைக்குறவில்லை வேந்தர்க்குற்றாருமில்லை
ஆசைக்குவெட்கமிலை யன்பில்லைமூர்க்கருக்கு (௭௫௩)
பணமதுவுமில்லார்க்குப் பரத்தையர்மேலாசையில்லை
குணமில்லாதார்க்கின்பங் கொஞ்சமதுமில்லையில்லை (௭௫௪)
ஞானிக்கிகமுமில்லை நாட்டிலோர்சாதியில்லை
ஈனமிலேச்சர்கட்கெப் போதுநிறையுமில்லை (௭௫௫)
காமிக்கொருவரம்பு கருதுமுறையுமில்லை
மாமிக்கயோகிக்கு வஞ்சர்வினையரில்லை (௭௫௬)
சத்தசுத்தபூசைக்குத் தானுமங்கசுத்தியில்லை
வித்தைபுகல்வாணருக்கு வேற்றுமைகளாருமில்லை (௭௫௭)

### புல்லறிவு.

கள்ளருக்குற்றாருமில்லை கபடருக்குஞானமில்லை
எள்ளளவும்பயங்களேதுசுத்தவீரனுக்கு (௭௫௮)
பொய்யனுக்குச்சாட்சியில்லை புலையருக்கிரக்கமில்லை
ஐயோவிரோதிக்கு ஆனதொருநேயரில்லை (௭௫௯)

தான்பிடித்ததேபிடியாய்ச் சாதிப்பவன்குரங்கு
ஆனசபையிற்குறிப்பு அறியாதான்பட்டமரம் (௭௬௦)
எளியாருடனெதிர்ப்போ னேற்றகடிநாயாம்
பழிபாவத்துக்கஞ்சான் பசாசாகுமென்றிடலாம் (௭௬௧)
வந்தோர்முகம்பாரான் வனத்திலுறுங்கரடி
பந்தமுறுசபையிற் படுப்போன்கிடாமாடு (௭௬௨)
அடுத்தோர்க்கிடர்விளைக்கு மவனேகொடுந்தேளாம்
பிடித்தபிடியைவிடாப் புல்லன்வலுசாரை (௭௬௩)
சற்றெனினுங்கல்விகற்றுச் சபையிற்படிக்கறியான்
புத்தாம்விழுந்துபட்டுப் போனதொருகாட்டுமரம் (௭௬௪)
தன்புத்தியன்றிமற்றோர் சாற்றுபுத்திகேளாதான்
வன்புற்றவானரமாம் வாய்பேசாவூமையென்பார் (௭௬௫)
அம்புவியையாளு மரசர்பகையைப்பெற்றோர்
கொம்பிழந்தமந்தி கூகையுறவானபட்சி (௭௬௬)
கொட்டுத்தேள்போல்தீராக் கோபமுடையவன்றான்
குட்டியிட்டநாய்கரடி கொடியவனமிருகம் (௭௬௭)
மருங்காய்ப்பெரியோரை வந்தனைகள்செய்யாதான்
கருங்கல்லிலேயடித்துக் கைகால்வகுத்தசிலை (௭௬௮)

பண்டிதாள்பரீட்சை.

முக்கியஞ்சேர்நூலின் முறையுந்நிரையறிந்து
பக்குவமில்லாநாடிப் பரீட்சைதனையறிந்து (௭௬௯)
தேடியழைத்தபின்போய்த் தேகங்குணங்காலம்
பாடுகின்றநாடியெட்டுப் பரீட்சைகளுந்தானறிந்து (௭௭௦)
சிந்தாதவாதபித்தச் சிலேற்பனத்தின்கூறறிந்து
வந்தபிணியும் வலுவுமிகத்தெரிந்து (௭௭௧)
கற்பங்கியாழங்கள் கன்குளிகைபற்பமுடன்
தக்கதொருசெந்தூரந் தயிலமுடன்சூரணமும் (௭௭௨)
இவ்வகையாய்லேகியமு மிதமறிந்துதான்கொடுத்து
அவ்வகையில்பத்தியமெத் தாகவேவையாமல் (௭௭௩)
எளிதானபத்தியத்தி லெப்பிணியும்நீக்குவித்து
தெளிவானவாரோக்ய ஸ்நானமிகச்செய்வித்து (௭௭௪)
பூந்ததேபோதுமென்று தான்மகிழும்பண்டிதனை
சந்ததஞ்சேர்தேவர்பதி தன்வந்திரியெனலாம் (௭௭௫)

மிக்கபிணிவந்தால் வேணபொருள்தாரனென்று
மிக்ககுலதெய்வம்போல் மேன்மைமிகச்செய்வார்கள் (௭௭௬)
உற்றபிணிதீருமென் றுறுதிசொன்னாலேகுருவாம்
சற்றேமருந்துசெய்யில் தந்தையென்றுசொல்வார்கள் (௭௭௭
பாதிலகுவானால் பண்பிற்றமையனும்
பாதியுந்தீர்த்துவிட்டாற் பரிகாசமைத்துனனும் (௭௭௮)
ஏதுபொருளானாலு மீவதுமுன்னேயனுமாம்
காதலுடன்மற்றநாள் கடனாளியாவானே (௭௭௯)
அப்பாற்பகையாளி யாவார்கள்பண்டிதர்கள்
இப்படிச்செய்லோப ரிருப்பாருலகினிலே (௭௮௦)
தீராதநோயருமை செப்பாதபொய்யரிடம்
வேறானபண்டிதரை மேல்மருந்துகேட்பவர்பால் (௭௮௧)
மூர்க்கரிடத்தினிலு மொய்குழலாளேப்பிரியா
நோக்குமவரிடத்தி லோபியர்கள்தம்மிடத்தில் (௭௮௨)
கத்ததுரோகியர்கள் கண்டதெல்லாமுண்போர்கள்
பத்தியத்தைத்தாழ்வுசெய்யும் பண்பில்லாமாந்தருந்தான் ()
மட்டில்லாப்பொன்னையள்ளி மாரியெனவீந்தாலும்
எட்டியடிவைப்ப தியல்பல்லப்பண்டிதர்க்கே (௭௮௪)

சுத்தம்.

வெண்ணீறுடன்துளசி வில்வமருச்சுகந்தம்
பண்ணும்புதுப்பாண்டம் பழவர்க்கங்காயிலைகள் (௭௮௫)
சென்னெல்தவசமுடன் செம்பிரும்புவெண்கலங்கள்
பொன்னுடன்வெள்ளிமுதல் பூணும்நவமணிகள் (௭௮௬)
கோதில்லாவெண்பட்டுக் கோடிதுகில்பலவும்
பாதரட்சையாவதுடன் பத்தொன்பதிவ்வகைகள் (௭[illegible])
கீழோர்பாலுற்றிடினுங் கீழோர்களீந்தாலும்
தாழ்வில்லாமேலவர்கள் தானிதனையேற்றிடலாம் (௭௮௮)
ஆசைமிஞ்சுமின்னா ரதரபானத்தினுக்கும்
பேசறியாப்பாலகர்கள் பேய்ந்தசிறுநீரதற்கும் (௭௮௯)
வேட்டையிலேநாய்கடித்து விட்டிட்டமாமிசமுந்
தேட்டமுடன்பட்சிகள்தான் தின்றபழங்களுக்கும் (௭௯௦)
இந்தவகைநாலுக்கு மெச்சில்லையென்றுசொல்லி
முந்தமனுநூலின் முறையிலுரைத்தனரே (௭௯௧)

எத்தொழிலுமெக்கலமும் மிழிவுண்டேயல்லாது
சுத்தமதுவென்றெவருஞ் சொல்லுதற்குநாவுளதோ. (எகூஉ)

ஆகாமை.

மன்னர்பகையு மாதவத்தோர் தன்பகையும்
வின்னக்கொலைஞர் விகடப்ரசங்கிபகை (எகூங)

ஊரார்பகையு முற்றாருடன்பகையும்
வீறுனமந்திரிபகை மிகுந்தபணக்காரர்பகை (எகூச)

வல்லகணக்கர்கவி வாணர்குருபகையும்
வல்லமைசேர்பண்டிதர்கள் மந்திரவாதிபகை (எகூரு)

பெற்றபிள்ளைபெண்சாதி பின்னவர்கள்முன்னவர்கள்
உற்றபதினெழி லொருபகையுமாகதே (எகூசா)

ஆறடுத்தவூரதுவு மரசரிடஞ்சேவகமும்
நீரில்விளையாட்டும் நீர்மிகுத்தபோராறும் (எகூஎ)

தாசியுறவுபிறர் தாரமின்னார்நேசமதும்
நேசமில்லாத்தாயாதி நேசமகாதுற்சனர்கள் (எகூஅ)

தன்னோடிணங்குவதுஞ் சத்ராதிநட்பதுவும்
பன்னகத்தையாட்டுவதும் பகடுநடத்துவதும் (எகூகூ)

மெய்விளங்கும்போதினிலே மின்னாருடன்புணர்ச்சி
மையிருளிலேதனித்து வழிபோகும்வல்லமையும் (அ00)

நஞ்சுடனேதீமருந்தில் நாளும்பழகுவதும்
அஞ்சாமலெப்போது மலைகைகளையோட்டுவதும் (அ0க)

ஆர்க்குங்கடலோடமதிலேதான்சஞ்சரித்தல்
பார்க்குள்மதுவுண்ணல் பலநாள்களவுசெய்தல் (அ0உ)

இத்தகையாய்ச்சொன்ன திருபதையுமேமனதி
லூற்றாலிடறு முயிர்க்குலயமாமிதுவே (அ0ங)

ஈரூர்பயிரிடுவோ ரில்லாளிரண்டுடையோர்
ஊரார்போம்பாதைமந்தை யோரம்பயிரிடுவோர் (அ0ச)

பிணைபட்டுப்பொய்ச்சாட்சி பேசுமிவர்நால்வர்களும்
சுணைகெட்டபேரிவர்கள் துன்பத்திற்குள்ளாவார் (அ0ரு)

சிற்றூர்குடியிருப்போர் சீர்கெட்டபெண்டுடையோர்
பெற்றபிள்ளையிற்றிரளாய்ப் பெண்ணாகப்பெற்றவரும் (அ0சா)

அற்பனைச்சேவிப்பவரும் மலக்கழிந்துபோவதல்லாற்
சொற்பச்சிலநாளில் தொந்தரைக்குள்ளாவார்கள் (அ0எ)

அத்திக்காய்கோவைக்கா யைவிரலிதேற்றான்காய்
ஈத்தவெள்ளைக்கத்தரிக்காய் சோற்றிற்கலந்தலிவைகள் (அ௦அ)
தின்பார்க்கொருநாளுந் தேவபக்தியில்லையென்று
முன்பாகநூலோர் மொழிந்தார்மனுநூலில் (அ௦௯)

துறந்தோரடங்காதார் துன்னுபிணியோர்களையும்
புறம்பேசுவஞ்சகர்கள் பின்னவர்கள்பெண்டுகளும் (அ௧௦)
கல்லாதவன்னெஞ்சர் காணுமிவரெண்மரையும்
நல்லசபையிலொரு நாளும்வைத்துப்பேசவொண்ணு (அ௧௧)

ஆசனங்கள்தான்போடி லாயிசதுவிர்த்தியில்லை
போசனமுந்தான்சமைத்தால் போமேயைஸ்வரியம் (அ௧௨)
தனக்கெண்ணெய்தான்தேய்த்தாற் சந்ததிகட்காகாது
அனர்த்தமிதுமூன்றென் றருளினார்முன்னோர்கள் (அ௧௩)

யோகியொருபோதே யுண்பானிருபோது
போகியுண்பான்மூன் று போதுண்பான்வியாதிஸ்தன் (அ௧௪)
உடனொருநான்குபோ துண்ணுமவன்றனக்கு
இடையூறுண்டாகுமென் றியம்பினார்முன்னோர்கள் (அ௧௫)

வீரத்திலொப்பில்லா விக்ரமனேயானாலும்
வீரியமும்வாதும் விளம்பிடவுமாகாது (அ௧௬)
வேந்தர்குருபொய்யர் மேன்யுள்ளோர்கோபிகட்கும்
வாய்ந்தகடன்கொடுத்து வாங்குவதுநீதியல்ல (அ௧௭)

நாட்டுக்காகாதவரை நமக்கடங்காப்பெண்டீரை
மீட்டுமெந்தராசனுக்கு மேலானமந்திரியை (அ௧அ)
துற்சனர்சினேகமதைத் தொட்டாலசையும்பல்லை
இட்சணமேயைந்து மெடுத்துவிடவேணுமென்பார் (அ௧௯)

கடன்பட்டுத்தீர்ந்ததோர் கைச்சீட்டிலேசேஷம்
விடந்தீண்டிமீண்டதிலே யெவ்வளவுமேசேஷம் (அ௨௦)
அக்கினியில்வெந்த அகந்தனிலேசேஷம்
மிக்கானசத்துருவை வெல்லுவதிலேசேஷம் (அ௨௧)

தெய்வப்பிரார்த்தனைகள் செய்துமதில்சேஷம்
உய்யப்பிணிமருந் துண்டதிலேபின்சேஷம் (அ௨௨)
காணிபோய்மீண்டதிலே கடுகளவுசேஷமுடன்
ஆணியாம்பத்து மனுவும்வைக்கலாகாதே (அ௨௩)

பலனில்லாமை.

சந்திரனில்லாவானஞ் சற்சனரில்லாதவூர்
மந்திரியில்லாதவாசல் மதகரியில்லாதவெம்போர் (அ௨௪)
மக்களில்லாச்செல்வ மதுரமில்லாதகவி
தக்கதளபதிகள் தானில்லாவெஞ்சேனை (அ௨௫)
பெண்ணுரில்லாதமனை பிறவியில்லாதவுடல்
விண்ணணப்பாடல் வினையமில்லாவேசி (அ௨௬)
கோப்பில்லாக்கூத்துடனே கொங்கையில்லாப்பெண்ணழகும்
தாப்பில்லாச்சீவனங்கள் தந்திகளில்லாவீணை (அ௨௭)
பத்தியில்லாப்பூசை பார்த்திபரில்லாதபுறம்
சத்தியமில்லாதவாய் தானறியாவாணிபங்கள் (அ௨௮)
சந்தமில்லான்பாட லுதாரணஞ்சொல்லாதகவி
நந்தாப்புனல்சேர் நதிவளமில்லாநாடு (அ௨௯)
தேசிகனில்லாதவித்தை தியானமதில்லாத்தீட்சை
பேசரியநல்லறிஞர் பெரியோரிலாதசபை (அ௩0)
குடிநலமில்லாநாடு குணமில்லாப்பெண்ணுசை
வடிவுற்றுவாசமில்லா வர்னமிகுமலரும் (அ௩௧)
சேகரமில்லாக்கனதை தீபமில்லாதமனை
சூகரம்போலுண்ணுகின்ற சுகியில்லாப்போசனமும் (அ௩௨)
கல்வியில்லாத்தேகங் கற்பனையில்லாதகவி
வல்லவிவ்வெண்ணுன்கில் வரும்பயன்களொன்றுமில்லை (அ௩௩)
தந்ததேபோதுமென்று தான்வாங்காவேதியனும்
வந்ததேபோதுமென்று வாங்குகின்றராஜாவும் (அ௩௪)
வெட்கத்துக்கஞ்சுகின்ற வேசையரும்வெட்கமில்லா
மிக்ககுலப்பெண்டீர்க்கு மேன்மையில்லைநஷ்டம்வரும் (அ௩௫)
அன்னையிறந்தாலுண வானதெல்லாநஷ்டமதாம்
பின்னைப்பிதாவிறந்தாற் பேரானவித்தைநஷ்டம் (அ௩௬).
உற்றதுணையிழந்தா லுடலிலேபாதிநஷ்டம்
மற்றுமனையாளிறந்தா லன்றுதலைபோனதென்பார் (அ௩௭)
பருவம்போயப்யாசம் பண்ணுவிக்கும்வித்தைகளும்
பெரியகிழவனுக்குப் பெண்டிளமைப்பெண்ணுளும் (அ௩௮)
அத்ததரித்திரருக் கழகுடையபெண்டீரும்
இத்தகமைமூன்றினிலு மெய்தும்பயனிலையே (அ௩௯)

23480

## மனுநீதிகாதல். (85-26)

வாரியிலேபெய்ந்தமழை வயிறுபசியில்லாத
பேர்களுக்குப்போடுஞ்சோற் பிசாசுக்கிடும்பூசை (அசுO)

பொன்னுள்ளோர்க்கீய்ந்தபொருள் போதவிந்நான்கினிலும்
என்னபலனுமில்லை யென்றனரேமுன்னூலோர் (அசக)

அந்தணர்க்குமாவுக்கும் ஆபத்திலேயுதவார்
இந்தவுலகி லிருந்தென்னிறந்துமென்ன (அசஉ)

யார்க்குமுரையாதவித்தை யநேகவிதமாகப்
பார்க்குள்படித்தென்ன படியாதிருந்துமென்ன (அசங)

என்னகறிசுவைக ளினிதாயிருந்தாலும்
பின்னுமதில்நெய்யில்லாப் போசனமுந்திருப்தியல்ல (அசச)

தன்னால்நிருவகிக்கத் தகாதவிரதமுற்றால்
என்னபலனுமில்லை யிடருவருமுத்தியில்லை (அசரு)

தருணமறிந்துதவாத் தன்மைசேர்நட்பாளர்
அருமையாய்ப்பின்னு லுதவியுதவாமலென்ன (அசகூ)

வாலிபத்திலெய்தாத வடிவுடையபெண்ணுளும்
சாலவிர்த்தாப்பியத்திற் சார்ந்தென்னநீங்கிலென்ன (அசஎ)

புருஷனில்லாவிதவை பொன்னுடையாபரணம்
யரிசையுடனணிந்தால் வையகத்தோரேசுவரே (அசஅ)

பெற்றதாயில்லாத பிள்ளைதனையெவ்வாறு
வைத்துவளர்த்தாலும் வளங்கொடுக்கமாட்டாதே (அசகூ)

பல்லில்லாதோருமற்பப் பசியுள்ளோரானவரும்
நல்ருசிகாணுரென்று நவின்றார்மனுநூலோர் (அருO)

தெய்வங்குருமுறையுந் திருஞானசாஸ்திரமும்
வையகத்திலேமருந்து மந்திரமோடிவ்வைந்தும் (அருக)

மெய்யென்றுரைப்பவர்க்கு மெய்யாய்விளங்கிநிற்கும்
பொய்யென்றுரைத்தாக்காற் பொய்யாகிப்போய்விடுமே (அருஉ)

பாடுபடாமற் பலன்கொடுக்குநற்பனைபோல்
நாடிக்கொடுப்பதுவே நன்றாகுமுத்தமமாம் (அருங)

சிலதுநாள்பாடுபட்டால் தென்னைமரம்பின்பு
பலந்தருதல்போல்கொடுக்கும் பண்பதுவேமத்திமமாம் (அருச)

வருடமெல்லாம்பாடுபட்டால் வாழையொருவிசைதான்
தருமபலன்போற்கொடுக்குந் தர்மமதர்மமுமாம் (அருரு)

தெண்டனையில்லாவேலை சேயரில்லாதமனை
கொண்டவர்க்குள்ளடங்காக் கொம்பனையாளில்வாழ்க்கை ()
வண்டரிணக்கம் வறுமைதனிற்சேர்க்கும்
மண்டலத்திலிவ்வைந்தும் வளந்தரவுமாட்டாதே (௮௫௭)
மாரிகாணாதபயிர் மக்களில்லாவில்வாழ்க்கை
ஏரிகுளமில்லாவூ ரிரவிகாணாவனசம் (௮௫௮)
அன்னைகாணாதபிள்ளை ஆவினைக்காணாதகன்று
பொன்னில்லாப்பூஷணங்கள் போசனமுண்ணாதவுடல் (௮௫௯)
காவுகாணாதவண்டு கலைகள்காணாக்குமரன்
மேவுகொழுநனில்லா மெல்லியர்களானவரும் (௮௬௦)
தோழர்காணாநேசர் சோடுகாணாப்பேடு
மீனுமதிகாணாத வெண்குமுதமானதுவும் (௮௬௧)
பெரியோரில்லாதசபை பெண்கள்தனில்மூத்தாள்
உரியதியாகியில்லா வூர்பதினேழாமிவைகள் (௮௬௨)
தாழ்வுதருமல்லாது சாந்தவளமாகாது
வாழ்வுகாணாவிளமை வாருகுமென்றிடுவார் (௮௬௩)
நல்லோர்க்குச்செய்தநன்றி நாட்டிவைத்தகல்லெழுத்தாம்
பொல்லார்க்குச்செய்தநன்றி பொய்கையுறும்நீரெழுத்தாம் ()
சுற்றமுண்ணாவில்வாழ்வுஞ் சுதியில்லான்பாடுவதுங்
கற்றறியான்பாடுகவி கைம்பெண்ணிலேயழகும் (௮௬௫)
துற்குணப்பெண்சாதி சொற்கேளாதவடிமை
மிக்கவிவையாறும் வீணும்பயனிலையே (௮௬௬)
ஊமைசெவிடருக் குரைத்தவுபதேசம்
சேமமென்றுபாவிகட்குச் செய்தவுபகாரம் (௮௬௭)
மேலுமுவர்நிலத்தில் விதைத்ததொருநல்விதையும்
சாலவிவைமூன்றுந் தண்ணீரிற்கரைத்தபுளி (௮௬௮)
குதிரைக்கிராவுத்தன் கூறுகவிக்குப்புலவன்
சதிரானவாயுதங்கள் தனக்குச்சிலம்பியுமாம் (௮௬௯)
வேசைக்குநட்டுவனும் விளங்குபலராகமதற்
காசையாய்ப்பாடுவனு மைவருந்தானில்லாவிட்டால் (௮௭௦)
ஏத்தமுடன்மதிலி லெழுதிவைத்தபெண்ணழகைப்
பார்த்துமகிழ்ந்துபோம் பண்பாம்பலனிலையே (௮௭௧)

தேவாலயஞ்சுற்றித் திரும்பாததாள்தாளோ
தேவதரிசனங்கள் செய்யாதகண்கள்கண்ணோ (அஎ௨)
பகவான்தியானமதைப் பண்ணாதசிந்தையென்ன
ஜகமீதுபகவானைச் சேவியாச்செங்கையென்ன (அஎ௩)
சிவன்மாலையுந்துதிகள் செய்யாதவாயென்ன
சிவன்மாலையும்வணங்காச் சென்னியுமேசென்னியதோ (அஎ௪)
தினமும்புராணகதை செவிகேளாதென்னசெவி
முனையானபுண்யநதி மூழ்காததென்னவுடல் (அஎ௫)
மேவுமிவையெட்டு மில்லாதோன்பாழ்செனனம்
பாவியிவனிருந்தும் பலனில்லைவீண்பிறப்பாம் (அஎ௬)
ஞானமறிதல்கொடை யாளிதனவானாய்
ஆனதொருபூவலஞ்செய் வானாய்விவேகியுமாய் (அஎஎ)
மிக்கதொருவித்துவான் விளங்குகின்றகீர்த்திவான்
உக்ரரணவீர னுபகாரியாவருக்கும் (அஎஅ)
இவ்வகையிலோர்பே ரெடுக்காதசென்மமவன்
இவ்வுலகிலேமனித னென்றவனைச்சொல்லவொண்ணு (அஎ௯)
சீர்படைத்தவோர்மனுஷச் சென்மமொருயோசனைக்குள்
பேரெடுக்காப்பேர்மனுஷப் பிறப்பிற்கழுதையுமாம் (அஅ0)

## லோபத்தனம்.

தேன்றுளியொன்றுற்கடலைத் தித்திக்கச்செய்தானு
மேன்மையுடன்மலையை மெழுகாகச்செய்தாலும் (அஅக)
பூவினுல்வச்சிரத்தைப் பேர்த்துத்துளைத்தாலும்
மேவுங்கபடருக்கு மெஞ்ஞானம்வந்தாலும் (அஅ௨)
ஊமைபடித்திடினு மூக்கமில்லாப்பேடிக்கு
தாமேதான்வீர்ய தயிரியமுண்டாயிடினும் (அஅ௩)
நித்தங்கயவருக்கு நீதிமுறைவந்தாலும்
இத்தலத்திலோபர்களுக் கீகைசற்றும்வாராதே (அஅ௪)
தின்னுமலுண்ணுமற் றேடிமிகச்சேர்த்துப்
புண்ணியமுஞ்செய்யாமற் புதைத்துவைக்கும்லுத்தர்பொருள் ()
தெண்டம்பெரும்பிடிக்கும் தீக்குந்திருடருக்கும்
வண்டமனவேசைகட்கும் வலுவந்தக்காரருக்கும் (அஅ௬)
இதமில்லாப்பேடிகட்கு மெல்லாப்பிசாசுகட்கும்
உதவுமேயீயா வுலுத்தர்பொருளதுதான் (அஅஎ)

ஆகாப்பதரெனினு மரியவிபூதியைவிளைக்கும்
வாகாய்ப்பழஞ்சுவரும் மாடுறைஞ்சுமுன்மறைவாம் (௮௮௮)
மாடுகெடாவதுவும் வையகத்திலேயுழுவாம்
கூடப்பொதிசுமக்குங் கூடிவருமேயதனால் (௮௮௯)
செத்தபிணமானாலுஞ் சிறிதுபகாரமுண்டு
புற்றதுவுமண்ணாகும் பொங்கரவுக்கேமனையாம் (௮௯௦)
கல்லாலேயாலயங்கள் கனத்தபணிதியுண்டு
அல்லற்கழுதையென்றா லழுக்குப்பொதிசுமக்கும் (௮௯௧)
வாறுகோலானாலு மாளிகையெல்லாம்விளக்கும்
பேறாய்க்குரங்கு பிடித்தார்க்குதவிசெய்யும் (௮௯௨)
ஈயாதலோபிகளா லெவர்க்குமுபகாரம்
வாயாதவர்கொடுக்க மாட்டாரொருநாளும் (௮௯௩)
நெல்விற்பதரென்ன நீரினிலேபாசியென்ன
கல்லமரத்தில்மொக்கு நன்றாயிருந்துமென்ன (௮௯௪)
சீதேவியாருடனே சீர்கேடியானதொரு
மூதேவிதான்பிறந்து முக்கியமுண்டோவதனால் (௮௯௫)
தய்வாயொருவயிற்றிற் சார்ந்தவிவேகியுடன்
கயவர்பிறந்துமென்ன காரியமெல்லாஞ்சிதையும் (௮௯௬)
உச்சிதமாயார்க்கு முதவியில்லாதார்வாழ்க்கை
நச்சுமரம்பழுத்து நடுவூரில்நிற்பதொக்கும் (௮௯௭)
செத்தபிணமதனைச் சிங்காரித்தாவதென்ன
கைத்தலத்தினாலெழுத்துக் காட்டிலேபோட்டுமென்ன (௮௯௮)
நாயானதுகொழுத்தால் நாட்டிலதையார்புசிப்பார்
ஈயாதலோபியருக் கெல்லாமிருந்துமென்ன (௮௯௯)
ஈகையில்லாமாந்த ரிருந்தென்னிறந்தென்ன
ஆகையாலேமிருக மதனிலேசேர்க்கவென்றார் (௯௦௦)

### இகழ்ச்சியீனம்.

கற்பனையில்லாத கவிதனையேகேட்பதுவும்
விற்பனமில்லாரிடத்தில் வேண்டுங்கொடைபலவும் (௯௦௧)
ஆதரவில்லாதபெண்டி ரருமையில்லாச்சேவகமும்
பேதமின்றிப்பேர்விளங்காப் பிள்ளைதனைப்பெற்றதுவும் (௯௦௨)
ஊழ்வினையு முதிர்கொடுமையல்லாமல்
வாழ்வல்லவிவைந்தும் வசையாகுங்கண்டீரே (௯௦௩)

நீர்நுழையாவிடத்தில் நெய்நுழையும்நெய்நுழையாச்
சார்பிலேபால்நுழையுந் தானதுபோகாவிடத்தில் (௬௦௪)
மீறிப்புகைநுழையும் வெம்புகைபோகாவிடத்தில்
தாரித்திரனுமது தன்னில்நுழைவானும் (௬௦௫)
தக்கதராதரங்கள் தானறியாப்பேரிடத்தில்
ஒக்கவிருந்துண்பதினு மோடெடுத்திரத்தல்நன்று (௬௦௬)
தூயவறிவில்லாச் சுதனைப்பெறுவதிலும்
பேயதனைப்பிள்ளையாய்ப் பெற்றுவளர்த்தல்நன்று (௬௦௭)
உள்ளன்பில்லார்களுடனட்புக்கொள்வதிலும்
கள்ளுண்ணும்வம்பர் கழுதைகளைமேய்த்தல்நன்று (௬௦௮)

### வெளிவிடக்கூடாதவை.

ஆசானுபதேச மரிவையர்கள்தன்புணர்ச்சி
மாசானசோரம் மனதடக்கமுற்றபொருள் (௬௦௯)
மானம்பிறர்மானம் மறந்துடனேதான்கொடுத்தல்
தானுமகத்திருக்குந் தனத்தினளவினையும் (௬௧௦)
இல்லறத்தின்கேவலங்கள் யாவரிடமீதுபத்துஞ்
சொல்லவொண்ணாதீனமென்று சொன்னார்மனுநூலோர் (௬௧௧)
தன்னகத்தாளன்றிமறு தாரமேலாசையுற்றால்
பின்னொருவர்தானமது பெண்டீரைச்சேராரோ (௬௧௨)
பறையன்பறையனல்ல பகர்ந்தமொழிதப்பிதமாய்ப்
பறைவோன்பறையனென்று பகர்ந்தாரோமுன்னூலோர் (௬௧௩)
ஞானமுஞ்சற்குணமு நாளுமில்லான்கற்றகவி
ஈனப்பறையர்வீட் டிருக்குங்கங்காசலமாம் (௬௧௪)
தண்ணீரினன்மை தறையுவற்றினாலழியும்
பெண்ணார்கள்நன்மை பிறர்கமனத்தாலழியும் (௬௧௫)
கோதில்லாமாதவசு கோபத்தினாலழியும்
வேதகுலநன்மை விபசாரத்தாலழியும் (௬௧௬)
மன்னவர்கள்நன்மை மனுநீதியாலழியும்
இந்நிலத்திலுத்தமர்கள் யாவர்களுஞ்செய்தநன்றி (௬௧௭)
பொல்லாததன்னகத்துப் பெண்ணாலழியுமென்று
வல்லோர்கள்முன்னால் மனுநூலுரைத்தனரோ (௬௧௮)
பருவதமும்பாற்கடலும் பார்வதியும்லட்சுமியும்
அரிதாய்ப்பிறந்திடத்தி லரியரனும்வாழ்வதுபோல் (௬௧௯)

பூமியிலேதங்கள்மனைப் பெண்ணுள்பிறந்தவிட
மாமியார்வீடே வளமென்றுரைப்பார்கள் (கூ௨௰)

கேடு.

காவலர்களாணை கடப்பதுவுமேயடங்கா
நாவுமிகுகோபமுட னமதுரைகேளாவடிமை (கூ௨க)

ஆதாயமின்றி யதிகச்செலவுகளும்
காதாரக்கேளாச்சொல் கவியில்மிச்சங்கண்டெழுத்தும் (கூ௨௨)

சாட்சிமிஞ்சும்வழக்குந் தயிரியமிஞ்சுங்கவலை
பேச்சில்சரசமிஞ்சிப் பேசுபரிகாசமதும் (கூ௨௩)

பத்ததுவுஞ்சொற்கடங்காப் பாவைதனைப்பெண்டாக
வைத்தான்படுந்துக்க மதனைவிடத்துன்பமுமாம் (கூ௨௪)

ஓரவிவகாரமா யுயர்ந்தோர்க்குச்சொன்னவர்கள்
ஊரழியுமேசுமக்க வுலகமதுநடுங்கும் (கூ௨௫)

உப்பிட்டபாண்டமிலை யுதிர்ந்தமரம்போலாம்
ஒப்பில்லாவாழ்வுபோ முற்றார்பெற்றார்பாழாம் (கூ௨௬)

மாதேவியான மலர்மாதகன்றிடுவள்
மூதேவிசேர்வள் முடிவில்நரகமெய்தும் (கூ௨௭)

என்னேரஞ்சண்டையுமட் டில்லாச்சிரிப்பதுவுஞ்
சின்னஞ்சிறியாரிணக்கந் தீராக்கொடுங்கோபம் (கூ௨அ)

வேசையுறவும் விவேகமில்லாரிடத்தில்
ஆசராய்ச்சேவகங்க ளாறுமிவைகேடெய்தும் (கூ௨கூ)

தேடாப்பொருளழித்தல் தீராதகோபம்ரண்டும்
கேடாய்முடியுமல்லால் கீர்த்திசற்றும்வாராதே (கூ௩௰)

ஞானந்தனங்கல்வி நாடிவருங்கால
மானார்மேலாசைதரும் வாழ்வும்போந்துக்கமுமாம் (கூ௩க)

என்னன்றியைமறந்தார்க் கெவ்வாறுமுய்வுண்டாம்
மனமறிந்துசெய்தநன்றி மறந்தார்க்கீடேற்றமில்லை (கூ௩௨)

இமிசைப்பட்டாற்று தேழையழுதகண்ணீர்
வமிசத்தைத்தேய்க்கு மரமுங்கூர்வாளெனலாம் (கூ௩௩)

தீங்கானவாங்காரஞ் செல்லுமிடமானதன்றித்
தாங்காவிடஞ்செலுத்தில் தப்பாமற்கேடுவரும் (கூ௩௪)

தாழ்ந்தாருயர்ந்தார் சரியாமெனவறிவால்
ஆய்ந்துமரியாதைசெய்யா தாராகிற்கேடுவரும் (கூ௩௫)

சரியானபேரையன்றித் தன்னிலதிகபலப்
பெரியோருடனெதிர்த்தாற் பிராணபயமுண்டாகும் (௯௩௬)
இத்தலத்தில்யாரொருவர்க் கெந்நாளுமுற்பாதம்
புத்திபிர்தானமாய்ப் பொல்லாங்குசெய்பவர்கள் (௯௩௭)
புத்திரர்களில்லாமற் போவதுவுமல்லாமல்
அர்த்ததரித்திரரா யற்பாயிசாவார்கள் (௯௩௮)
ஏர்க்கையுடனிதமு மேதேதுகாரியமுந்
தீர்க்கவிசாரணைகள் செய்யாரேயாமாகில் (௯௩௯)
பின்னுமேலதுன்பம் பிணைக்குமிகவுண்டாகும்
அந்நாளோர்கீரியினு லேந்துகுடிகெட்டதொக்கும் (௯௪௦)
சத்ராதிசொல்லைத் தனதாய்நினைப்பவரும்
உற்றமனையாட்டிக் குண்மையுரைப்பவரும் (௯௪௧)
கொடுத்தகடன்கேட்டாற் கோபங்களுற்றவரும்
எடுப்பாய்ப்பெரியோரை யெண்ணுமற்பேசினவர் (௯௪௨)
பெரியதனம்வந்தவுடன் பின்னுமுன்னும்பாராமல்
இருவிழியாற்சற்று மேரிட்டுப்பாராதார் (௯௪௩)
இனியபர்தானதந் லிச்சைவைதம்தமயருவர்க்
கனியாயஞ்செய்துபொல்லா வவதிவரச்செய்தவர்கள் (௯௪௪)
பாரிதனைவிட்டுப் பரத்தைமேலாசைவைத்த
பேரெழுவருங்கெடுவர் பேய்நாய்ப்பிறப்பாகும் (௯௪௫)
கூடிப்பிரிவதினுற் கொடியசூதாடுகையாற்
கேடுவருமிதற்குக் கெணிதமில்லையென்றனரே (௯௪௬)
கண்ணினுற்காண்பதுவுங் காதினுற்கேட்பதுவுந்
திண்ணமுடன்முன்பின்னுய்ச் செப்பினுற்கேடுவரும் (௯௪௭)
வித்தைமதமைஸ்வரிய மேலுங்கிளைகூட்ட
மற்றும்பயவிழியி னுலுமகிழ்ச்சியினுல் (௯௪௮)
ஏர்க்குமெளியோர்கள்முதல் யாவரையுந்தூஷணித்தால்
தீர்க்கமிடிகேடுவருந் திண்ணமென்றார்வள்ளுவனுர் (௯௪௯)
நெஞ்சிற்பயமதுதா னேரிடவேயாவரையும்
அஞ்சவஞ்சஞ்செய்தா லவர்கட்குக்கேடுவரும் (௯௫௦)
தினையளவுநன்றிமுன்னஞ் செய்தாரேயாமாகில்
அனுப்போதிலுமறக்க லாகாதுதான்மறந்தால் (௯௫௧)

அந்தணர்க்குங்கோவுகட்கு மடாதபொல்லாங்குசெய்த
நிந்தனைவந்தவர்க்கு நேரிடுமென்றேயுரைத்தார் (கூருஉ)

ஆவலுடன் தன்பிழைப்புக் காகவொருவருக்குத்
தீவினைகளெவ்வளவுஞ் செய்வாரேயாமாகில் (கூருங)

நீண்டதொருதன்னிழல்தா னின்றடியிலாவதுபோல்
ஆண்டுநூறுனு மவரைவிட்டுப்போகாது (கூருச)

முன்னிலதிக மிடிமையதுவுண்டாகும்
பின்னுமேலுமேவேழ் பிறப்பும்விட்டுப்போகாது (கூருரு)

செய்தவொருதீவினைதான் செய்தவர்க்கெப்போது
மெய்துமென்றுசொல்லி விளம்பினார்வள்ளுவரும் (கூருசா)

அரிது

அரிதரிதுமானிடர்க ளாகப்பிறப்பதுதான்
உரியதொருகூன்குருடு ஊமைசெவிடும்பேடும் (கூருஎ)

நீக்கிப்பிறக்கரிது நேராய்ப்பிறந்தாலும்
தீர்க்கமுற்றஞானஞ் சிறந்தகல்விநற்குணங்கள் (கூருஅ)

வாரதரிதரிது வந்தாலுந்தானதர்மம்
நேராய்த்தரிக்கரிது நெஞ்சிற்றரித்தாக்கால் (கூருகூ)

நீணிலத்திற்குன்றுமல் நெடுநாளும்வாழ்வுபெற்று
வானவர்கோன்றன்பதமும் வருமென்றுரைத்தனரே (கூசாO)

இனிது

இனிதினிதுவேதாந்த மினிதினிதாமன்பருள்ளம்
இனிதினிதுகாணுக்கண் ணேதுங்கேளாச்செவியே (கூசாக)

கொடிது

கொடிதுகொடிதென்பதுதான் குவலயத்திலேவறுமை
இடருமதிற்கொடிது இளமைதனிலேவறுமை (கூசாஉ)

அதிற்கொடியதாமருந்தி லகலாதவெவ்வியநோய்
அதனிற்பெருங்கொடிது அன்பில்லாத்தம்பியுமாம் (கூசாங)

அதனில்மகாகொடிது அடங்காதபெண்சாதி
அதனிற்கொடிதுண் டவளோடுறங்குவதே (கூசாச)

பெரிது

பெரிதுபெரிதிந்தப் பேருலகநான்முகன்றன்
அரியப்படைப்பாகு மவன்மால்வயிற்றுதித்தோன் (கூசாரு)

23480

 (8526)

மாலோகடல்துயின்றோன் வாரிகுறுமுனிவன்
பாலொடுக்கமாமுனிவன் பண்டொடுக்கங்கும்பமதில் (௯௬௬)
கும்பமோபூமியதற் குள்ளாம்பொடிமண்ணும்
தம்பமொருபூமியோர் தலைப்பாரஞ்சேடனுக்கு (௯௬௭)
சேடனுமையாள் சிறுவிரலினாழியதாம்
ஈடில்லாநல்லுமையாள் ளிறையவர்க்குள்ளேயொடுக்கம் ()
தொண்டரிதயத் தொடுக்கமிறைவன்றான்
தொண்டர்பெருமைதனைச் சொல்லமுடியாததுவாம் (௯௬௯)

முக்கியமுள்ளது

தலத்திற்சிதம்பரமாந் தாருவினிற்சந்தானம்
பிலத்திலேமாருதமாம் பிரணவமாமந்திரத்தில் (௯௭0)
வேதத்தில்சாமம் விரதமேகாதசியாம்
மாதத்தில்மார்கழியா மலைதனிலேமாமேரு (௯௭௧)
நிலத்திலேகாஸ்மீரம் ரிஷிகளிலேவசிஷ்டர்
குலத்தில்மறையோராங் குதிரையிலுச்சிச்சிரவம் (௯௭௨)
வாரத்திலாதித்த வாரமந்தநாள்மீனில்
பேருற்றவாதிரையாம் பெருமுனியில்நாரதனும் (௯௭௩)
தனத்திற்குபேரனன்ன தானமேதானமுமாம்
மனுக்களிலேராஜாக்கள் வாரியிலேபாற்கடலாம் (௯௭௪)
மேகத்திற்புஷ்கரமாம் விலங்குகளிற்சிங்கமுமாம்
யாகந்தனிற்சிரேஷ்ட மச்சுவமேதமென்பார் (௯௭௫)
மாமணியில்மாணிக்க மலரிலேபத்மமலர்
காமதேனுப்பசுவில் கங்கைநதியாம்நதியில் (௯௭௬)
தமிழிலகத்தியராந் தந்தியிலைராவதமாந்
தமனியமாம்லோகத்தில் தானியத்திற்செந்நெல்லாம் (௯௭௭)
பட்சிகளிலேயுவணம் பாம்பிலேவாசுகியாம்
மச்சத்திலேமகரம் வடிவுதனிலேரதியாம் (௯௭௮)
கற்பிலருந்ததியாங் கபிலராஞ்சித்தர்களில்
செப்புகின்றவாக்கில் ஸ்ரீராமச்சந்திரனும் (௯௭௯)
அசுரர்குலத்தில்பிரக லாதனனேயுத்தமனும்
வசியமுறுபடையில் வச்சிராயுதமாகும் (௯௮0)
சங்கினத்திற்பாஞ்சசன்யஞ் சந்திரனுங்கிரகத்தில்
தங்கும்பதவியிலே சாயுச்சியமாகும் (௯௮௧)

MAHAMAHOPADHYAYA

போகத்திலிந்திரனும் புஷ்பகமாம்வாகனத்தில்
வாகொத்தவில்லறத்தின் வாழ்விலேமைந்தர்களாம் (௬௮௨)
உடையிலேபட்டாடை யுத்தியிலேயூகிமந்திரி
கொடையிலேதான்கர்னன் குணமூன்றில்சாத்மீகம் (௬௮௩)
மன்னும்புராணத்தில் மகாபாரதமாகும்
துன்னுஞ்சுடரொளியில் சூரியனேமேலொளியாம் (௬௮௪)
ஆடுமீனிராறி லதிகந்துலாமாகும்
வாடாதநுண்ணியநூல் வள்ளுவனார்சொற்குறளாம் (௬௮௫)
கவையாறிலேலவணந் துணைவரிலிலக்குமணன்
சிவமணியிலக்குவடந் தேசத்தில்சோழமதே (௬௮௬)
பொருமையிலேபூதேவி போரிலேராவணனும்
திருமாலாம்ராகவனுஞ் செய்தபோரேயதிகம் (௬௮௭)
ஓசைதனிலிடியே ஊரிலயோத்தியதாம்
ராஜரிலேராஜாதி ராஜனும்விக்கிரமன் (௬௮௮)
அன்பாகச்சொன்னவிந்த வறுபத்துநான்குமதே
முன்பாமுதன்மையென்று முன்னோர்மொழிந்தனரே (௬௮௯)

### கொடுமையாலழிந்தவர்

தக்கனிரணியனுஞ் சக்ரவர்த்தியாம்நிமியும்
மிக்கானவாகுலங்கள் மேனுளிலேநகுலன் (௬௯௦)
பந்தமுறுகின்றசிசு பாலனறுவர்களும்
நிந்தனையினாலே நிர்மூலமானார்கள் (௬௯௧)
கஞ்சன்துரியோதனனுங் காளமுனிவன்சகுனி
வஞ்சகஞ்செய்வாதாவி மாரீசனுங்கவந்தன் (௬௯௨)
பூதகியசோமுகியும் பொல்லாதசூர்ப்பனகி
வாதுபுரியுந்தந்த வக்கிரனுமென்பவனும் (௬௯௩)
சகடனுடன்வில்லவனுஞ் சனேந்திரன்மகாசூரன்
விகடன்பிரலம்பன் மேனுளதாசூரன் (௬௯௪)
மிஞ்சுகொடியோரா மிவர்கள்பதினெழுவர்
வஞ்சகத்தினுலிவர்கள் வம்மிசத்தோடேயழிந்தார் (௬௯௫)
சூரனுடன்தாருகனுந் துர்ப்பானுகோபனுடன்
வீரமிகுசிங்கமுகன் மின்னுளசோமுகியும (௬௯௬)
தீயராமந்தத் திரிபுராளானவரும்
மாயமது[illegible]வர்கள் மாபாவிதுந்துபியும் (௬௯௭)

மாவிசுமாலியுடன் மகிடாசுரன்சம்பரன்
காலகேயர்நிவாத கவசருடன்தாடகையும் (௯௯௮)
இடும்பன்பகாசூர னிரணியாட்சசனென்போன்
கடுங்கோபச்சகராள் காலகதியாலழிந்தார் (௯௯௯)

## தாசியங்கம்.

புருவநெரியாமல்விழி புரளாமலேமெய்யில்
தெரியாமலேயங்கச் சேட்டைகளுஞ்செய்யாமல் (௧000)
அணுவளவுந்தலையை யசைக்காமலேமிடறு
தனில்பொருமாமல்சுருதி தந்திலயக்கியானம் (௧00௧)
நீதியாய்த்தொனிவீணை நேராயதிற்றந்தி
நாதமிட்டுப்பூசை ரண்டுஞ்சரிபாகம் (௧00௨)
அமுர்தரசதாளி யாய்மதுரசங்கீதம்
சமரசமாய்ப்பாடுமவள் தாசிமகள்தாசியென்பார் (௧00௩)
காயமேல்விழியுமுயர் கண்மேல்மனமும்வைத்துக்
காயவபிநயமுங் காட்டுமவளேபரதம் (௧00௪)
பாதாளச்சுருதியங்கம் பாங்காகவேசெய்து
மாதாளஞ்செய்பவனே மத்தளியனென்றிடலாம் (௧00௫)
பலராககீதங்கள் பாங்கானதாளங்கள்
நலமாகப்பாடுமவன் நல்லதொருபாடகனும் (௧00௬)
தாளத்திலேநினைவு தரித்துநடனமிடும்
வாளுற்றசற்பாத்ர மறிபவனேநட்டுவனும் (௧00௭)
தாளலயமார்க்கந் தப்பாமலிங்கிதமாய்
வீணும்பதச்சேவை விழைவோன்பரிசனனும் (௧00௮)
வேசையர்தமில்லம்விட்டு வேறிடமுஞ்சென்றக்கால்
காசுபணமற்பமுமாய்க் கணிசங்குலைந்துவிடும் (௧00௯)

## வேசையர்கள் வரலாறு.

மிக்கவிலைமாதர் வீடுசெந்தைக்கடையாம்
பக்கல்பொதுவம்பலமாம் படுக்கைவீடென்பதுதான் (௧0௧0)
சந்தியிற்பாய்மெத்தையதாந் தண்ணீர்ப்பந்தலதரம்
பந்தமுறுதேகம் படித்துறையதென்றிடலாம் (௧0௧௧)
சூதாடுசோலைதுகில் துடைகள்தண்ணீர்ப்...
மீதிலேகட்டிவைத்த மிக்ககதவிமாம் (௧0௧௨)



MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

மையாடுங்கண்ணியவள் வாரணிந்தகொங்கைரண்டும்
கையாடும்பந்து கடையெனுமிச்சம்பழமாம் (௧0௧௩)
பாகமுறுசெவ்வாய் படிகமதற்கொப்பாகும்
ஏகுமவள்மோகமது எட்டிக்கனியெனலாம் (௧0௧௪)
பாசமுடனிவ்வாறு பாங்குடையார்தீங்குபுரி
வேசையர்மேலாசைகொள்ளல் மேலவர்க்குமேன்மையல்ல ()

**பெண்களால்பங்கமடைந்தவர்.**

சந்திரனுமிந்திரனுந் தன்னுடலிற்பங்கமுற்றார்
சந்ததஞ்சேர்வாலி சடாசூரன்கீசகனும் (௧0௧௬)
எண்ணரியவாழ்வுடைய விராவணனென்பவனும்
பெண்ணாலேபங்கமுற்றுப் பிராணலயமானார்கள் (௧0௧௭)
சுந்தோபசுந்தரெனுஞ் சூரிருவர்களும்
அந்தமிகுமோகினிமேலாசைகொண்டுமாண்டார்கள் (௧0௧௮)
வையகத்திலொப்பில்லா மாபிலவானுமெழில்சேர்
தையலைக்கண்டால் சவுரியமும்மில்லாது (௧0௧௯)
மானார்குணங்குறியிவ் வாறேதெரியாமல்
தானவர்மேல்மோகித்தால் தப்பாமல்துன்பம்வரும் (௧0௨0)

**புருஷன்வாக்கியபரிபாலனஞ்செய்தவர்.**

ஆதியருந்ததிமின் னளாங்கவுசிகையுஞ்
சாதுகுணச்சாலி சந்திரவதியென்பவளும் (௧0௨௧)
உத்தமியில்மிக்காக வோதுநளாகினியும்
பத்தாவின்வாக்கியபரி பாலனமேசெய்தவராம் (௧0௨௨)

**மூன்றுயுகத்திலும்யமனானோர்.**

கிரோதாயுகத்திற் கெடுகாவிரோணுகையாம்
திரேதாயுகத்தினிலே சீதையெனும்பெண்ணாகும் (௧0௨௩)
துன்னுதுவாபரத்திற் துரோபதையேகூற்றவளாம்
இந்நாள்கலியுகத்தி லில்லமெல்லாங்கூற்றவப்பெண் (௧0௨௪)

**பெண்களுக்குச்சுவாதீனமில்லையெனல்.**

பெற்றோர்கள்பேதையிலும் பின்பருவத்திற்புருஷன்
மற்றுவருமூப்பினிலே மைந்தர்களேகாப்பவராம் (௧0௨௫)
மூக்காலும்பெண்ணுக்கு முயற்சியொன்றுமில்லாதால்
மிக்கான்பெண்சென்மம் வீண்சென்மமாகுமென்றார் (௧0௨௬)

புருடனேதெய்வமென்று போற்றுகின்றகற்புடையா
ளரிதானவாண்சென்மத் ததிகமென்றுசொல்லினரோ (க௱உஎ)

பத்தாவேதெய்வமென்று பணிந்தேத்துங்கற்புடையா
ளுற்றமழைபெய்யென் றுரைத்தாலுமாரிபெய்யும் (க௱உஅ)

மெத்தவழகுடனே மேன்மையுள்ளமின்னுளோர்
புத்திரனைப்பெற்றவன்றே போமழகுமேன்மைகளும் (க௱உகூ)

### பெண்கள்வரலாறு.

மேலானகன்னியர்கள் விரகத்திலேயழுந்திக்
கோலமெல்லாஞ்சீரழிந்து குரங்காகாப்பேருமில்லை (க௱ங௦)

சதிராய்த்தன்னில்லம்விட்டுத் தனிவழிபோமின்னார்க்குப்
பதிவிரதாபாகமில்லை பங்கம்வந்துநேரிடுமாம் (க௱ஙக)

சரசகுணமில்லாத தையலைச்சேர்வதிலும்
விளைவாகச்சன்யாச வேஷமுற்றல்நன்றாகும் (க௱ஙஉ)

அன்பில்லாப்பெண்ணின்மே லாசைகொண்டுசேர்வதிலும்
முன்பாகச்சற்குணப்பெண் முலைகண்டாற்போதாதோ (க௱ஙங)

பேரிளம்பெண்கள்பல பேரைப்புணர்வதிலும்
காரிகையாம்வாலையொரு கன்னிதனைச்சேர்தல்நன்று (க௱ஙச)

துற்கந்தம்வீசுமுடல் தோகையரைச்சேர்வதிலும்
நற்கந்தம்வீசுமுடல் நாரியர்கைக்குட்டுநன்றாம். (க௱ஙரு)

பெண்ணொருத்திபேசினாற் பேருலகமும்நடுங்கும்
பெண்ணிருவர்பேசினாற் பெருவானின்மீனுதிரும் (க௱ஙசா)

அலைவாரியுஞ்சுவறு மாயிழையார்மூவருக்குப்
பலபேர்தான்கூடிலென்ன பாடுபடுமோபூமி (க௱ஙஎ)

ஆசைகொண்டாள்போலே யபிநயித்துமேல்விழுந்து
பேசுகின்றவஞ்சப் பிரியமறியாமல் (க௱ஙஅ)

அன்பில்லாவேசைநமக் கன்புள்ளாளென்றெண்ணி
நம்பினவரெல்லாரும் நாயினிலுங்கீழாவார் (க௱ஙகூ)

### கர்மகாண்டம்.

பூதலத்தோர்க்காகப் பொதியைமுனிநாயனுமுன்
காதலுற்றுச்சொன்னகர்ம காண்டத்தியல்புசொல்வாம் (க௱ச௦)

தர்மமில்லாதார்க்குச் சளமாமகாநோயும்
கர்மவியாதிவந்த காரணத்தைச்சொல்லுகிறேன் (க௱சக)

தெய்வவுருவழித்தல், சீவசெந்தைவதைத்தல்,
வைதுதந்தைதாயை மனநோகவேபேசல், (௧0௪உ)
நந்தவனமழித்தல், நாதாக்களைப்பழித்தல்,
நந்தவனத்தில்மல ராதவரும்புகொய்தல், (௧0௪௩)
திட்டமுடனிப்பாவஞ் செய்தகொடியோர்க்குக்
குட்டநோய்வந்து கொடுமைசெய்யுமென்றனரே (௧0௪௪)
நாகமுடனூர்வனங்கள் நல்லபறவைபட்சி
சாகவேகொன்ற சண்டாளரானவர்க்கு (௧0௪௫)
குதிரைவலிகாக்கைவலி குமரகண்டன்முசலி
சதிராகவேவந்து சாருமெனவுரைத்தார் (௧0௪௬)
உத்தமரைப்பழித்து, உதாசினங்கள்பேசுவதும்,
பத்தர்சித்தர்பாவம் பற்றித்தொடர்ந்ததினால் (௧0௪௭)
ஆதிசிவதலங்க ளானதனைப்பழித்துக்
கோதுபடச்சினந்து கொடுங்கோபஞ்செய்வதினால் (௧0௪அ)
கற்புடையமின்னார்மேற் காதலதுகொண்டதினால்
தப்பிதமாய்ப்பித்தந் தலைக்கேறியேபிதற்றி (௧0௪௯).
பண்பாய்லகிரி பதினெட்டுமெய்துமென்று
முன்பாகத்தட்சணா மூர்த்திமொழிந்தனரே (௧0௫0)
பச்சைமரங்கள்தனைப் பட்டைவெட்டியேயுரித்தும்
மிச்சந்தளிர்கொழுந்து வேர்முதலாய்வெட்டுவதும் (௧0௫௧)
குளிர்ந்தமரத்திலைகாய் கொம்புதனைமுறித்தல்
அழுந்தமலராப்பூவை யனவரதங்கிள்ளினதால் (௧0௫உ)
மண்டைக்கரப்பன் வாயுவொருத்தலைநோய்
மண்டையிலேகுத்து மகத்தானபீனசங்கள் (௧0௫௩)
மாறுய்க்கபாலத்தின் வாய்வானநோய்தானும்
வீறுய்வந்தெய்துமென்று விளம்பினார்மாமுனியும் (௧0௫௪)
வித்தானதையழித்து மேலுமதைத்தின்றதனால்
பத்தியுடன்கன்றுக்குப் பால்விடாத்தோஷமதால் (௧0௫௫)
பாலகரையழித்துப் பச்சைமரப்பிஞ்சுகளைச்
சாலவிளம்பயிர்கள் தன்னையழித்ததினால் (௧0௫௬)
'மானார்க்குக்கெர்ப்பநோய் வருமவர்க்குமைந்தரில்லை
ஆனாலும்பாவிகள்தா னந்தரங்கஞ்சொல்லவொண்ணு (௧0௫௭)

சூரியனைத்தோத்தரியாத் தோஷமதனாலும்
நீரினுயிரைப்பிடித்து நெருப்பிலிட்டுச்சுட்டதினால் (௧௦௫௮)
மடிப்பாய்ப்பிராணிகளை மாயவேசெய்வதினால்
துடிக்கவுயிரோடதனைச் சுடுமெணலிற்போடுவதால் (௧௦௫௯)
நல்லநிழல்மரத்தை நாருரித்துக்கொண்டதினால்
வல்லமையாய்ப்பச்சை மரங்கள்தனைவெட்டினதால் (௧௦௬௦)
பசித்தோருரிக்கவதைப் பாராமலுண்டதினால்
நிசமாய்ச்சுரதோஷம் நேருமென்றேயுரைத்தார் (௧௦௬௧)
மாதாபிதாவை மனநோகச்செய்ததினால்
வேதாந்தசற்குருவை மெய்நோகவைததினால் (௧௦௬௨)
வீம்பானபேச்சுகளும் விசுவாசபாதகமும்
நாம்பெரியோரென்றுபல ரானவரையும்பழித்தல் (௧௦௬௩)
தெய்வநிலையழித்தோர் தினந்தினமும்பொய்யுரைத்தோர்
வையகத்திற்பாண்டுநோய் வந்தேமெலிந்திடுவார் (௧௦௬௪)
ஊனைதைத்தின்ன உயிர்வதைகள்செய்ததினால்
மானார்கற்பழித்துப்பூ மரங்கள்தனைவெட்டினதால் (௧௦௬௫)
புண்ணியந்தான்செய்யாமல் புண்ணியங்களைக்கெடுத்துந்
தண்ணீர்குளமேரி தன்னையுடைத்துவிட்டும் (௧௦௬௬)
நிறுப்பதளப்பதுவும் நிரைகள்குறையவிற்றும்
மறுப்படாநீரில் மலமூத்திரங்கள்விட்டும் (௧௦௬௭)
துராகதமாயிவ்வாறு துன்பங்கள்செய்தவர்கள்
கிராணிக்கழிச்சல்வந்து கெடுவாரெனவுரைத்தா (௧௦௬௮)
பொல்லாக்கடுங்கோபர் பொய்யேமிருந்தவர்க்குஞ்
சொல்லுவதைப்பின்மறுத்துத் தூஷணித்துப்பேசுபவர் ()
உண்டுமிகப்பேச்சுகளால் ஊராரைவைதவர்க்கும்
திண்டுமிண்டாய்ச்சிவ செந்தைநஞ்சாற்கொன்றவர்க்கும் ()
கன்னத்திற்புத்து கன்றேசிவிப்புருதி
கன்னத்திற்சூலை கடிதானபல்லரணை (௧௦௭௧)
தந்தரோகங்கள் சகிக்கரியரவாய்ப்புத்து
தந்தரோகஞ்சூலை தப்பாமல்வந்திடுமாம் (௧௦௭௨)
சற்குருவைத்தூஷணித்தோர் தன்மையில்லாக்கோபத்தால்
முக்கியஞ்சேர்பாதையிலே முள்ளதனைப்போட்டவர்க்கும் ()

பச்சைமரமதனைப் பங்கமுறவெட்டினர்க்கும்
உச்சிதமாய்ப்பூவிலைகா யுதிரவடித்தவர்க்கும் (க0எச)
வண்கெடிகரப்பன் மகத்தானகுட்டநோய்
என்றுமிவர்கட்குவந் தெய்துமென்றார்மாமுனியும் (க0எரு)
பத்தர்சிவசித்தர் பரமசிவயோகிகளைச்
சித்தங்கலங்கவே செய்தகொடும்பாவிகட்கும் (க0எசு)
வில்லாலுமம்பாலும் வெடிமருந்துக்குண்டாலும்
கல்லாலும்பொல்லாக் கபடத்தாற்சீவசெந்தைக் (க0எஎ)
கொன்றகொடும்பாவிகட்குங் கொடிதானமார்பாணி
கண்டமாலைபிளவை கழல்வாதம்வந்திடுமாம் (க0எஅ)
காண்கவிசையாப்பெண்ணைக் கவனித்துப்பார்த்தவர்க்கும்
ஏங்கியவர்போகத்தி லின்பமுற்றபாவிகட்கும் (க0எகூ)
மின்னாளைக்கண்டு விலகாமற்போனவர்க்கும்
பின்னவளைத்தூஷணமாய்ப் பேசிப்பழித்தவர்க்கும் (க0அ0)
தப்பிதமதாகப்பொய்ச் சத்தியங்கள்செய்தவர்க்கும்
மெய்ப்பானதெய்வத்தை மேவிநிந்தைசெய்தவர்க்கும் (க0அக)
பலதரமுமுயிர்வதைகள் பண்ணுவதைக்கண்டிருந்தும்
விலகாமற்பார்த்திருந்த வேட்டைநாயானவர்க்கும் (க0அஉ)
கண்ணில்வியாதிவருங் கண்ணொளிவுதான்மறையும்
தொண்ணூற்றியாறுநோய் தொடருமென்றார்மாமுனியும் ()
பேறானதேதுமுயிர்ப் பிராணிகளைத்தான்பிடித்து
கூறாகத்தூக்கிவைத்துக் கொண்டகொடும்பாவிகட்கும் (க0அச)
கோவதனைக்கொன்றவர்க்கும் கொடிதானகண்ணிவைத்துச்
சீவசெந்தைநீர்த்துறையிற் சேதமேசெய்தவர்க்கும் (க0அரு)
அலறும்பிராணிகளை யமுக்கியதனுடைய
தலையறுத்துமிக்ககுடல் தன்னையெடுத்தவர்க்கும் (க0அசு)
ஈனமிரக்கமற்ற விராட்சதனையொத்தவர்க்கும்
ஆனந்தவாய்வுவந் தழிக்குமெனவுரைத்தார் (க0அஎ)
திருந்தவேமுற்பிறப்பிற் சேயிழைமார்தங்களுக்கு
மருந்தீடுசெய்து மயக்கிக்கற்பழித்தவர்மேல் (க0அஅ)
மயலானபெண்போலே மறுசென்மத்தினிலவரும்
சயரோகமாகவந்து சாவாரெனவுரைத்தார் (க0அகூ)

23480



மார்க்கமதில்நிற்கு மரங்கள்தனைவெட்டினவர்
பூக்கமழுநல்மரத்தின் புறத்தொலியைத்தானுரித்தோர் (௧0௯0)
வீணிலேபூடுகளை விருட்சங்களைமுறித்தோர்
ஊனுகின்றகால்முறித்தே யோடாமற்செய்தவர்கள் (௧0௯௧)
தம்பமாய்ச்சீவசெந்தின் தந்தங்களையுடைத்தும்
கொம்புகளைமுறித்துங் கொடும்பாவஞ்செய்தவர்க்கு (௧0௯௨)
வாதங்கள்வந்து வழங்காமற்கால்கைகள்
கூதலுடனளிருங் குளிரும்வருமென்றனரே (௧0௯௩)
பலபேர்வயிறெரியப் பண்ணிவைத்தபாவிகட்கும்
நலஞ்சேர்பெரியோரை நடுநடுங்கப்பேசினர்க்கும் (௧0௯௪)
மாறுமனக்கசடு வைத்துவெகுபேரைச்
சீரழிவுசெய்தவர்க்குஞ் சிலர்பசிக்கவுண்டவர்க்கும் (௧0௯௫)
சண்டாளதத்துவங்கள் சதாகாலஞ்செய்தவர்க்கும்
மிண்டானகுன்ம வியாதிவந்துசூழுமென்றார் (௧0௯௬)
பட்சிமிருகங்கள் பாம்புமுதலானதனை
மெச்சிப்பிடித்தடைத்தால் விலங்கவர்க்கேயெய்துமென்றார் ()
சாலப்பலவுயிரைத் தண்ணீரினண்டுகளைக்
காலைமுறித்தவர்க்குக் கால்கைமுடங்குமென்றார் (௧0௯௮)

ஒப்பனையானவை.

வெடுக்கென்றசொல்லாளை, மேலோரகத்தில்வைத்தல்,
மடத்தையுங்கட்டியதில் வன்குரங்கைவைத்தமொப்பாம், ()
எண்ணுமல்வஞ்சகப்பெண் ணின்சொல்லைநிச்சயித்தல்,
மண்குதிரைதன்னைநம்பி, மலையாற்றிற்சென்றதொக்கும். (௧௧00)
அகாமியமுள்ளாரெனினு மறிவாளரைச்சேர்ந்தால்
மகாமேருவைச்சேர்ந்த மானதனையேநிகர்ப்பர் (௧௧0௧)
தன்னவரேயாறுனுஞ் சார்பறிந்துசேர்தல்நன்று
துன்னுசுடர்விளக்கெனினுந் தூண்டுகோல்வேணுமதாம். ()
கடவுள்விதியைவெல்லக் கடவரெவராருமில்லை,
மடவிலேயிட்டாக்கால் குடலிலேதங்காதே. (௧௧0௩)
நிலையாம்நிமலனடி நேர்ந்தார்க்குறையுளதோ,
மலைமேலிருப்பவனை, வந்துபன்றிபாய்ந்திடுமோ (௧௧0௪)
பெரியோர்திருவுளந்தான் பேதித்தாலார்தீர்ப்பார்
கரியமலைசாய்ந்தால்மண் கட்டியதுதாங்கிடுமோ (௧௧0௫)

சார்பு = சேர்வை.

கடந்தெவருஞ்செல்லாத காலம்வெல்லப்போகாது
உடைந்தசங்கில்சற்றுமொரு வோசைபரியாதே (௧௧0௬)
மட்டிகட்குநல்லபுத்தி வர்ணித்துச்சொன்னாலும்,
இட்டமுற்றதன்குணம்போ யெய்தாதுநற்குணந்தான் (௧௧0எ)
கடையரால்மேலோர்க்குக் கருமங்களும்விழலாம்
முடப்புல்லுந்தண்ணீரில் முக்கலத்தையேயழிக்கும் (௧௧0அ)
வலியோரைச்சார்ந்தவர்கள் மற்றெவர்க்குமஞ்சுவரோ
மலையேதான்லெக்கானல் குருடனெய்யமாட்டானே (௧௧0௯)
தலையானோரைச்சேர்ந்தால் தாழ்வில்லைத்தாழ்வுவந்தால்
புலிக்கடுமைப்பட்டுங் கறிக்காசைப்பட்டதொக்கும் (௧௧௧0)
மெலிவாகிலுமேலோர் மேற்செயலேசெய்வார்கள்
புலிபசித்தாலெப்போதும் புல்லருந்தமாட்டாதே (௧௧௧௧)
விற்பனமாமேலோர்கள் மெலிவாகிப்போகிலென்ன
குப்பையிலேபோட்டாலுங் குன்றிமணிமங்காதே (௧௧௧௨)
நேசருடன்பிறந்தோ ரிரண்டுபேர்வேறுபட்டால்
ஊசியிலேகப்பாகி நூல்நுழையாவாறுகும் (௧௧௧௩)
ஏர்க்காதவைசெய்தா லிகழ்ச்சியென்றும்போகாது
ஊர்வாயைமூட வுலைமூடிதானுமுண்டோ (௧௧௧௪)
எட்டாக்கனியதனுக் கேராசைப்பட்டுமென்ன
தொட்டுக்காட்டாதவித்தை சொட்டுப்போட்டால்வருமோ ()
நாட்டுச்சுரைக்காய்கறிக்கு நாட்டிலுலெய்தும்து
ஏட்டுச்சுரைக்காய்கறிக் கெய்தாதொருநாளும் (௧௧௧௬)
மாறுபாட்டுக்காரன் வாக்குநிசமென்றிருத்தல்,
ஏறவிட்டேயேணிதனை யெடுத்துவிட்டவாறுகும் (௧௧௧எ)
வாழ்வுடையோர்முன்னே வறுமையுற்றோர்சொல்நிலையா,
ஏழைசொல்லம்பலமு மேறாதுகண்டீரே (௧௧௧அ)
கொடையாளியேவறுமைக் குள்ளாகினுமீவன்
கடுகுசிறுத்தாலுங் காரமதுபோகாதே (௧௧௧௯)
விற்பனக்குருமூடன் மேலாம்பரமானல்
குப்பையுயர்ந்து கோபுரமுந்தாழ்ந்ததொக்கும் (௧௧௨0)
இட்டமுறவாழ்ந்தோர்க் கியல்புதப்புங்காலங்
கெட்டவர்க்குற்றார் கிளைதனிலுமில்லையில்லை (௧௧௨௧)

இணக்கமுடனல்லபுத்தி யெவளவுங்கேளார்க்குரைத்தல்
பணத்துக்கோரம்புகொண்டு பாழிலெய்தவாறுகும் (௧௧௨௨)

காலிபயிர்தின்னுமற் காப்பதுவேவேலியுமாம்
வேலிபயிர்தின்றால் விளைவதொருபோதுமில்லை (௧௧௨௩)

நிலையானகாரியமு நில்லாதுமந்திரத்தால்
கலைப்பார்கலைத்தாக்கால் முலைப்பால்மருந்தலவோ (௧௧௨௪)

### கூடாவொழுக்கமகளிர்.

பார்ப்பளவிலேதிரும்பிப் பாராளுரைத்தமொழி
கேள்ப்பாள் மறுவசன மேதுங்கிளத்தாளாம் (௧௧௨௫)

கள்ளன்போல்மற்கட்டிக் கவிழ்ந்தாலுமல்புரிவாள்
உள்ளன்புக்கார ருடன்போயுஞ்சண்டைசெய்வாள் (௧௧௨௬)

ஆண்டையுடனுபரண மடைக்காய்முதல்கொடுத்தால்
நாட்டாள்புறங்கையி னாலதனைத்தட்டுவளாம் (௧௧௨௭)

அங்கையாற்றொட்டா லாடரவம்போற்சீறி
சங்கைகெடப்பேசிச் சத்துருவைப்போல்பார்ப்பாள் (௧௧௨௮)

அயலாருடனேவிளை யாடியேகூடுவளாம்
மயலாய்க்கணவன்பிடித்து மருவச்சரசஞ்செய்தால் (௧௧௨௯)

மெய்யதிலேநோய்கள் மிகவெனவுந்தர்க்கமிட்டுப்
பொய்யாணையிட்டுப் புறங்காட்டியேபடுப்பாள் (௧௧௩௦)

முந்தியுறங்கிப்பெரு மூச்சுவிட்டெத்தனையோ
சந்தோஷஞ்சொன்னாலுஞ் சற்றேனுமேயிரங்காள் (௧௧௩௧)

ஆறிடத்திற்போடாவென் றவன்கொடுப்பதையெறிந்து
சீறிச்சினந்து தெய்வமேயென்றழுவாள் (௧௧௩௨)

நாடானதிற்பெண்கள் நான்குவகைச்சாதியிலும்
கூடாவொழுக்கக் குறைய்யிதுவாமென்றனரோ (௧௧௩௩)

### அன்புற்றமகளிர்.

ஆடவர்களெந்நாளு மாசைகொண்டபெண்குறிப்புங்
கூடாவொழுக்கக் குறிப்பதனைச்சொல்லுகிறோம் (௧௧௩௪)

பலநாளுமாடவனைப் பார்த்தகண்ணாயிருப்பாள்
தலைவனவளைப்பார்க்கில் தலைகவிழ்ந்துமேசிரிப்பாள் (௧௧௩௫)

உள்ளன்புகாட்டா ளோங்கிப்பெருமூச்சுவிடாள்
தள்ளாக்குழந்தை தனைத்தழுவிமுத்தமிடாள் (௧௧௩௬)

பாங்கியைத்தழுவாள் பாங்கனைப்பார்த்துநகைத்துப்
பாங்காய்த்தலையசைத்துப் பல்லைக்கடித்துறுக்கி (ககஅஎ)
பிறரெவரையும்நிறுத்திப் பேசுவதுபோல்பேசிப்
பிறநால்போய்மூக்கைப்பிசைந்துமே தும்மல்தும்மி (ககஅஅ)
தலைவனன்புவைத்தாலுந் தன்னுடன்பொய்யனென்று
தலைவன்மொழிகேட்டுமவன் தன்தொழிலையும்மகிழ்ந்து (ககஅகூ)
ஆடவன்வீட்டுக் கடிக்கடிதான்போதல்வரல்
ஆடவனைக்கண்டா லறக்கனிசினாலுதலும் (ககசுO)
கொம்பனையார்க்குள்ளன்பு குறிப்பறிதலாகுமென்று
முன்பாகநூலுகளில் முன்னோருரைத்தனரே (ககசுக)

**பெண்களுடைய தத்துவம் பத்துக்கும் விபரம்.**

மிக்கவின்னூலில் மேன்மைகுறிப்பாய
தக்கதொருபெண்கள்பத்துத் தத்துவத்தைச்சொல்லுகிறோம். ()
பொன்னிறமும்மல்லிகையின் பூமணமுந்தாமரையின்
வன்னமலர்முகமு மாசற்றமூர்தமொழி (ககசுங)
தனதானியவாழ்வுஞ் சார்ந்தசனசேகரமும்
இனமோடும்வாழ்வா ளிவள்தெய்வதத்துவமாம் (ககசுச)
இரக்கம்வணக்க மின்பமுமுறுதேகம்
சிறக்கவேதானதர்மந் தெய்வவிசுவாசம் (ககசுரு)
வன்கொலைகண்டஞ்சுமவள் மானிடர்கள்தத்துவமாம்
முன்சொல்லும்நூலதனில் முறையிலுரைத்தனரே (ககசுசு)
நித்திரையேமிருத்தல்நெடுமூச்சுசோம்பல்களும்
மெத்தவேகொட்டாவி வீடெல்லாம்போய்த்திரிதல் (ககசுஎ)
சுத்தமில்லாத்தேகஞ் சுசியில்லாப்போஜனமும்
நத்துமின்றமின்னாள் நரகதத்துவமாகும். (ககசுஅ)
ஆற்றில்குளத்தி லலைகடலிலேமலையி
லேற்றமிகுபெண்களுட னென்றும்விளையாடமனம் (ககசுகூ)
நாணமில்லாமையெந் நாளுங்கொடுங்கோபம்
வாணுதலாளேயியக்க மாதென்றுசொல்லுவதாம் (ககருO)
பரிமளசுகந்தாதி பகரிரத்தினவாபரணம்
சரசசங்கீதவித்தை தன்னில்வெகுவிருப்பம் (ககருக)
சாந்ததினமுந் தர்மசிந்தைநகற்புடையாள்
காந்தருவதத்துவத்தின் கன்னியென்றுசொல்லிடலாம் (ககருஉ)

வெட்கமில்லாமை மிருந்தபலபோசனமுந்
தூற்கந்தவாசந் தூடியானவார்த்தைகளும் (௧௧௫௩)
உட்டினசரீர முடையழுக்குமாமிசமு
முடைமதுவுண்ணல் முறைமையில்லாத்துர்நடத்தை (௧௧௫௪)
நித்திரையில்லாமையிவை நேர்ந்தபெண்ணுமேபேயின்
றத்துவமாமென்று சாற்றினார்முன்னோர்கள் (௧௧௫௫)
அக்கினிக்கண்ணு மழகுசற்றுமில்லாமை
வக்கணையாயாடவனை வலியப்பிடித்திழுத்தல் (௧௧௫௬)
மாறுபாடானமன மலனுக்கட்டிப்புணரும்
நாரியவள்தானே ராட்சதரின்றத்துவமாம் (௧௧௫௭)
ஆரிடத்திலானாலு மன்புசற்றுமில்லாமை
மாறிமாறிப்பார்த்தல் மயிர்நூவுந்தூறுதலை (௧௧௫௮)
வேகமுறும்பசியு மிருந்தபயமுடையாள்
காகத்தின்றத்துவத்தின் கன்னியவளாகுமென்றார் (௧௧௫௯)
கூடுகின்றவாடவனைக் கூர்நகத்தாற்பல்லதனால்
நாடிக்கடிப்பதுவு நாணஞ்சற்றில்லாமை (௧௧௬0)
நிறமதுவும்பங்கமதாய் நேத்திரத்தால்மருட்டல்
குரங்கினுடதத்துவத்தின் கொம்பனையாளாகுமென்றார் (௧௧௬௧)
திண்டுமிண்டானசொல் தேகசுத்தமில்லாமை
வண்டிவெடித்தகுரல் மல்னுக்கட்டிப்புணர்தல் (௧௧௬௨)
மழுமாரிகண்டவனை வலியப்பிடித்திழுப்பாள்
கழுதையின்றத்துவத்தின் கன்னியவளாகுமென்றார் (௧௧௬௩)
வையகத்திலேமேலாமணவாளன்சொன்னபடி
மொய்குழலார்சாதி மூன்றின்குறியுரைப்போம் (௧௧௬௪)
மானைநிகர்த்தவிழி, வனசமலர்முகமுந்,
தேனைநிகர்த்தமொழி, தேமற்படர்ந்தவுடல், (௧௧௬௫)
சுருண்டுநெரிந்தகுழல், தும்பிப்பிடிநடையும்,
திரண்ட "கொவ்வைக்கனிவாய்," செண்பகப்பூத்தேகமுமாம், ( )
மின்னிடையுந்தென்ன மிளம்பாளைவாசமுமாய்
அன்னநடையு, மழகில்ரதியெனவும், (௧௧௬௭)
வட்டமாய்த்தங்கநிற மானவிளமார்பும்,
இட்டமுறுகலவிக் கிசைந்திட்டசற்குணமும், (௧௧௬௮)
தாக்கமிடுமுன்கோபி சாப்பாடுமெற்பமதாகும்,
இக்குறியின்மாதவளு மின்பமுளமடந்தை (௧௧௬௯)

### பேட்டைக்குதிரைச்சாதி.

உயர்ந்துகுளிர்ந்தவுச்சி யுட்குழிந்தகன்றகண்கள்
உயர்ந்துபருத்தகொங்கை யுதடுபருத்திருக்கும் (ககஎ0)
சாலப்பருத்தமயிர் தந்தமோநீண்டிருக்கும்
தாலவிடைபருத்துத் தாழிபோலேவயிறும் (ககஎக)
அடக்கமொன்றுமில்லாமை யல்குல்பணைத்திருக்கும
மடக்கொடியாள்பேசுகின்ற வாய்மைகுளறுதலாம் (ககஎஉ)
போசனத்திலேபிரியம் புணர்ந்தவர்மேலும்பிரியம்
வீசம்பூலால்நாற்ற மிரவுபகல்நித்திரையும் (ககஎங)
தீராவெறுப்புஞ் சிவந்தபருவுடலுங்
கூறுனமாதுபெட்டைக் குதிரையென்றுசொல்லினரோ (ககஎச)

### பிடியானைச்சாதி.

சாலபபருததமெற்றி, தாடைசெவிநாசி
காலுடனேகைதோளுங் கழுத்துமிகப்பருத்து, (ககஎரு)
சுருண்டுசிவந்தமயிர், தொங்குமதரமுமா
முரண்டுநிதஞ்சண்டை, மொழியுமிடிபோலாய், (ககஎசு)
அல்லும்பகல்கலவி யானதிலேசிந்தையுமாய்ப்
பல்லுமிடையுளதாய்ப் பாவத்துக்கஞ்சாமை (ககஎஎ)
யார்க்குமனுகூலி, யானைமதநாறி
பார்க்கும்பனிரண்டு அங்குலமாமல்குலது, (ககஎஅ)
விடியளவுஞ்சண்டைவிடாள், வெட்கத்துக்கஞ்சாளாம்,
பிடியானைச்சாதியென்று பேசினார்முன்னூலோர், (ககஅகூ)
இன்னம்சிலநீதி யெடுத்துமேகூறவென்றால்,
வன்னமாயிந்நூல் வளருமென்மூதேன். (ககஅ0)

### வாழி.

ஐங்கரனும்வாழி, ஆறுமுகன்வாழி,
மங்கைபாகன்வாழி, மாயன்பிரமன்வாழி, (ககஅக)
தூயமுனிவோர்வாழி, சுத்தசைவர்வாழி,
நேயசெங்கோல்செலுத்தும் நிருபர்புகழ்வாழி, (ககஅஉ)
கற்புடையமாதர் கவிவாணர்தாம்வாழி,
விற்பனமாயிதைப்படிக்கும் வித்தகரும்வாழியவே. (ககஅங)

மனுநீதிகாதல்
முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS